'தமிழன்' பத்திரிகை
வீடுகளுக்கு
நேரடியாக
விநியோகிக்கப்படும்.
QR ஐ ஸ்கேன் செய்து
தகவல்களை
பெற்றுக்கொள்ளுங்கள்.

Follow us

# தமிழன்

THAMILAN தමිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 22 சோபகிருது வருடம், ஆடி மாதம் 05ஆம் திகதி வெள்ளிக்கிழமை
(21.07.2023) ஹிஜ்ரி 1445, முஹர்ரம் - 02, 0115 886187 - பக்கங்கள் 12

விலை ரூ.50

## எரிபொருள் கோட்டா ஒகஸ்ட்டில் அதிகரிப்பு

நா. தினுஷா

பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் முன்னெடுக்கப்பட்டு வரும் மதிப்பீட்டு நடவடிக்கைகளை தொடர்ந்து, அடுத்த மாதம் முதல் எரிபொருள் கோட்டா மேலும் அதிகரிக்கப்படும் என்று மின்சக்தி மற்றும்... 02 பக்கம்

# கனேடிய தூதுவரை வெளியேற்றுக!



## சரத் வீரசேகர சபையில் கோரிக்கை

## அமெரிக்கத் தூதுவர் மீதும் பாய்ச்சல்

நமது நிருபர்

குருந்தூர் மலையில் பழைமையான விகாரையை அழித்து சிவலிங்க வழிபாட்டை மேற்கொள்ள உதவியாக இருந்த தமிழ் அரசியல் பிரமுகர்களை சந்தித்து நாட்டின் சிங்கள பௌத்த மக்களுக்கு மாபெரும் அநீதியை... 02 பக்கம்

## இந்தியாவுக்கு பயணமானார் ஜனாதிபதி

பதில் அமைச்சர்கள் நியமனம்

02பக்கம்



இந்தியாவுக்கு இரண்டு நாள் உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை இந்திய வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் வி. முரளிதரன் வரவேற்றார்.

## உயர்தரப் பரீட்சைக்கு தோற்ற 40 வீத வருகை அவசியம்

கல்வியமைச்சர் சுசில் அறிவிப்பு



நா. தினுஷா

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு தோற்றவிருக்கும் மாணவர்களின் பாடசாலை வருகை அதிகபட்சம் 40 சதவீதமாக இருக்கவேண்டும் என்றும் உயர்தரப் பரீட்சை தொடர்பில் கல்விப் பணிப்பாளர்கள் உள்ளிட்ட நிர்வாகப் பிரிவினருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள சுற்றறிக்கை திருத்தியமைக்கப்பட்டுள்ளதாகவும் கல்வியமைச்சர்... 02 பக்கம்

கமெண்ட் கந்தர்...



கனேடிய தூதுவரை வெளியேற்றி.. அமெரிக்க தூதுவரின் வாயடைச்சா எல்லா பிரச்சினையும் தீர்ந்திடும் என்னங்கோ..!

## லிட்ரோ வருமானம் திரைசேறிக்கு

ரூ.1.5 பில்லியனை வழங்கியது

லிட்ரோ எரிவாயு நிறுவனத்துக்கு கடந்த சில மாதங்களாக கிடைக்கப்பெற்ற வருமானத்தில் 1.5 பில்லியன் ரூபாவை திரைசேறிக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக அந் நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (20) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பின்போதே இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,... » 02 பக்கம்

## தனியார்மயமாக்கலை எதிர்த்த ரெலிகொம் தலைவர் பதவிநீக்கம்

ஸ்ரீ லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் புதிய தலைவராக ரெயாஸ் மிஹிலார் நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கு முன்னர் தலைவராக இருந்த ரொஹான் பெர்னாண்டோ அந்தப் பதவியிலிருந்து நீக்கப்பட்டதை அடுத்தே அவர் அப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார். ரெலிகொம் நிறுவனத்தை தனியார் மயப்படுத்துவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தமையின் காரணமாகவே ரொஹான் பெர்னாண்டோ பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் சபை தன்னை... 02 பக்கம்

## பதவி நீக்கத்துக்கு சூழ்ச்சியே காரணம்

ரொஹான் பெர்னாண்டோ விளக்கம்



படப்பிடிப்பு – எஷான் தசநாயக்க

நா. தினுஷா

"ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்தை விற்பனை செய்வது தொடர்பில் இதுவரை காலமும் நான் எவ்வித கருத்தையும் முன்வைத்ததில்லை. இந்த நிறுவனத்தை விற்கும் நோக்கத்திலேயே இந்த பதவி மாற்றம் இடம்பெற்றிருக்கலாம் என்றே நான் கருதுகிறேன். ஒருவேளை அவர்களின் இந்தத் திட்டத்துக்கு நான் தடையாக இருந்திருக்கலாம். 02 பக்கம்

## இலங்கைத் தமிழர்களின் கோரிக்கையை நிறைவேற்றுக!

பிரதமர் மோடிக்கு தமிழக முதல்வர் கடிதம்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தியாவுக்கு பயணமாகியுள்ள நிலையில், இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாத்திடவும் இலங்கையில் வாழும் தமிழ் மக்களின் கோரிக்கைகளை நிறைவேற்றவும் அவர்களது உரிமைகள் மற்றும் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்திடவும் வலியுறுத்திட வேண்டும் என பிரதமர் நரேந்திர மோடிக்கு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். 02 பக்கம்

## கெஹேலியவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை

கையொப்பம் திரட்டிய எதிர்க்கட்சி



பொறுப்பற்ற முறையில் தரமற்ற மருந்துகள் மற்றும் சத்திர சிகிச்சை உபகரணங்களை இறக்குமதி செய்து,... 02 பக்கம்

## டில்மா நிறுவுனர் காலமானார்



இலங்கை தேயிலை உற்பத்தியை சர்வதேசத்துக்கு கொண்டு சென்ற, 'டில்மா' தேயிலை உற்பத்தி நிறுவனத்தின் நிறுவுனர், மெரில் ஜே.பெர்னாண்டோ காலமானார்.

கொழும்பில், நேற்று (20) காலை அவர் உயிரிழந்துள்ளதாக குடும்ப உறுப்பினர்கள் தெரிவித்துள்ளனர்.

1930ஆம் ஆண்டு மே மாதம் 06ஆம் திகதி நீர்கொழும்பு, பல்லன்சேனவில் பிறந்த மெரில் ஜோசப் பெர்னாண்டோ, உயிர் நீத்தபோது அவருக்கு 93 வயதாகும்.

1950ஆம் ஆண்டு காலப்பகுதியில் இரசாயன பகுப்பாய்வாளராக தனது தொழிற்றுறையை ஆரம்பித்த மெரில் பெர்னாண்டோ, பின்னர் தேயிலை தோட்ட உரிமையாளராகவும் திகழ்ந்தார். 1985ஆம் ஆண்டு 'தி டில்மா' என்ற நாமத்தில் இலங்கையின் தேயிலையை சர்வதேச சந்தைக்கு கொண்டுச் சென்று, நாட்டின் தேயிலை தொழிற்றுறையை புதிய பாதையில் கொண்டுசெல்ல அவர்... 02 பக்கம்



உஷ்

ஜனாதிபதி ரணில் இந்தியா செல்ல விமான நிலையம் புறப்படும்போது தரைவழியாகவே செல்லவிருந்தார்.

ஆனால் விசேட பாதுகாப்பு காரணங்களால் அவர் கொழும்பில் இருந்து விமானப்படை ஹெலிகொப்டர் மூலம் கட்டுநாயக்க விமான நிலையம் அழைத்துச் செல்லப்பட்டாராம்..!

## சிசேரியன் அறுவை சிகிச்சைகள் நிறுத்தம்

களுத்துறை வைத்தியசாலை தொடர்பில் சஜித் சபையில் சுட்டிக்காட்டு



களுத்துறை போதனா வைத்தியசாலையில் கர்ப்பிணித் தாய்மார்களுக்கான சிசேரியன் அறுவை சிகிச்சைகள் நிறுத்தப்பட்டுள்ளமைக்கு அரசாங்கம் பொறுப்புக் கூற வேண்டுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச பாராளுமன்றத்தில் நேற்று (20) தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது,... 02 பக்கம்

## மருந்து ஒவ்வாமையால் கேகாலையிலும் நோயாளி மரணம்

கே. சுபானி

பாவனையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டதாக தெரிவிக்கப்படும் Cefriaxone எனப்படும் நுண்ணுயிர்க்கொல்லி மருந்து வழங்கப்பட்டதையடுத்து ஏற்பட்ட ஒவ்வாமை காரணமாக கேகாலை வைத்தியசாலையில் சிகிச்சைப் பெற்றுவந்த நோயாளியொருவர் உயிரிழந்துள்ளார்.

பிரேத பரிசோதனைகள் நேற்றுமுன்தினம் (19) மேற்கொள்ளப்பட்ட நிலையில், உயிரிழந்தவரின் மரணத்துக்கான காரணங்களில் குறித்த நுண்ணுயிர்க்கொல்லி மருந்தும்... 02 பக்கம்

## கனேடிய...

இழைத்த கனேடிய உயர்ஸ்தானிகரை உடனடியாக நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டுமென பாராளுமன்றத்தில் வலியுறுத்திக் கூறிய ஆளுங்கட்சி எம்.பி. சரத் வீரசேகர, அமெரிக்கத் தூதுவர் தமிழ்த் தலைமைகளை சந்தித்தமையை வன்மையாகக் கண்டித்தார்.

மத்திய வங்கி சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீடு மீதான விவாதத்தில் நேற்று (20) கலந்துகொண்டு உரை நிகழ்த்தும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சரத் வீரசேகர எம்.பி. அங்கு மேலும் தெரிவித்ததாவது,

நாடு பொருளாதார ரீதியாக பின்னடைவை சந்தித்திருக்கும் சூழ்நிலையில் தமிழ் அரசியல்வாதிகள் அதிகாரப் பகிர்வை வழங்குமாறும் 13 ஆவது திருத்தச் சட்டத்தை அமுல்படுத்துமாறும் வலியுறுத்திவருகிறார்கள். அவர்கள் நாட்டை உண்மையாக நேசிப்பவர்களாக இருந்தால் அவ்வாறான செயற்பாடுகளை முன்னெடுக்க மாட்டார்கள். இதனை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு ஒட்டுமொத்த தமிழ் மக்களையும் பிரதிநிதித்துவப்படுத்துவதில்லை. அவர்கள் பொதுத் தேர்தலில் மூன்று இலட்சத்து 27 ஆயிரத்து 168 வாக்குகளை மாத்திரமே பெற்றுக்கொண்டார்கள். வடக்கில் சனத்தொகையுடன் ஒப்பிடும்போது சுமார் 30 வீதமான வாக்குகளையே அவர்கள் பெற்றுக்கொண்டுள்ளார்கள்.

ஆதலால் தமிழ் மக்களின் தேவைகள் அனைத்தும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அவசியமானவை எனக் கூற முடியாது. அவர்கள் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்துகிறார்கள் என்றால் 22 தேர்தல் மாவட்டங்களில் ஐந்தில் மாத்திரமே போட்டியிடுவதற்கான காரணம் என்ன?

காணி அல்லது ஏனைய வரப்பிரசாதங்கள் வழங்கப்படுமானால் தனியொரு பிரதேசத்துக்கு மாத்திரம் வழங்க முடியாது. அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்கப்பட வேண்டும்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பு கோருவது போன்று நாட்டைப் பிரிப்பதற்கு நாம் ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். இந்தியாவாலேயே 13 ஆவது திருத்தச் சட்டம் வலுக்கட்டாயமாக எமது நாட்டுக்கு திணிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் அமைப்பின் அரசியல் பிரிவாகவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இயங்கி வருகிறது. ஜனாதிபதியை சந்தித்து இல்லாத பிரச்சினையை உருவாக்க முயற்சிக்க வேண்டாமென நான் தமிழ்த் தேசிய கூட்டமைப்பிடம் கேட்டுக்கொள்கிறேன்.

கனேடிய உயர்ஸ்தானிகர், அமெரிக்கத் தூதுவர் ஆகியோர் எமது நாட்டின் உள்விவகாரங்களில் தலையிடுகிறார்கள். கனேடிய உயர்ஸ்தானிகர் நேற்று (நேற்றுமுன்தினம்) வடக்குக்கு சென்று குருந்தூரில் இன, மத முறுகலை உருவாக்குவதற்கு முயற்சித்துள்ளார். அங்கு சுமார் இரண்டாயிரம் வருடங்கள் பழைமையான விகாரையை அழிப்பதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உயர்ஸ்தானிகர் ஒருவர் அவ்வாறு நடந்துகொண்டமையானது இராஜதந்திர செயற்பாடுகளை மீறும் வகையில் அமைந்துள்ளது. நாட்டின் சட்டத்தை மீறும் வகையில் அவர் நடந்துகொண்டுள்ளதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது.

குருந்தூர்மலையில் இரண்டாயிரம் ஆண்டுகள் பழைமையான விகாரையை உடைத்து அங்கு சிவலிங்கத்தை அமைத்து வழிபாடுகள் மேற்கொண்ட தமிழ் அரசியல்வாதிகளை சந்தித்தமையானது சிங்கள பௌத்த மக்களின் கௌரவத்துக்கு இழைத்த மாபெரும் அநீதியாகும். அவ்வாறு பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ள கனேடிய உயர்ஸ்தானிகரை இந்த நாட்டிலிருந்து வெளியேற்ற வேண்டுமென நான் யோசனையை முன்வைக்கிறேன்.

அதேபோல அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங், பிரிவினைவாத தமிழ் அரசியல்வாதிகளை சந்தித்துள்ளார். இலங்கை தமிழரசுக் கட்சி, புளொட், ரெலோ கட்சிகளின் தலைவர்களை அவர் சந்தித்தித்து நாட்டின் அரசியல் பிரச்சினைகள் தொடர்பில் பேசியுள்ளார்.

எமது நாட்டின் அரசியலில் அமெரிக்கா ஆதிக்கம் செலுத்த முடியாது. ஒரு நாட்டின் உள்நாட்டு விவகாரத்தில் அமெரிக்க தூதுவருக்கு தலையிட முடியாது. அவர் 2022 ஆம் ஆண்டு பெப்ரவரி 10 ஆம் திகதி அமெரிக்கத் தூதுவராக நியமனம் பெற்றார். அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் இல்லத்தை போராட்டக்காரர்கள் தாக்குவதற்கு ஒரு மாதத்துக்கு முன்னர் அவர் இலங்கைக்கு வருகைதந்தார். அவர் அப்போது முதல் உள்நாட்டு விவகாரங்களில் தலையிட்டு வருகிறார்.

அவர் சீனாவுக்கும் இலங்கைக்கும் இடையில் பிரிவினையை ஏற்படுத்தி மக்களை தவறாக வழிநடத்த முயற்சித்தார்.

நாம் எமது இறையாண்மையை பாதுகாத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும். வேறு நாடுகளின் தலையீடுகளை நாம் விரும்பவில்லை என்றார்.

## எரிபொருள்...

வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

டுவிட்டர் பதிவொன்றினூடாக இதனை தெரிவித்துள்ள அவர், அதில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

எதிர்வரும் 6 மாதங்களுக்குத் தேவையான எரிபொருள் இருப்பு திட்டம் மற்றும் விநியோகம் என்பன தொடர்பான சந்திப்பொன்று பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துடன் இடம்பெற்றது. இதன்போது திட்டம் தொடர்பான மதிப்பாய்வுகளும் இடம்பெற்றிருந்தன.

எரிபொருள் இறக்குமதித் திட்டங்கள், சுத்திகரிப்புச் செயற்பாடுகள், சுத்திகரிப்பு நிலைய மேம்படுத்தல் முன்மொழிவுகள், கியூ.ஆர். ஒதுக்கீடுகள், சேமிப்புத் திறன், எரிபொருள் நிலையங்களுடனான ஒப்பந்தங்கள், மதிப்பாய்வு மற்றும் விவாதிக்கப்பட்ட விநியோகம் ஆகிய விடயங்கள் குறித்தும் மதிப்பாய்வு செய்யப்பட்டது.

மதிப்பீட்டு நடவடிக்கைகளை தொடர்ந்து அடுத்த மாதம் எரிபொருள் கோட்டா மேலும் அதிகரிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச் சலுகையை 04 வருடங்களுக்கு நீடிக்கத் தீர்மானம்

இலங்கைக்கான ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகையை எதிர்வரும் 2027 ஆம் ஆண்டு வரையான 04 வருடங்களுக்கு நீடிப்பதற்கு தீர்மானித்துள்ளதாக ஐரோப்பிய ஒன்றியம் அறிவித்துள்ளது.

டுவிட்டர் பதிவொன்றை வெளியிட்டு இதனை தெரிவித்துள்ள ஐரோப்பிய ஒன்றியம் அதில் மேலும் தெரிவித்துள்ளதாவது,

இலங்கைக்காக ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச் சலுகை தொடர்பான ஒப்பந்தம் எதிர்வரும் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதியுடன் நிறைவுக்கு வருகிறது.

இலங்கையின் மிகப்பெரிய வர்த்தக பங்காளி என்ற அடிப்படையில், 2022 ஆம் ஆண்டில் ஜி.எஸ்.பி. பிளஸ் ஏற்றுமதியாளர்களினால் மாத்திரம் இலங்கைக்கு 3.2 பில்லியன் யூரோ மதிப்பிலான ஏற்றுமதிகள் கிடைக்கப்பெற்றுள்ளன. எங்களின் புதிய ஜி.எஸ்.பி. பிளஸ் ஏற்பாட்டுக்கான பேச்சுவார்த்தைகள் ஐரோப்பிய ஒன்றிய சட்ட உறுப்பினர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதனால், இலங்கை போன்ற நாடுகள் தங்களது முன்னுரிமை அணுகலை இழக்காமல் இருப்பதற்காக, தற்போதைய வரிச் சலுகையை எதிர்வரும் 2027 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி வரை 04 ஆண்டுகளுக்கு நீடிப்பதற்கு ஐரோப்பிய ஒன்றியம் தீர்மானித்துள்ளது.

இலங்கையைப் பொறுத்தவரை, ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகையை நீட்டிப்பது தொடர்பான முன்மொழிவில் இப்போதைக்கு எந்த மாற்றமும் இல்லை என்று ஐரோப்பிய ஒன்றியம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## லிட்ரோ...

லிட்ரோ எரிவாயு நிறுவனத்தை பொறுப்பேற்கும்போது இந்த நிறுவனத்துக்கு 10 பில்லியன் ரூபா கடன்தொகை இருந்தது. 14 பில்லியன் ரூபா நட்டமும் ஏற்பட்டிருந்தது. அந்த கடன்களை மீளச் செலுத்தி நட்டத்தை சரிசெய்து பலமான அரச நிறுவனமாக முகாமைத்துவம் செய்துள்ளோம்.

நிதி இருப்பை பலப்படுத்த அரசாங்கம் முயற்சித்து வருகின்ற நிலையில், அதற்கு பெறுமதி சேர்க்கும் வகையில் இந்த மாதத்தில் இடையில் ஒருதொகை நிதியை திரைசேறிக்கு வழங்க திட்டமிட்டிருந்தோம். அதற்கமைய இன்று (நேற்று) 1.5 பில்லியன் ரூபா நிதியை ( 150 கோடி ரூபா) எமது தாய் நிறுவனமான இலங்கை காப்புறுதி நிறுவனத்தினூடாக திரைசேறிக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுத்திருக்கிறோம்.

எமது நிறுவனத்துக்கு கடந்த சில மாதங்களாக கிடைக்கப்பெற்ற சிறியளவான இலாபத்தை முடிந்தளவு சேமித்து, அரசாங்கத்துக்கு தேவையுள்ள சந்தர்ப்பத்தில் மக்களுக்கு இலாபத்தை வழங்கும் அதே சந்தர்ப்பத்தில் அரசாங்கத்துக்கும் நிதி வழங்கியுள்ளோம் என்றார்.

## மருந்து...

அடங்குவதாக தெரியவந்துள்ளது என கேகாலை பொது வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் மிஹிரி பிரியாங்கனி தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

உயிரிழந்தவருக்கு குறித்த நுண்ணுயிர் கொல்லி மருந்து இதற்கு முன்னர் 13 தடவைகள் வழங்கப்பட்டுள்ளன. 14ஆவது தடவையாக குறித்த மருந்தை வழங்கிய பின்னர் ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. இச் சம்பவம் தொடர்பில் சுகாதார அமைச்சுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

கேகாலையைச் சேர்ந்த 57 வயதான ஆண் ஒருவர் கடந்த 10ஆம் திகதி சிரோசீஸ் நிலைமை காரணமாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டநிலையில் அவருக்கு கடந்த 17ஆம் திகதி கடுமையான ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் செவ்வாய்க்கிழமை (18) உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், Cefriaxone எனப்படும் நுண்ணுயிர் கொல்லி மருந்து வழங்கப்பட்டமையால் பேராதனை வைத்தியசாலையில் சமோதி சந்தீபனி என்ற 21வயதுடைய யுவதி கடந்த வாரம் உயிரிழந்தார்.

குறித்த யுவதியின் உயிரிழப்புக்கு பின்னர் மேற்படி Cefriaxone எனப்படும் நுண்ணுயிர் கொல்லி மருந்து பாவனையிலிருந்து தற்காலிகமாக நீக்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உயர்தரப்...

சுசில் பிரேமஜயந்த சபையில் நேற்று (20)அறிவித்தார்.

புதிய அறிக்கையின் பிரகாரம் மாணவர்களின் பாடசாலை வருகை வீதம் தொடர்பில் மேலும் புதிய பணிப்புரைகளும் வழங்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தின் நேற்றைய விவாதத்தின்போது இடம்பெற்ற வாய்மூல விடைக்கான கேள்வி நேரத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

இம்முறை கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்காக பாடசாலை மாணவர்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பம் கோரலின் போது கடந்த 17ஆம் திகதி வெளியிடப்பட்ட அறிவித்தலின் பிரகாரம் பாடசாலை விண்ணப்பதாரிகளுக்கு நூற்றுக்கு 80 சதவீத வரவு இருக்க வேண்டும். ஆனால், 2020, 2021 ஆம் ஆண்டுகளில் தாக்கம் செலுத்திய கொரோனா நிலைமையினாலும் கடந்த வருடம் ஏற்பட்ட நெருக்கடி நிலைமையினாலும் மாணவர்களுக்கு முறையாக பாடசாலை செல்ல முடியாத நிலை ஏற்பட்டது.

விண்ணப்ப முடிவுத் திகதிக்கு இன்னும் ஒருவார காலம் இருக்கிறது. இந்நிலையில் மேற்குறிப்பிட்ட காரணங்களைக் கருத்திற்கொண்டு வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள் என சம்பந்தப்பட்ட பிரிவினருக்கு புதிய சுற்றுநிருபமொன்றை அனுப்பி வைத்துள்ளோம்.

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் மாணவர்களின் பாடசாலை வருகை தொடர்பில் பாடசாலை மட்டத்தில் கலந்துரையாடி தீர்மானமொன்றை எடுக்கவேண்டும். ஒருசில பாடசாலைகளினூடாக மாணவர்கள் பரீட்சைக்கு விண்ணப்பிப்பது தொடர்பில் பிரச்சினைகள் உருவாகியுள்ளமையினால் அதுதொடர்பில் நடவடிக்கை எடுக்குமாறும் பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது. நடப்பாண்டில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்காக, மாணவர்களின் பாடசாலை வரவு வீதம், இந்த வருடத்துக்கு மாத்திரம் அதிகபட்ட 40 சதவீதமாக அமைய வேண்டும்.

மேலும், மாணவர்களின் வரவு வீதத்தை கணக்கில் கொள்ளும்போது நோய்நிலைமை அல்லது வேறு சாதாரண காரணங்களின் அடிப்படையில், பரீட்சையில் தோற்றுவதற்கு அவர்களுக்கான வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்குமாறும் சம்பந்தப்பட்ட நிர்வாக பிரிவினருக்கு பரிந்துரை வழங்கப்பட்டுள்ளது.

வரவு வீதம் தொடர்பில் சிக்கல் நிலை ஏற்படும் மாணவர்களுக்காக பாடசாலையிலிருந்து நீங்குவதற்கான சான்றிதழ் வழங்கப்பட்டதன் பின்னர், மீண்டும் பாடசாலையில் இணைவதற்கு விருப்பம் தெரிவித்திருப்பார்களாக இருந்தால் பழைய பதிவு இலக்கத்திலேயே பதிவை வழங்கி பரீட்சைக்கு விண்ணப்பிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

## இலங்கைத்...

முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரதமருக்கு எழுதியுள்ள கடிதத்தில், "இலங்கை அதிபர், 2022ஆம் ஆண்டு பதவியேற்றதற்குப் பிறகு முதன்முறையாக 2 நாள் பயணமாக புதுடில்லி வந்துள்ளார். தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையில் பூகோள ரீதியான நெருக்கம்,வரலாற்று, பொருளாதார மற்றும் கலாசாரத் தொடர்புகள் காரணமாக நீண்டகாலமாக பல பிரச்சினைகள் நிலுவையில் உள்ளன.

இலங்கை அதிபருடனான பேச்சுவார்த்தையின் போது தமிழ்நாட்டு மக்களுக்கு மிகவும் கவலையளிக்கும் இரண்டு முக்கிய பிரச்சினைகளான கச்சத்தீவை மீட்பது மற்றும் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாப்பது குறித்தும் இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களின் நியாயமான கோரிக்கைகளை நிறைவேற்றி அவர்களின் உரிமைகள் மற்றும் சுதந்திரம் பாதுகாக்கப்படுவதை உறுதி செய்தல் வேண்டும். கச்சத்தீவை மீட்பது மற்றும் இந்திய மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பாதுகாக்க வேண்டும்.தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் அடிக்கடி தாக்கப்படுவதும் கைது செய்யப்படுவதும் முற்றிலும் தடுக்க வேண்டும். இலங்கை கடற்படையால் தமிழக மீனவர்களின் பறிமுதல் செய்யப்பட்ட படகுகளை மீட்க வேண்டும். மீனவர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணும் வகையில், இரு நாட்டு அதிகாரிகளையும் உள்ளடக்கிய மறுசீரமைக்கப்பட்ட கூட்டுப் பணிக்குழு 2016 ஆம் ஆண்டில் அமைக்கப்பட்டது. இதுவரை, ஐந்து சுற்று கூட்டுச் செயற்குழுக் கூட்டங்கள் நடத்தப்பட்டுள்ளன.

கடைசியாக மார்ச் 2022 இல் இதுதொடர்பான கூட்டம் நடைபெற்றது. இருப்பினும், இந்தப் பிரச்சினைக்கு இதுநாள்வரை ஒரு சுமுகமான தீர்வு ஏற்படவில்லை. எனவே உரிய காலத்தில் கூட்டங்கள் நடத்தி ஆலோசனைகள் மேற்கொள்வதன் மூலம் மீனவர்களிடையே நம்பிக்கையை உருவாக்கவும் பயனுள்ள தகவல் தொடர்புகளை எளிதாக்கவும் சுமுகமான மீன்பிடி நடவடிக்கைகளை உறுதிப்படுத்தவும் இயலும்.

1956 ஆம் ஆண்டு முதல் இலங்கை தமிழர்களின் உரிமைகளை நிலைநிறுத்துவதிலும் கோரிக்கைகளை நிறைவேற்றுவதிலும் தமிழ்நாடு அரசும், தி.மு.கவும் உறுதியாக உள்ளது. மேலும் இலங்கையில் உள்ள தமிழர்களின் சமூக, அரசியல், பண்பாடு மற்றும் பொருளாதார உரிமைகளைப் பாதுகாத்து, அவர்கள் இலங்கையின் சமமான குடிமக்களாக, கண்ணியமான வாழ்க்கையை வாழ் வேண்டியது அவசியமாகும். இந்த நோக்கத்துக்காக, இலங்கையில் உள்ள தமிழர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றுவதற்கு ஆக்கபூர்வமான உறுதியான தீர்வை எட்டுவதற்கு இலங்கை அதிபரை பிரதமர் வலியுறுத்த வேண்டும் என முதல்வர் கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

## பதவி நீக்கத்துக்கு...

எதுஎவ்வாறாயினும் எனது பதவி நீக்கம் பணிப்பாளர் சபையின் சூழ்ச்சி" என அந்த நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ரொஹான் பெர்னாண்டோ தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று (20) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில் , லங்கா ரெலிகொம் நிறுவனத்தின் பணிப்பாளர் குழுவுக்கான கூட்டத்துக்கு இன்று (நேற்று) அழைப்பு விடுத்திருந்தேன். அதன்போது, நிகழ்ச்சித்திட்டத்தில் இல்லாத விடயமொன்று முன்வைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து நான் வியப்படைந்தேன்.

இந்த கூட்டத்தின்போதே, நிறுவனத்தின் தலைவரை மாற்ற வேண்டும் என்று மலேசிய முதலீட்டாளர்களுக்கு கோருவதாக யோசனை முன்வைத்திருந்தார்கள். சில மாதங்களுக்கு முன்னர் இதுபோன்றதொரு சூழ்ச்சி இடம்பெறுவதாக பத்திரிகையில் செய்தி வெளியானபோது, தாம் நிறுவனத்தின் தலைவரை மாற்றியமைப்பது தமது கடமையில்லை என்றும் அது தம்முடன் தொடர்புடைய விடயமும் இல்லை. அது நிறுவனத்தின் பெரும்பான்மை முதலீட்டை கொண்டிருக்கும் அரசாங்கத்தின் கடமையென்றும் குறிப்பிட்டு கையொப்பமிட்டு அவர்கள் கடிதமொன்றையும் சமர்ப்பித்திருந்தார்கள். இதனாலேயே, இந்த பதவி நீக்கம் எனக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

நான் அறிந்த வகையில் இதுபோன்ற சம்பவமொன்று இதற்கு முன்னர் இடம்பெற்றிருக்கவில்லை. ரெலிகொம் நிறுவன சட்டத்தின் 105 ஆவது அத்தியாயத்திலும் நிறுவனத் தலைவரின் பதவீ நீக்கம் தொடர்பில் தெளிவின்மை இருக்கிறது. 10 பணிப்பாளர்களில் 06 அரச பங்குதாரர்களாவர். இந்த ஆறு பேரின் பெரும்பான்மை விருப்பிலேயே இந்த பதவி நீக்கம் இடம்பெற்றிருக்கிறது. பணிப்பாளர் சபையின் தலைவர் தொடர்பான அறிவிப்புக்களை திரைசேறியே முன்னெடுக்கும். நிதி அமைச்சின் செயலாளரினூடாகவே பதவி நியமனங்கள் மற்றும் பதவி நீக்கங்கள் இடம்பெறும். இதுவரையில் அவ்வாறான மாற்றம் எதுவும் இடம்பெறவில்லை.இந்த விடயம் தொடர்பில் கலந்துரையாடி தீர்மானமொன்றுக்கு வந்திருக்கலாம். ஆனால், அவ்வாறு எந்தவொரு விடயமும் ஏற்படவில்லை. அதனால், பணிப்பாளர் சபையில் இடம்பெற்ற சூழ்ச்சியாகவே நான் இதனைக் கருதுகிறேன்.இந்த நிறுவனத்தை விற்கும் நோக்கத்திலேயே இந்த பதவி மாற்றம் இடம்பெற்றிருக்கலாம் என்றே நான் கருதுகிறேன். ஒருவேளை அவர்களின் இந்த திட்டத்துக்கு நான் தடையாக இருந்திருக்கலாம். இந்த நிறுவனத்தை விற்பனை செய்வதா இல்லையா என்பது தொடர்பில் இதுவரை காலமும் நான் எவ்வித கருத்தையும் முன்வைத்தது இல்லை. இது கொழும்பு பங்குச்சந்தையில் நிறுவப்பட்டுள்ள நிறுவனமாகும் என்றார்.

## சிசேரியன்...

களுத்துறை போதனா வைத்தியசாலையில் சிசேரியன் அறுவை சிகிச்சைக்கு அத்தியாவசியமான ஹெவிமாகேன் என்ற மருந்துக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்தியர் திருமதி எஸ்.எம்.பி.கருணாரத்ன கூறியுள்ளார்.

வைத்தியசாலையில் தற்போது 17 மருந்துகளே இருப்பதால் தேவையான சிசேரியன் அறுவை சிகிச்சைகள் மட்டுமே மேற்கொள்ளப்பட்டு, ஏனைய சிசேரியன் அறுவை சிகிச்சைகளை இடை நிறுத்த முடிவு செய்யப்பட்டுள்ளது. இது இந்நாட்டில் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளின் வாழ்க்கையுடன் தொடர்பான பாரிய பிரச்சினையாகும்.

குறிப்பாக இந்த ஹெவிமாகேன் என்ற மருந்து நிதி இல்லாததால் ஏற்பட்ட தட்டுப்பாடா அல்லது அரசாங்கத்தின் திறமையின்மையே காரணமாக ஏற்பட்ட தட்டுப்பாடா என கேள்வி எழுப்புவதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர்,இவ்வாறான மருந்துப் பொருட்களுக்கான பிரச்சினை தோன்றியமை தொடர்பில் அரசாங்கத்திடம் இருந்து தெளிவான பதில் தேவை.

சுகாதார அமைச்சரின் அறிக்கையின் பிரகாரம், இந்நாட்டில் 10 இலட்சம் குழந்தைகள் மற்றும் பெண்கள் ஊட்டச்சத்து குறைபாட்டால் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கு அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கை என்ன?

இந்நாட்டின் தாய்மார்களையும் பிள்ளைகளையும் மரணப் படுக்கைக்கு கொண்டு செல்லும் வரை அரசாங்கம் காத்திருக்கிறதா அல்லது இதற்கு விரைவான தீர்வு தருவீர்களா என தெரிந்து கொள்ள வேண்டியது அவசியமானது.

மருந்துப்பொருள் மாபியாவினால் இந்நாட்டு குடிமக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. இது தொடர்பில் விசாரணை நடத்துமாறு முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகின்ற போதும் இது மக்களை ஏமாற்றும் மற்றுமொரு சூழ்ச்சியே மேற்கொள்ளப்படுகிறது. மக்களை இனியும் ஏமாற்ற விடமாட்டேன். சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவுக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையில் இன்று (நேற்று) கையெழுத்திட்டுள்ளேன்.

## தனியார்மயமாக்கலை...

தலைவர் பதவியிலிருந்து நீக்கியுள்ளதாகவும் ரெலிகொம் நிறுவனத்தை விற்கும் நடவடிக்கைகளை விரைவுப்படுத்துவதற்காக பணிப்பாளர் சபை சூழ்ச்சி செய்வதாகவும் அந்த நிறுவனத்தின் முன்னாள் தலைவர் ரொஹான் பெர்னாண்டோ குறிப்பிட்டுள்ளார்.

## டில்மா நிறுவுனர்...

முன்னோடியாக செயற்பட்டார்.

அவரின் மகன்களான "டில்ஹான்" மற்றும் "மலிக்" ஆகியோரின் பெயர்களை இணைத்து "டில்மா" என்ற பெயரில் தேயிலை உற்பத்தி நிறுவனத்தை உருவாக்கியதுடன் பின்னர் அந்த் நிறுவனம் உலகிலேயே பிரபல்யமான நிறுவனமானமை குறிப்பிடத்தக்கது.

## இந்தியாவுக்கு...

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் அழைப்பின் பேரில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு நாள் பயணமாக நேற்று (20) பிற்பகல் அந்நாட்டுக்குப் புறப்பட்டார். இரு நாடுகளுக்கும் இடையிலான வெளியுறவு தொடர்புகளின் 75 ஆண்டு பூர்த்தியையொட்டி இருதரப்பு உறவுகளை மேம்படுத்தவும் பரஸ்பர நலன்களை ஆராயவும் இந்திய குடியரசுத் தலைவர் திரௌபதி முர்மு , பிரதமர் நரேந்திர மோடி மற்றும் உயர் அதிகாரிகளுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதி வெளிநாட்டில் இருக்கின்ற காலப்பகுதியில், அவரின் கீழுள்ள அமைச்சுகளின் பொறுப்புக்கள் இராஜாங்க அமைச்சர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

அதன்படி பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரான பிரமித்த பண்டார தென்னகோன் பதில் பாதுகாப்பு அமைச்சராகவும் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க பதில் நிதி மற்றும் பொருளாதார நிலைப்படுத்தல், தேசிய கொள்கைகள் அமைச்சராகவும் ஏற்றுமதி ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம ஏற்றுமதி ஊக்குவிப்பு பதில் அமைச்சராகவும் தொழில்நுட்ப இராஜாங்க அமைச்சர் கனக ஹேரத் தொழில்நுட்ப பதில் அமைச்சராகவும் சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர் அனுப பெஸ்குவல் பதில் மகளிர், சிறுவர் விவகார மற்றும் சமூக வலுவூட்டல் பதில் அமைச்சராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மேலும், ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தில் இணைந்துள்ளதால் சாந்தனி விஜேவர்தன ஜனாதிபதியின் பதில் செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதியின் பதில் செயலாளராக பெண் ஒருவர் நியமிக்கப்பட்டமை வரலாற்றில் இதுவே முதல் தடவையாகும்.

சிரேஷ்ட அரச அதிகாரியான சாந்தனி விஜேவர்தன தற்போது ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளராக கடமையாற்றி வருகின்றார்.1994 ஆம் ஆண்டு இலங்கை திட்டமிடல் சேவையில் இணைந்து கொண்ட திருமதி விஜேவர்தன, திறைசேரியில் 22 வருடங்களாக பல்வேறு பதவிகளை வகித்து வந்ததோடு இறுதியாக திட்டமிடல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகமாக பணியாற்றினார்.

2015 முதல் 2019 வரை அபிவிருத்தி மூலோபாயம் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சின் செயலாளராகவும் சாந்தனி விஜேவர்தன பணியாற்றியுள்ளார்.

காலி சவுத்லண்ட் பெண்கள் கல்லூரியின் பழைய மாணவியான இவர், ருகுணு பல்கலைக்கழகத்தின் கலைப் பீடத்தில் முதுமாணிப் பட்டம் பெற்றுள்ளதோடு நெதர்லாந்தின் ஹேக் நகரில் பிராந்திய பொருளாதார அபிவிருத்தி தொடர்பான பட்டப்பின் படிப்பை பூர்த்திசெய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## கெஹேலியவுக்கு...

சுகாதாரத் துறையை நலிவடையச் செய்து உயிரிழப்புகள் ஏற்படுதலுக்குக் காரணமாக அமைதல் என்பனவற்றை அடிப்படையாகக் கொண்டு சுகாதார அமைச்சர் கெஹேலிய ரம்புக்வெல்லவுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பம் பெறும் நடவடிக்கைகள் நேற்று (20) ஐக்கிய மக்கள் சக்தியினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

அண்மைக் காலங்களில், தரமற்ற மருந்துகளை இறக்குமதி செய்து அவற்றைப் பயன்படுத்தியதால் எமது நாட்டின் வைத்தியசாலைக் கட்டமைப்பில் அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் பதிவாகியிருந்தன. இது குறித்து ஐக்கிய மக்கள் சக்தியினர் தொடர்ச்சியாக அரசாங்கத்துக்கு அறிவுறுத்திய போதிலும் அதனைப் பொருட்படுத்தாது அவசர நிலை எனக் கருதி கொள்முதல் மற்றும் பதிவு செயல்முறைக்கு புறம்பாக மருந்துப்பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்டதோடு இதனால் நாட்டின் பல முக்கிய வைத்தியசாலைகளில் உயிரிழப்புச் சம்பவங்கள் நிகழ்ந்தன.இந்த பிரச்சினைகளை அடிப்படையாகக் கொண்டு வரப்படவுள்ள நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு கையொப்பம் பெறும் நடவடிக்கைகள் முன்னெடுத்துவருவதாகவும் மக்களின் வாக்குகளின் மூலம் பாராளுமன்றத்துக்கு வந்த ஆளும் கட்சி உறுப்பினர்களுக்கு முதுகெலும்பு இருந்தால் இந்த நம்பிக்கையில்லாப் பிரேரணையில் கையொப்பமிட வேண்டும் என எதிர்க் கட்சி தலைவர் சஜித் பிரேமதாச நேற்று (20) சபையில் கருத்து தெரிவித்திருந்தார்.

# உயிரிழந்த மாணவனின் பட்டச் சான்றிதழ் தாயிடம் கையளிப்பு

## பட்டமளிப்பு விழாவில் பங்கேற்றோரை கண்கலங்க வைத்த சோக நிகழ்வு




யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 37ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் அமர்வு நேற்று (20)இடம்பெற்றது. இதன்போது அனைவரது கண்களையும் கலங்கச் செய்த சம்பவமொன்றும் பதிவாகியது.

அதாவது, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகத்தைச் (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகத்தை) சேர்ந்த திசாநாயக்க முதியன்சலாகே ஹஷான் சாகர திசாநாயக்க என்ற பட்டதாரி மாணவன் பிரயோக கணிதம் மற்றும் கணிப்பிடலில் விஞ்ஞானமாணிப் பட்டத்துக்கு தகுதிபெற்றிருந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளார். இந்நிலையில் அவருக்கான பட்டம் நேற்று இடம்பெற்ற 37ஆவது பொதுப்பட்டமளிப்பு விழாவில் அவரது தாயாரிடம் கையளிக்கப்பட்டது.

இதன்போது தாயார் கண்ணீர்மல்க பட்டச் சான்றிதழை பெற்றுக்கொண்டார். இச் சம்பவமானது அரங்கிலிருந்தவர்களின் கண்களை கலங்கச் செய்தமை குறிப்பிடத்தக்கது.

## சிறுவன் துஷ்பிரயோகம்: ஒருவர் பொலிஸாரால் கைது

பதினைந்து வயது சிறுவன் ஒருவனை துஷ்பிரயோகத்துக்குட்படுத்திய குற்றச் சாட்டில் வவுனியா பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் 33 வயதுடைய அபிவிருத்தி உத்தியோகத்தர் ஒருவர் கைது செய்யப் பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா பொலிஸ் நிலையத்தில் மாவட்ட சமூக பொலிஸ் பிரிவில் அபிவிருத்தி உத்தியோகத்தராக செயற்படும் நபர், குறித்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாடசாலை நிகழ்வுகளில் மொழி பெயர்ப்பாளராக கடமையாற்றி வருகின்றார்.

குறித்த நபர் வவுனியா நகரை அண்டிய பாடசாலையில் கல்வி கற்கும் குருமண்காடு பகுதியைச் சேர்ந்த 15 வயதான சிறுவன் ஒருவனை வவுனியா, குடியிருப்பு பகுதியில் வைத்து துஷ்பிரயோகம் செய்ததாக பொலிஸாருக்குக் கிடைத்த முறைப்பாட்டையடுத்து குறித்த அபிவிருத்தி உத்தியோகத்தர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், பாதிக்கப்பட்ட சிறுவன் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா, ஈச்சங்குளம் பகுதியைச் சேர்ந்த 33 வயதுடைய அபிவிருத்தி உத்தியோகத்தரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளவராவார். இது தொடர்பில் வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# அவிசாவளை மக்களுக்கு ஒதுக்கிய காணியை அபகரிக்கும் முயற்சி

## களத்துக்கு சென்று தடுத்து நிறுத்தினார் மனோ எம்.பி.



அவிசாவளை, பென்ரித் தோட்ட மக்களுக்கு ஒதுக்கப்பட்ட நான்கு ஏக்கர் காணியை தம்ரோ பெருந்தோட்ட நிறுவனம் அபகரிக்க எடுத்த முயற்சியை கொழும்பு மாவட்ட எம்.பியும் தமிழ் முற்போக்குக் கூட்டணி தலைவருமான மனோ கணேசன் ஸ்தலத்துக்கு விரைந்து தடுத்து நிறுத்தியுள்ளார்.

மக்களுக்கு ஒதுக்கப்பட்ட காணியை தம்ரோ பெருந்தோட்ட நிறுவனமானது புசல்லாவ பெருந்தோட்ட நிறுவனத்திடமிருந்து குத்தகைக்குப் பெற்று சுற்றி முள்வேலி அமைத்து, பெக்கோ இயந்திரம்மூலம் துப்புரவு செய்து புதிய இறப்பர் கன்றுகளை நடுவதற்கு நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

இதுபற்றி கட்சி பிரதிநிதிகள் மற்றும் பிரதேச மக்கள் தெரிவித்த புகாரை அடுத்து, சம்பவ இடத்துக்கு நேற்று முற்பகல் சென்ற மனோ கணேசன் எம்.பி. தலைமையிலான குழுவினர் பெருந்தோட்ட நிறுவனத்தின் நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தினர்.

பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசனுடன் கட்சியின் மக்கள் பிரதிநிதிகள், பாலசுரேஷ் குமார், பிரியாணி குணரத்ன, பாலச்சந்திரன் அப்பாதுரை, எஸ். தங்கதுரை மற்றும் மோசஸ் ஆகியோர் உடனிருந்தனர். சம்பவ இடத்துக்குச் செல்லும் முன், அவிசாவளை பிரதேச செயலகத்துக்கு சென்று பிரதேச செயலாளர் தில்ஹானியை சந்தித்த மனோ எம்.பி., மக்களுக்கு ஒதுக்கப்பட்ட காணியை பாதுகாக்கும் கடமையிலிருந்து தவறியுள்ளதாக பிரதேச செயலாளரை குற்றம் சாட்டினார்.

இதுபற்றி ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன்,

நல்லாட்சியின் போது, அவிசாவளை,பென்ரித் தோட்ட பிரதேசத்தில் அமைந்துள்ள நீர் சுத்திகரிப்பு நிலையத்தில் ஏற்பட்ட வாயு கசிவில் அங்கு விபத்து ஏற்பட்டு, அயல் குடியிருப்பு மக்கள் பெரும் ஆபத்தை சந்தித்தனர். இதனால் மாற்று இடம் ஏற்பாடு செய்து அதற்காக நான்கு ஏக்கர் காணியை அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பித்து, நான் பெற்றேன். அதற்கான நிதியும் எனது அமைச்சினால் செலுத்தப்பட்டது. இந்நிலையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதால் அந்த திட்டம் கிடப்பில் போடப்பட்டது.

இதனை பயன்படுத்தியே, இங்கே வாழும் தமிழ் குடும்பங்களுக்கு ஒதுக்கப்பட்ட இந்த நான்கு ஏக்கர் காணியை, தோட்ட நிறுவனம் தந்திரமாக அபகரிக்க முயன்றுள்ளது.

ஒருவேளை நான் மீண்டும் அமைச்சராகி இதை செய்ய வேண்டும் அல்லது நான் மீண்டும் அமைச்சராக மாட்டேன் என அதிகாரிகள் நினைத்தார்களோ தெரியவில்லை. எது எப்படி இருந்தாலும் எனக்கு எதிரணியும் ஆளும் அணியும் ஒன்றுதான். தற்போது இந்த முயற்சி நிறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பில், கொழும்பு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் கலந்துரையாடி, காணித் துண்டுகளை சம்பந்தப்பட்ட குடும்பங்களுக்கு பிரித்து வழங்குவோம் என்றார்.

# நாட்டின் நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்கள் எவை?

## நிபுணர்களின் பங்களிப்புடன் ஆராய பாராளுமன்ற விசேட குழு தீர்மானம்

நாட்டின் நிதி வங்குரோத்து நிலைக்கான காரணங்களை ஆராய்வதற்கு துறைசார் நிபுணர்களின் பங்களிப்பைப் பெற்றுக்கொள்ள பாராளுமன்ற விசேட குழு தீர்மானித்துள்ளது.

பாராளுமன்ற விசேட குழு சட்டத்தரணி சாகர காரியவசம் எம்.பி. தலைமையில் கடந்த 18ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடியது. இதன்போது எதிர்கால செயற்பாடுகள் குறித்த அடிப்படை விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

அதற்கமைய, சம்பந்தப்பட்ட துறைசார் நிபுணர்களை முன்மொழியுமாறு குழுவின் தலைவர் குழு உறுப்பினர்களுக்கு அறிவித்தார்.

அத்துடன், எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு அமைய, நியமிக்கப்பட்ட இந்தக் குழுவில் எதிர்க்கட்சி சார்பில் தலைவர் ஒருவர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இராஜினாமா செய்துள்ள நிலையில் இந்தக் குழு தொடர்பில் சபாநாயகரின் கவனத்துக்குக் கொண்டுவர வேண்டும் எனவும் குழுவில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்தார்.

அதற்கமைய, நாடு வங்குரோத்து நிலையை அடையும் போது நாட்டின் ஆட்சிக்குப் பொறுப்பாக இருந்த பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் இந்தக் குழுவுக்கு தலைமை வகிப்பது, குழுவின் சுயாதீனத் தன்மைக்கு பாதிப்பாகும் என்பதால் குழுவிலிருந்து இராஜினாமா செய்வதாக அவர் குறிப்பிட்டார்.

இதன்போது குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி சாகர காரியவசம் குறிப்பிடுகையில், இந்தக் குழு அரசியல் சார்ந்த குழுவொன்று அல்ல என்றும் பிரேரணையைக் கொண்டுவரும் கட்சியிலிருந்தே தலைவர் நியமிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தார்.

அத்துடன், பாராளுமன்ற விசேட குழுக்களை நியமிக்கும் போது சம்பிரதாயத்துக்கு அமைய குழுவின் கட்டமைப்பில் ஆளும் தரப்புக்கு அதிக பிரதிநிதித்துவமும் எதிர்க்கட்சிக்கு குறைந்த பிரதிநிதித்துவமும் வழங்குவதாக அவர் சுட்டிக்காட்டினார்.

குழுவின் சுயாதீனத் தன்மை, குழுவிலுள்ள உறுப்பினர்களின் அடிப்படையில் அல்ல என்றும் குழு எவ்வாறு செயற்படுகின்றது என்பதிலேயே தங்கியுள்ளது எனவும் அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.



இக் கூட்டத்தில் குழுவின் உறுப்பினர்களான அமைச்சர் பவித்ரா வன்னியாரச்சி, இராஜாங்க அமைச்சர் டி.வீ.சானக, பாராளுமன்ற உறுப்பினர்களான ஜயந்த கெட்டகொட, மேஜர் பிரதீப் உந்துகொட, சஞ்சீவ எதிரிமான்ன, நாலக பண்டார கோட்டேகொட, இரா.சாணக்கியன் மற்றும் பேராசிரியர் ரஞ்சித் பண்டார, பாராளுமன்ற சட்டவாக்க சேவைகள் திணைக்களத்தின் பணிப்பாளரும் தொடர்பாடல் திணைக்களத்தின் பதில் பணிப்பளருமான எச்.ஈ. ஜனகாந்த சில்வா ஆகியோர் கலந்துகொண்டனர்.

# அமரர் முருகேசு சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு நினைவுதின நிகழ்வுகள்





மறைந்த முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் முருகேசு சிவசிதம்பரத்தின் நூற்றாண்டு நினைவுதின நிகழ்வுகள் நேற்று வியாழக்கிழமை(20) காலை இடம்பெற்றன.

அமரர் சிவசிதம்பரத்தின் இல்லத்திலும் நெல்லியடியில் அமைந்துள்ள அன்னாரது சிலையருகிலும் இந்நிகழ்வுகள் இடம்பெற்றன.

இதன்போது அன்னாரது உருவச் சிலைக்கு மலர் மாலை அணிவிக்கப்பட்டதோடு உயர்கல்விக்கான புலமைப்பரிசில்களும் வழங்கப்பட்டன.

முருகேசு சிவசிதம்பரம் (20 ஜுலை 1923 -05 ஜுன் 2002) இலங்கைத் தமிழ் அரசியலில் நீண்டகாலம் செயற்பட்டதுடன் இலங்கை பாராளுமன்ற உறுப்பினராக இருந்த ஒரு வழக்கறிஞருமாவார். பாராளுமன்ற துணை சபாநாயகராகவும் 1968 முதல் 1970 வரை பணியாற்றினார்.

நினைவேந்தல் நிகழ்வில் அமரர் சிவசிதம்பரத்தின் குடும்பத்தினர், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், சென்னை உச்ச நீதிமன்ற சட்டத்தரணி கோபிநாத் மற்றும் சென்னை பல்கலைக்கழக பேராசிரியர் மதிவாணன், பேராசிரியர் தேவராஜ் மற்றும் ஊர்மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

## தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆடி மாதம் 05ஆம் நாள் வெள்ளிக்கிழமை**

**மேஷம்:** போட்டிப் பந்தயங்களில் வெற்றிவாகை சூடி சாதனைப் படைப்பீர்கள். குழந்தைகளால் மகிழ்ச்சி.

**ரிஷபம்:** தொலைநோக்கு சிந்தையோடு இன்று வேலைகளை ஆரம்பிப் பீர்கள். குடும்பத்தில் மகிழ்ச்சி கூத்தாடும்.

**மிதுனம்:** பணவருவாய்க்கு குறை இருக்காது. தைரியத்தை விட மாட்டீர்கள். விடாமுயற்சி வெற்றியைத் தரும்.

**கடகம்:** குடும்பத்துக்கான செலவுகளைச் செய்ய வேண்டிய கட்டாயம். ஆனாலும் சாமாளித்துக் கொள் வீர்கள்.

**சிம்மம்:** விருந்துபசாரங்களில் அல்லது குடும்ப நிகழ்வுகளில் கலந்து கொள்வீர்கள். பரிசுப் பொருட்கள் கிடைக்கப் பெறுவீர்கள்.

**கன்னி:** அதிக கோபத்தாலும் ஆணவத் தாலும் புத்தி இழந்துவிடாமல் பார்த்துக் கொள்ளுங்கள். வீண் பயணம் வேண்டாம்.

**துலாம்:** பொருள் தனவரவால் மகிழ்ச்சி உண்டு. நினைத்த காரியத்தில் வெற்றியும் இலாபமும் உண்டு.

**விருச்சிகம்:** தொழில் முயற்சிகளில் வெற்றிகிட்டும். உங்கள் நண்பர்கள் மூலம் நீங்கள் கேட்ட உதவிகள் கிடைக்கும்.

**தனுசு:** வயிறு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளால் சிரமங்கள் தோன்றும். கடின உழைப்பு உடல் அசதியைத் தரும்.

**மகரம்:** உடல் நோய்களால் சற்று சிரமப்படுவீர்கள். தனபொருள் இழப்புகளை இன்று சந்திக்க வேண்டிவரும்.

**கும்பம்:** சமூகத்திலும் தொழிலிடத்திலும் கௌரவமாக நடத்தப்படுவீர்கள். உங்கள் துணைவியிடமிருந்து ஆறுதல் கிடைக்கும்.

**மீனம்:** உங்கள் பகைவர்கள் விநயமான நடந்து கொள்வார்கள். கேட்ட இடத்திலிருந்து பணம் இன்று கிடைக்கும்.

**திதி:** திருதியை மு.ப.6.58 வரை பின் சதுர்த்தி (வளர்)
**நட்சத்திரம்:** மகம் பி.ப.1.58 வரை பின் பூரம்
**யோகம்:** மரண யோகம் பி.ப.1.58 வரை பின் அமிர்த யோகம்
**வார சூலை:** மேற்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது
**நல்லநேரம்:** மு.ப. 6.00 – 7.00 மணிவரை
**ராகுகாலம்:** 10.30 – 12.00 மணிவரை
**எமகண்டம் :** 3.00 - 4.30 மணிவரை
**குளிகை:** 7.30 – 9.00 மணிவரை
**சந்திராஷ்டமம்:** மகர ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்
**தனஅதிஷ்டம்:** ஆயிலியம்,கேட்டை,ரேவதி, அஸ்வினி,மகம்,மூலம்(பிறந்தவர்களுக்கு)
**விசேட தினம்:** சதுர்த்தி விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)
ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.
தொலைபேசி : 077-0525325
078-6759739

## அறிவிப்பு

2007ஆம் ஆண்டு 07ஆம் இலக்க கம்பனிச் சட்டத்தின் 9(2) உப பிரிவுக்கு அமைய கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் 2023 ஜுலை 01ஆம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வகையில் மாற்றப்பட்டுள்ளது என்பதை அறிவிக்கின்றோம்.

| | |
|---|---|
| நிறுவனத்தின் முன்னைய பெயர் | : டேவிட் பீரிஸ் இன்வெஸ்ட்மென்ட் புரொப்பர்ட்டீஸ் (பிரைவட்) லிமிட்டட் |
| கம்பனிப் பதிவு இலக்கம் | : PV 00208507 |
| பதிவு செய்யப்பட்ட முகவரி | : இல 120, 120 ஏ, பண்ணிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை |
| நிறுவனத்தின் புதிய பெயர் | : டிபீ மெரிடைம் ஹோல்டிங்ஸ் (பிரைவட்) லிமிட்டட் |

பணிப்பாளர் சபையின் உத்தரவுப்படி
அசட்லைன் கோப்ரேட் சேர்விஸ் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனி பதிவாளர்


## வெற்றி நிச்சயம்



"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.

உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/Srimath Suwamiji/

# தமிழன்

THAMILAN தமிழன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2023, ஜூலை 21 ஆம் திகதி, வெள்ளிக்கிழமை


# மணிப்பூர் அக்கிரமம்!

இந்தியா, மணிப்பூர் மாநிலத்தில் கலவரக்காரர்கள் இரண்டு பெண்களை நிர்வாணமாக்கி ஊர்வலமாக அழைத்துச் சென்ற வீடியோ சமூக ஊடகங்களில் வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

மணிப்பூரில் பெரும்பான்மையாக உள்ள மைதேயி சமூகத்தினருக்கு பழங்குடியினர் அந்தஸ்து வழங்குவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து குகி பழங்குடியினர் நடத்திய போராட்டம் இனக்கலவரமாக மாறி கடந்த 2 மாதங்களாக வன்முறை நீடித்து வருகிறது.

பாதுகாப்புப் படை குவிக்கப்பட்டுள்ள நிலையிலும் கலவரத்தைக் கட்டுப்படுத்த முடியாமல் மத்திய, மாநில அரசுகள் திணறி வருகின்றன.

மணிப்பூர் கலவரத்தை உடனடியாக நிறுத்த இந்திய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென ஐரோப்பிய நாடாளுமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தகைய பதற்றமான சூழலில், மணிப்பூரில் குகி பழங்குடி சமூகத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களை கலவரக்காரர்கள் நிர்வாணமாக்கி ஊர்வலமாக இழுத்துச்சென்று கூட்டுப் பாலியல் கொடுமை செய்த காணொலி ஒன்று நேற்றுமுன்தினம் இணையத்தில் வைரலானது.மேலும், இந்தச் சம்பவத்தை த் தடுக்க முயன்ற பாலியல் கொடுமைக்கு உள்ளான பெண்ணின் சகோதரரை கலவரக்காரர்கள் கொன்றுள்ளனர்.

இந்தக் காணொலியை கண்ட மனித உரிமை ஆணையம் கடும் கண்டனம் தெரிவித்த நிலையில், மணிப்பூர் காவல்துறை தரப்பில் இருந்து விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

இணையத்தில் பரவிவரும் காணொலியில் காணப்படும் சம்பவம் கடந்த மே மாதம் 4ஆம் திகதி காங்போக்பி மாவட்டத்தில் நடந்ததாகவும், கடத்தல், கூட்டுப்பாலியல் வன்கொடுமை, கொலை ஆகிய பிரிவுகளின் கீழ் வழக்குப் பதிவுசெய்து குற்றவாளிகளைத் தேடிவருவதாகவும் காவல்துறை தெரிவித்துள்ளது.

மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் இரு அவைகளும் நேற்று நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன. மணிப்பூரில் நடந்த சம்பவத்தால் தனது இதயம் சோகத்தில் மூழ்கியுள்ளது என்று பிரதமர் மோடி தெரிவித்துள்ளார். "இந்தச் சம்பவம் வெட்கக்கேடானது. நாடு அவமதிக்கப்பட்டுள்ளது. அனைத்து தாய்மார்களையும் சகோதரிகளையும் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறு முதலமைச்சர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்." - என்று அவர் கூறியிருக்கிறார்.

"குற்றவாளிகள் யாரும் விடுவிக்கப்படமாட்டார்கள். சட்டம் அதன் கடமையைச் செய்யும். மணிப்பூரின் மகள்களுக்கு நடந்தது ஒருபோதும் மன்னிக்கப்படாது" - என்று பிரதமர் மோடி கூறியுள்ளார்.

இந்நிலையில், இது தொடர்பாக இந்திய உயர்நீதிமன்றம் நேற்று வியாழக்கிழமை தானாக முன்வந்து விசாரணைக்கு எடுத்துக்கொண்டிருக்கிறது. இந்த வழக்கை ஜூலை எதிர்வரும் 28ஆம் திகதி வெள்ளிக்கிழமை நீதிமன்றம் விசாரிக்கிறது.

உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி டி.வை. சந்திரசூட், "இந்த விவகாரத்தில் அரசு தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும்" - என்றார்."இது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. இச்சம்பவம் மிகவும் கவலையளிக்கிறது. இது அரசியலமைப்பு மற்றும் மனித உரிமைகளை மீறும் செயலாகும்." - என்று அவர் கூறியுள்ளார். இந்த விவகாரத்தில் ஆளும் கட்சியான பா.ஜ.கவுக்கு எதிராகக் கண்டனம் தெரிவிக்கும் வகையில் காங்கிரஸ் உள்ளிட்ட மற்ற எதிர்க்கட்சிகள் கருத்து தெரிவித்து வருகின்றன.

நாகரிக உலகத்தில் இவ்வாறான சம்பவங்கள் நடக்கின்றனவா என்று நினைத்துப்பார்க்கவும் முடியாத வகையில் மேற்படி சம்பவம் அரங்கேறியிருக்கிறது. இந்தச் சம்பவத்தில் ஈடுபட்டவர்கள் - அதனை வேடிக்கை பார்த்தவர்கள் எவருமே கற்காலத்தில்தான் வாழ்ந்துகொண்டிருக்கிறார்களா என்று எண்ணத் தோன்றுகிறது.

அஹிம்சையே பிரச்சினைகளுக்கான தீர்வு என்று உலகுக்கு வழிகாட்டிய அண்ணல் காந்தியடிகள் வாழ்ந்த நாட்டில் இப்படியான சம்பவங்கள் நடப்பது ,சமூக ரீதியில் நாடு பின்தங்கிய நிலையில் இருப்பதையே காட்டுகின்றது.இந்தியாவின் நீதித்துறை இந்த விடயத்தில் நீதியை நிலைநாட்டவேண்டும். இந்தியாவில் மட்டுமல்ல, நாகரீக உலகில் எங்கும் இப்படியான சம்பவங்கள் நடக்காதிருக்கும் வகையில் அந்தத் தீர்ப்பு அமைதல் வேண்டும்.

பழங்குடிகள் மீதான தாக்குதல், சாதிய வெறியால் கொலைகள் , கூலிப்படைகள் செயற்பாடு என்று இந்தியாவில் வியாபித்திருக்கும் அக்கிரமங்கள் ஏராளம்.அவற்றுக்கு முடிவு கட்டப்பட வேண்டும்.

## இன்றைய நாளில்...

- 1831 – பெல்ஜியத்தின் முதலாவது மன்னர் முதலாம் லெப்பால்ட் முடிசூடினார்.
- 1960 – சிறிமாவோ பண்டாரநாயக்கா இலங்கையின் பிரதமராகப் பதவியேற்றார். உலக நாடொன்றின் முதலாவது பெண் அரசுத்தலைவர் ஆவார்.
- 1961 – மனிதரை விண்ணுக்கு அனுப்பும் நாசாவின் திட்டத்தில் இரண்டாவது பயணம் மேர்க்குரி-ரெட்ஸ்டோன் 4. கஸ் கிரிசம் என்பவர் விண்வெளிக்குப் பயணம் சென்றார்.
- 1969 – நீல் ஆம்ஸ்ட்ராங் சந்திரனில் நடந்த முதல் மனிதர் என்ற புகழைப் பெற்றார்.
- 2011 – நாசாவின் விண்ணோடத் திட்டம் அட்லாண்டிக்ஸ்தரையிறங்கியதுடன் நிறைவு பெற்றது.



# ரணில் ஜனாதிபதியானதன் பின்னரான இலங்கைத் தீவு!



வரலாற்று மனிதன் மீது சுமத்தும் பணிகளை செய்து முடிக்க வேண்டியது கட்டாயமாகும். எக்காலத்திலாவது எவ்விதத்திலாவது அதனைச் செய்து முடிக்க நேரிடும். அதற்கு தனிப்பட்ட விருப்பு வெறுப்புகள் அவசியமில்லை. இந்த வரலாற்றுப் பொறுப்பு தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மீதும் சுமத்தப்பட்டது. அல்லது சவால்கள் நிறைந்த அந்தப் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். அந்தப் பணிகளை தற்போது செய்து வருகிறார்.

சவால்கள், நெருக்கடிகள் நிறைந்த காலப்பகுதியில் அவற்றைச் சமாளித்து நாட்டை வழிநடத்துவது மட்டுமன்றி, இன்னும் 25 வருடங்கள் கடந்து அடுத்த தலைமுறைக்கு அபிவிருத்தி அடைந்த நாட்டைக் கையளிக்கும் வரலாற்றுப் பணியை அவர் படிப்படியாக ஆற்றிக்கொண்டிருக்கிறார். டிஜிட்டல் மயமாக்கல் பசுமை பொருளாதாரம், விவசாய நவீனமயமாக்கல் உள்ளிட்ட அனைத்து துறைகளையும் நவீனமயப்படுத்தி, 2048இற்குள் சர்வதேசத்தை வெற்றிகொள்ளக்கூடிய அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்புவதே எனது திட்டம் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

கடந்த இரண்டு, மூன்று வருடங்களுக்குள் நாம் வரலாற்றில் ஒருபோதும் காணாத பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டோம். நாட்டின் பொருளாதாரம் 7.8 % ஆக முடங்கிப் போனது. வெளிநாட்டு வருமானம் அற்றுப்போனது. பணவீக்கம் விண்ணைத் தொட்டது. பணவீக்கம் அதிகமுள்ள நாடுகளின் பட்டியலில் இலங்கையும் சேர்க்கப்பட்டது. உணவுத் தட்டுப்பாடும் ஏற்பட்டது. பணம் இருந்தும் பொருட்களை வாங்க வரிசையில் நிற்க நேரிட்டது. எரிபொருள், எரிவாயு பெற்றுக்கொள்ள இரவுபகலாக வரிசையில் நின்ற அனுபவங்கள் கசப்பானவை.

உரம் இல்லாமையினால் விவசாயிகள் நிர்க்கதியாகினர். வியாபாரங்கள் சரிவடைந்து பலர் வேலைகளை இழந்தனர். வருமான வழிவகைகளும் முடங்கிப் போயின. மருந்துத் தட்டுப்பாடு, மின் தடை மக்களை பெரும் நெருக்கடிக்குள் தள்ளியது. பொருளாதார சரிவிற்கு மத்தியில் வெளிநாட்டுக் கடனுக்கான வட்டிகளை மீளச் செலுத்த முடியாத நிலையில் 'இலங்கை வங்குரோத்து நாடு' என்ற பெயரையும் பெற்றுக்கொண்டது.

இத்தனை நெருக்கடிகளுக்கு மத்தியில் நாடு மீண்டுவிடும், அபிவிருத்தி நோக்கிய பாதையில் அடி வைக்கலாம் என்ற நம்பிக்கை எவருக்கும் இருக்கவில்லை. அதனால் சவால் மிகுந்த வரலாற்றுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள எவரும் முன்வரவில்லை. இத்தனை நெருக்கடிகளையும் மிகவும் அமைதியாக அவதானித்துக்கொண்டிருந்த ரணில் விக்கிரமசிங்க, தனது வாழ்நாள் ஆளுமையைக் கொண்டு வீழ்ச்சியடைந்த நாட்டை மீளக் கட்டியெழுப்பும் பணியை ஏற்றுக்கொண்டார். ஜனாதிபதியாகப் பொறுப்பேற்றார். உலகில் அராஜக நிலை உச்சமடைந்த பெருமளவான நாடுகள், பல வருடங்களாக முடங்கிக் கிடக்கும் போது ஜனாதிபதியின் வேலைத்திட்டத்தால் ஒரு வருடம் என்ற குறுகிய காலப்பகுதிக்குள் இலங்கைக்கு மீண்டெழும் இயலுமை கிட்டியது.

### சட்டம் ஒழுங்கைப் பாதுகாத்தல்

போராட்டம் என்ற பெயரில் அரச சொத்துகளை சேதப்படுத்திய சிலர் நாடு முழுவதும் வன்முறைகளைப் பரப்பி நாசவேலைகளில் ஈடுபட்டனர். அமைச்சர்கள்,அரசியல் தலைவர்கள் மற்றும் ஆதரவாளர்களின் வீடுகளை எரித்து சாம்பலாக்கியவர்கள், கொழும்பு றோயல் கல்லூரிக்கு நன்கொடையாக வழங்கத் தீர்மானித்திருந்த ஜனாதிபதியின் பிரத்தியேக சொந்த வீட்டிலுள்ள நூலகத்திற்கும் தீ மூட்டினர். இந்த நூலகத்தில் ஆசியாவின் பல முக்கியமான புத்தகங்கள் இருந்தன. இவ்வாறு பொருளாதாரம், சட்டம் மற்றும் ஒழுங்கு என்பன நலிவடைந்து கிடந்த நாட்டை ரணில் விக்கிரமசிங்க பொறுப்பேற்றுக் கொண்டார்.

மக்கள் போராட்டங்களை நடத்தினார்கள். ஆனால், அரசியல் நோக்கம் கொண்ட ஒரு தரப்பு வன்முறையாளர்கள் நாட்டின் ஜனநாயகத்தின் மீது பார்வையைத் திருப்பியிருந்தனர். நாட்டுத் தலைவரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகை, இந்நாட்டின் முக்கியமான நிர்வாக நிறுவனங்களில் ஒன்றான ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் உள்ளிட்ட இடங்களை தம்வசப்படுத்திக் கொண்டனர். அதன் பின்னர் இந்நாட்டு ஜனநாயகத்தின் உச்ச அம்சமாகக் கருதப்படும் பாராளுமன்றத்தைக் கையகப்படுத்தும் முயற்சிகளும் இடம்பெற்றன. அதனையடுத்து நிறைவேற்று மற்றும் சட்டவாக்கத் துறைகளை முடக்க மேற்கொள்ளப்படவிருந்த நாசகார செயற்பாடுகளுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானங்களை எடுத்து, உத்தரவுகளைப் பிறப்பித்தார். இதனால் பொதுமக்களின் பாதுகாப்பு உறுதிசெய்யப்பட்டது. சட்டம் உரிய முறையில் நடைமுறைப்படுத்தப்பட்டது. நாட்டில் அமைதி திரும்பியது.

### வரிசை யுகம் நிறைவு

மின் தடை, உணவுத் தட்டுப்பாடு, எரிபொருள் தட்டுப்பாடு, எரிவாயுக்கான வரிசை என்பவற்றினால் மக்கள் அன்றாடம் நெருக்கடிகளைச் சந்தித்தனர். எரிபொருள் தட்டுப்பாட்டினால் வீதிகளிலும் கூட அமைதியின்மை நிலையே காணப்பட்டது. கொழும்பிலும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்ட நிலையில், வீதிகளை மறித்து, மக்கள் பல எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டனர்.

வீதிகளில் இறங்கிப் போராடினாலும் அடுத்து தாம் எந்தப் பாதையில் செல்வது என்ற கேள்விக்குறியுடன் இருந்த மக்கள் பெரும் நெருக்கடியில் சிக்கிக்கொண்டிருந்தனர். அந்த நெருக்கடியால் கிளர்ச்சி மனப்பான்மை, அமைதியின்மை, நிச்சயமற்ற தன்மை ஆகியவற்றினால் மக்கள் விழிபிதுங்கி நின்றனர். பிறக்கும் புதிய நாளில் நம்பிக்கையை மக்கள் இழந்திருந்தனர். எந்த வரிசையில் நிற்பது என்று தெரியாமல் திண்டாடி வந்தனர்.

ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பொறுப்பெற்ற பின்னர், அத்தியாவசியமான எரிவாயு, எரிபொருள், உணவுப் பொருட்கள் உள்ளிட்ட சேவைகளையும், தேவைகளையும் படிப்படியாகப் பெற்றுக்கொடுக்க ஆரம்பித்தார். அதேநேரம், சரியான பொருளாதார முன்னேற்றத்திற்கான திட்டங்களை வகுத்தார். வரிசை யுகத்திற்கும் முற்றிப்புள்ளி வைக்கப்பட்டது. விரக்தியை ஏற்படுத்திய பணவீக்கத்தைக் குறைக்க ஆரம்பித்தார். நாட்டின் பிரச்சினையைக் கண்டறிந்தார். பிரச்சினைகளுக்கான குறுகிய, இடைக்கால, நீண்டகால திட்டங்களை வகுத்து, நோய்க்குத் தேவையான சரியான மருந்தை ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக கொடுக்க ஆரம்பித்தார்.

### சர்வதேச நாணய நிதியத்துடனான வேலைத்திட்டம்

பொருளாதார பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கான அல்லது நெருக்கடியிலிருந்து மீள்வதற்கான ஒரே வழியாக சர்வதேச நாணய நிதியத்தை நாடுவதை மாத்திரமே செய்ய முடியுமென அறிந்திருந்த ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்துடன் மேற்கொண்ட பல சுற்று நீண்ட பேச்சுவார்த்தைகளை வெற்றிப் பாதையில் நகர்த்தினார். நீடிக்கப்பட்ட வசதிகளை இலங்கைக்கு பெற்றுக்கொடுக்க சர்வதேச நாணய நிதியம் இணக்கம் தெரிவித்தது. உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உள்ளிட்ட நிதி நிறுவனங்களுடன் இணைந்து நாட்டிற்கு கடன் வசதிகளைப் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டமும் ஆரம்பிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வேலைத்திட்டத்திற்கு அயல் நாடான இந்தியாவின் ஆதரவு பெருமளவில் கிடைத்தது. பங்களாதேஷ் மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளிடத்திலிருந்து மனிதநேய உதவிகளும் கிடைத்தன. அதேபோல் சீனா, இந்தியா மற்றும் ஜப்பான் போன்ற இந்நாட்டின் பிரதான கடன் வழங்குநர்களுடன் பெரிஸ் சமவாய நாடுகளும் கடன் மறுசீரமைப்பு முயற்சிகளுக்கு இணக்கம் தெரிவித்தன. கடன் மறுசீரமைப்பின் பலன்களை அடைந்துகொள்ள இலங்கையால் முடிந்துள்ளது. அந்த வரிசையில் உள்நாட்டு கடன்களையும் மறுசீரமைக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது.

இலங்கையின் வெளிநாட்டு கடன்களை விடவும் உள்நாட்டு கடன்கள் அதிகமாக காணப்படுவதால்இ நாம் மீண்டும் வங்குரோத்து நிலையை அடையாமல் இருக்க கடன் மறுசீரமைப்பு அவசியமானது. இலங்கை வங்குரோத்து நிலையிலிருந்து மீண்டு கடன்களை மீளச் செலுத்தும் நிலைக்கு வரவேண்டுமாயின் உள்நாட்டு கடன் மறுசீரமைப்பை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் வலியுறுத்தப்பட்டது. ஆனால் பொது மக்களின் வங்கிக் கணக்குகள் முடக்கப்படும், நிதித்துறைக்கு பெரும் பாதிப்புகள் ஏற்படும் போன்ற போலிப் பிரசாரத்தை எதிர்கட்சிகள் முன்னெடுத்தன. ஊழியர் சேமலாப மற்றும், நம்பிக்கை நிதியங்களுக்கு பாதிப்பு ஏற்படும் என்று கூச்சலிட்டார்கள்.

ஆனால், உள்நாட்டு கடன் மறுசீரமைப்புக்கள் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டன. பொது நிதியங்களுக்கும் 57 மில்லியன் வங்கிக் கணக்குகளுக்கும் எவ்வித பாதிப்புக்களும் ஏற்படவில்லை. உண்மையாகவே இந்த கடன் மறுசீரமைப்பு பணிகள் அரசியல் வாதிகளால் மேற்கொள்ளப்படவில்லை. அதற்கான திட்டமிடலை திறைசேரி, மத்திய வங்கி மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு நிதி ஆலோசகர்களின் பங்கேற்புடனேயே முன்னெடுக்கப்பட்டது.

இவ்வாறு திட்டமிடப்பட்ட வகையில் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களின் பலனாக மக்கள் தற்போது நிம்மதிப் பெருமூச்சுவிட முடிந்துள்ளது. ஓரளவு நிவாரணம் கிட்டியுள்ளது. முடங்கிக் கிடந்த நாடு நகர ஆரம்பித்துள்ளது.

### விவசாயப் புரட்சி

இலங்கை விவசாய நாடு என்ற வகையில் விவசாயத்துறையில் கவனம் செலுத்துவது மிக முக்கியமானதாகும். கடந்த காலங்களில் விவசாயிகள் எதிர்கொண்ட பெரும்பாலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளது. ஆனால், இது போதுமானதாக இல்லை. விவசாய நவீனமயமாக்கல் காலத்தின் கட்டாயம் என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தி வருகிறார். இதனை விரைந்து முன்னெடுப்பதால் விவசாயிகளுக்கு நம்பிக்கை பிறந்துள்ளது.

2020/21 ஆம் ஆண்டுகளில் இயற்கை உரம் கட்டாயமாக்கப்பட்டதால் விவசாயிகள் பல நெருக்கடிகளை எதிர்கொண்டனர். உணவுப் பஞ்சம் ஏற்படும் நிலை வந்தது. இதனை அறிந்துகொண்ட ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, விவசாயிகளுக்கு அவசியமான உர வகைகளை உரிய விதத்தில் பெற்றுக்கொடுக்க உத்தரவிட்டார். இதனால் பெரும் உணவுப் பஞ்சத்தில் விழுந்துவிடாமல் நாடு தப்பிக் கொண்டது.

விவசாய அறுவடைகள் மேம்பட்டதன் பலனாக நாட்டின் உணவுத் தட்டுப்பாடு சடுதியாகத் தணிந்தது. 2022/2023 களில் தன்னிறைவான நெல் உற்பத்தியை மேற்கொள்ள முடிந்தது. குறைந்த வருமானம் ஈட்டும் 02 மில்லியன் குடும்பங்களுக்கு 10 கிலோ அரிசியை இரு மாதங்களுக்கு இலவசமாக வழங்க முடிந்தது. அரிசியின் விலை குறைந்தது. நுகர்வோருக்கும் நிவாரணம் கிடைத்தது.

விவசாயத்துறையை நவீனமயப்படுத்துவதற்காக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்துச் செல்லும் வேலைத்திட்டங்களின் கீழ் 2025 ஆம் ஆண்டளவில் இந்நாட்டுத் தேவைக்கான 80% விவசாய உற்பத்திகளை உள்நாட்டிலேயே மேற்கொள்ள முடியும் என விவசாய அமைச்சர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நிலையான விவசாய அபிவிருத்தியின் ஊடாக 2048 ஆம் ஆண்டில் "அபிவிருத்தியடைந்த இலங்கை" என்ற இலக்கை அடைய அவசியமான ஏற்றுமதியை இலக்குவைத்த விவசாய உற்பத்திகளை ஊக்குவிப்பதே நோக்கமாகும்.

உள்ளூர் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்தல் மற்றும் இளைஞர்களை "புதிய தொழில்நுட்பம் சார்ந்த விவசாயத் தொழில்முனைவோராக" மாற்றுதல் மற்றும் விவசாயத் துறைசார் இலக்குகளை அடைதல். ஜனாதிபதியின் பணிப்புரைக்கமைய ருஹுணு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் காமினி சேனாநாயக்க தலைமையில் அனைத்து நிறுவனங்களையும் ஒழுங்குபடுத்தும் வகையில் விவசாயத் துறையை நவீனமயப்படுத்துவதற்கான தேசிய கொள்கைக் கட்டமைப்பொன்று தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. இந்தக் கொள்கைக் கட்டமைப்பு ஓகஸ்ட் 2023 இறுதிக்குள் நிறைவுசெய்யப்படவுள்ளது.

விவசாயத்தின் உற்பத்தித்திறனை அதிகரிப்பதற்காக விவசாய நவீனமயமாக்கல் செயலகம் நிறுவப்பட்டுள்ளது. மேலும், பல்வேறு வெளிநாட்டு உதவித் திட்டங்களின் மூலம் விவசாயத்தை நவீனமயமாக்கும் பல வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி விவசாய நவீனமயமாக்கல் திட்டத்தின் ஊடாக விவசாய பொருளாதாரம் ஒன்றைக் கட்டமைக்க முடியும் என்பதே ஜனாதிபதியின் நம்பிக்கையாகும்.

### மறுசீரமைப்பு வேலைத்திட்டம்

போட்டித்தன்மை நிறைந்த உலகை எதிர்கொள்ளும் வகையில் நாட்டின் பொருளாதாரத்தை வடிவமைக்கத் தேவையான பொருளாதார சீர்திருத்தங்கள் ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் கீழ் படிப்படியாக நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன. இந்தப் பொருளாதார மறுசீரமைப்புகள் மூலம், தவறான கொள்கைகள், பலவீனமான திட்டங்கள் மற்றும் தோல்வியடைந்த திட்டங்களுக்குப் பதிலாக, புதிய சிந்தனைகளுடன் புதிய பாதையில் நாட்டைக் கொண்டுசெல்ல வேண்டும் என்பதையே ஜனாதிபதி வலியுறுத்துகிறார்.

இருப்பினும், பாரம்பரிய அரசியலில் ஈடுபட்டுள்ள சில குழுக்கள் இந்தப் பொருளாதார மறுமலர்ச்சியைத் தடுக்க பல்வேறு முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன. பொருளாதார மறுசீரமைப்புகள் குறித்து மக்களிடையே தேவையற்ற அச்சத்தை ஏற்படுத்த முயற்சிக்கின்றன. "நாடு விற்கப்படப் போகிறது" என்ற முழக்கத்தை முன்வைத்து மக்களைத் தவறாக வழிநடத்தி வருகின்றனர்.

நவீன உலகத்துக்கும் நவீன தொழில்நுட்பத்துக்குமேற்றவாறு நமது பொருளாதாரத்தை வடிவமைக்காவிட்டால் பின்னோக்கிச் செல்லவேண்டியிருக்கும். அவ்வாறான கொள்கைகளினால் நாடு பொருளாதார காலனித்துவ நிலைமைக்குள் தள்ளப்படும் என்பதோடு, நாட்டை விற்றாலும் கடன் பெற முடியாது என்ற நிலைமை உருவாகிவிடும்.

எனவே, எமது நாட்டுக்கு நிலையான அபிவிருத்தியையும் வெற்றியையும் பெற்றுக்கொடுக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முன்மொழியப்பட்ட பொருளாதார மறுசீரமைப்புகள் முன்னெடுக்கப்பட வேண்டும். இந்த மறுசீரமைப்புகளின் ஊடாக இலங்கையின் நவீனமயமாக்கல் துரிதப்படுத்தப்பட்டு அர்த்தமுள்ளதாக இருக்கும், சந்தை வாய்ப்புகள் விரிவடையும், அபிவிருத்தி முயற்சிகளுக்கு சர்வதேச சமூகம் அதிக பங்களிப்பை வழங்கும். எனவே, 'மழையில்லாத தெளிவான வானத்தில் மின்னலைத் தேடி காலம் கடத்துவது' வீண் முயற்சியாகும் என்பதை மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

### சமூக நலன்புரித் திட்டங்கள்

பொருளாதார மீட்சி தேவைப்படும் மக்களுக்கு ஆதரவளிக்கும் வகையில் ஜனாதிபதியின் வழிகாட்டுதலின் கீழ் "அஸ்வெசும" சமூக நலத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதன்படி, மாற்றுத்திறனாளிகள், பாதிக்கப்படக்கூடியவர்கள், வறியவர்கள் மற்றும் மிக வறியவர்கள் ஆகிய 04 சமூகப் பிரிவுகளின் கீழ் "அஸ்வெசும" நலன்புரிப் பலன்கள் வழங்கப்படுகின்றன. ஊனமுற்றோர், முதியவர்கள் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வழமை போன்று உரிய கொடுப்பனவுகள் வழங்கப்படும்.

எவருக்கும் அநீதி இழைக்கப்படாமலும், எவரும் கைவிடப்படாமலும் இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு ஜனாதிபதி பணிப்புரை விடுத்துள்ளார். இதற்கு அரசியல் சாயம் பூச சிலர் முயற்சித்தாலும், இது உண்மையில் சமூக நலனை நோக்கமாகக் கொண்ட வேலைத்திட்டமாகும்.

கடந்த வருடம் அரசாங்கம் 144 பில்லியன் ரூபாவை நலன்புரி நலன்களுக்காக செலவிட்ட போதிலும், இந்த வருடம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் ஆரம்பிக்கப்பட்ட "அஸ்வெசும" வேலைத்திட்டத்திற்காக 206 பில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்ய எதிர்பார்த்துள்ளதாக நிதியமைச்சு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியம் மற்றும் உலக வங்கியுடனான பேச்சுகளில் 187 பில்லியன் ரூபாவை இந்நாட்டின் வறிய மக்களின் மேம்பாட்டிற்காகப் பயன்படுத்துமாறு முன்மொழிந்துள்ள போதிலும், கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் அரசாங்கம் குறித்த தொகைக்கு மேலதிகமாக 62 பில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளமை சிறப்பம்சமாகும்.

### உலகிற்கு திறக்கப்படும் இலங்கையின் கதவுகள்

பொருளாதார வளர்ச்சியை ஏற்படுத்த இலங்கையின் கதவுகள் உலகிற்காகத் திறக்கப்பட வேண்டும் என்பதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். சர்வதேச வர்த்தக நிறுவனங்களால் எடுக்கப்படும் தனித்தனியான தீர்மானங்களில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தித்து, அந்தச் செயற்பாடுகளை மேலும் வினைத்திறன்மிக்கதாகவும் ஒழுங்காகவும் மேற்கொள்ளும் வகையில், இலங்கையில் சர்வதேச வர்த்தக அலுவலகத்தை (ITO) நிறுவுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சம்பந்தப்பட்ட அனைத்து நிறுவனங்களையும் ஒருங்கிணைப்பதன் மூலம், நாட்டின் பொருளாதாரத்திற்குத் தேவையான ஒத்துழைப்புகளை சர்வதேச துறையிடமிருந்து பெற்றுக்கொடுக்க முடியும். முதலாவதாக தெற்காசியாவின் பரந்துபட்ட கூட்டமைப்பான (Regional Comprehensive Economic Partnership - RCEP) அமைப்பில் இணைந்துகொள்ளும் முயற்சிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதோடு இலங்கையில் வெளிநாட்டு முதலீடுகளுக்கு சாதகமான சூழல் மற்றும் சுற்றுலாத்துறை ஊக்குவிப்பு முயற்சிகளும் சாதகமான முறையில் முன்னெடுக்கப்படு வருகின்றன.

### டிஜிட்டல் மயமான இலங்கையின் பசுமைப் பொருளாதாரம்

இலங்கையின் அரசாங்கத்துறையின் செயற்பாடுகளை செயற்றிறன் மிக்கதாக மாற்றமால் பலப்படுத்துவது கடினம் என்பதால் டிஜிட்டல் மயமாக்கல் செயற்பாடுகள் கட்டாய தேவையாகியுள்ளன. அதனால் அரசாங்கத் துறையை டிஜிட்டல் மயமாக்கி நாட்டின் டிஜிட்டல் மயமாக்கல் பணிகளைத் துரிதப்படுத்துவதே ஜனாதிபதியின் இலக்காகும்.

செயற்கை நுண்ணறிவு தொடர்பில் அதிக அவதானம் செலுத்த வேண்டும் என்பதையும் ஜனாதிபதி வலியுறுத்தியுள்ளார். அதற்காக அயல் நாடான இந்தியாவின் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ளும் அதேநேரம், போட்டித்தன்மை மிக்க பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதை இலக்காகக்கொண்டே பசுமைப் பொருளதார திட்டம் முன்மொழியப்பட்டுள்ளது.

### 2048 அபிவிருத்தி அடைந்த இலங்கையை நோக்கி

அடுத்த ஐந்து வருடங்களில் இலங்கையை உயர் வருமானம் ஈட்டும் நாடாக மாற்றுவதே ஜனாதிபதியின் எதிர்பார்ப்பாகும். அத்தோடு, 2048 அபிவிருத்தி அடைந்த இலங்கையின் பங்குதாரர் ஆவதற்கு இளைஞர்களுக்கு உள்ள வாய்ப்புகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டியுள்ளார். அதேபோல், நாட்டின் இனப் பிரச்சினையை அடுத்த தலைமுறை மீது சுமத்தாமல் நல்லிணக்கம் குறித்த செயற்பாடுகளைத் துரிதப்படுத்தியுள்ளார்.

கலங்கரை விளக்கம் அதன் ஒளியைக் காட்டி வழியைக் காட்டும் போது நல்ல மனநிலையிலிருந்து எவரும் இருளைத் தெரிவு செய்ய மாட்டார்கள். கப்பல் மீதும் அது செலுத்தப்படும் திசையின் மீதும் நம்பிக்கை இருக்குமாயின் இந்நாட்டின் முன்னேற்றத்தை எவராலும் தடுக்க முடியாது.

**கமல்**



# கனேடிய உயர்ஸ்தானிகர் - ரவிகரன் சந்திப்பு; சமகால விடயங்கள் தொடர்பில் ஆராய்வு!

முல்லைத்தீவு நிருபர்

இலங்கைக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் மற்றும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் ஆகியோர் நேற்று முன்தினம் (19) சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

இச்சந்திப்பானது முல்லைத்தீவு, கள்ளப்பாடு வடக்கு பகுதியில் அமைந்துள்ள முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் துரைராசா ரவிகரனது மக்கள் தொடர்பகத்தில் இடம்பெற்றது.

இச்சந்திப்பின் ஆரம்பத்தில் தமிழர் இனப்படுகொலை நினைவேந்தல் தினத்தை அங்கீகரிக்கும் விதத்தில் கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்த கருத்துகளுக்கு ரவிகரனால் நன்றி தெரிவிக்கப்பட்டது.

தொடர்ந்து இலங்கையின் சமகால அரசியல் விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டதுடன் முல்லைத்தீவு மாவட்டத்தில் சமகாலத்தில் இடம்பெறும் விடயங்கள் குறித்தும் கவனஞ்செலுத்தப்பட்டது.

குறிப்பாக, கொக்குத்தொடுவாய்ப் பகுதியில் இனங்காணப்பட்ட மனிதப் புதைகுழி அகழ்வுப் பணிகள் சர்வதேச நிபுணத்துவத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுவதுடன் குறித்த விடயத்தில் சர்வதேச கண்காணிப்பு இருக்கவேண்டுமெனவும் ரவிகரனால் இதன்போது கனேடிய உயர்ஸ்தானிகரிடம் வலியுறுத்தப்பட்டது.

அத்தோடு, கடந்த 14ஆம் திகதி வெள்ளிக்கிழமையன்று தண்ணிமுறிப்பு, குருந்தூர்மலையில் சைவவழிபாட்டுரிமை மறுக்கப்பட்ட விடயம் தொடர்பிலும் அங்கு வழிபாடுகளுக்கென சென்ற தமிழ்மக்கள் பொலிஸாரால் தாக்கப்பட்டிருந்தமை தொடர்பிலும் கனேடிய உயர்ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தப்பட்டது.



அத்துடன், குருந்தூர்மலையில் சைவ வழிபாடுகளை மேற்கொள்ளலாம் என்ற நீதிமன்றக் கட்டளையின் பிரதி மற்றும் கடந்த 14ஆம் திகதி குருந்தூர்மலையில் சைவ வழிபாடுகள் மறுக்கப்பட்டமை தொடர்பிலும் ஊடக அடக்குமுறை இடம்பெற்றமை தொடர்பிலும் மனித உரிமை ஆணைக்குழுவில் மேற்கொள்ளப்பட்ட முறைப்பாட்டுப் பிரதி என்பனவும் இதன்போது கனேடிய உயர்ஸ்தானிகரிடம் ரவிகரனால் கையளிக்கப்பட்டது.

இந்நிலையில், குறித்த சந்திப்பின்போது தன்னிடம் முறையிடப்பட்ட விடயங்கள் தொடர்பில் தாம் கவனஞ்செலுத்துவதாக கனேடிய உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ் உறுதியளித்திருந்தார்.

மேலும், இச்சந்திப்பில் சமூக செயற்பாட்டாளர்களான அன்ரனி ஜெயநாதன், பீற்றர் இளஞ்செழியன், இரத்தினம் ஜெகதீசன், ஊடகவியலாளர்களான சண்முகம் தவசீலன், விஜயரத்தினம் சரவணன் ஆகியோரும் கலந்துகொண்டு சமகாலத்தில் முல்லைத்தீவு மாவட்டத்தில் இடம்பெறும் விடயங்கள் தொடர்பில் கனேடிய உயர்ஸ்தானிகருக்கு தெளிவுபடுத்தியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

# திருநெல்வேலியில் 'உயிர்த்தெழும் பூமி வேளாண்மை' விவசாய பயிற்சிப் பட்டறை

## விவசாயிகள் ஆர்வத்துடன் பங்கேற்பு

யாழ். நிருபர்

ஆளவாழ்தல் அறக்கட்டளை நிறுவனத்தின் அனுசரணையுடன் 'உயிர்த்தெழும் பூமி வேளாண்மை' எனும் தொனிப்பொருளில் இயற்கை விவசாயம் தொடர்பான பயிற்சிப் பட்டறையை யாழ். மாவட்ட விவசாயப் பயிற்சி நிலையம் திருநெல்வேலியில் நேற்று முன்தினம் (19) ஆரம்பித்தது.

வடமாகாண பிரதி மாகாண விவசாயப் பணிப்பாளர் அஞ்சனாதேவி ஸ்ரீ ரங்கன் தலைமையில் இடம்பெற்றுவரும் இருநாள் தொழில்நுட்பப் பயிற்சிப்பட்டறைக்கு வளவாளராக இந்திய விவசாய ஆர்வலரும் அறுபதுக்கும் மேற்பட்ட நாடுகளுக்கு விவசாயம் தொடர்பான களவிஜயம் மேற்கொண்டுள்ளவரும் சர்வதேச பல்கலைக்கழகங்களில் சூழல்நேயமான நிலைபேறான விவசாய செயற்பாடுகள் தொடர்பான கருத்தரங்குகளை மேற்கொண்டு வருபவருமான மாரிமுத்து ரேவதி பங்கேற்று செயன்முறையுடன் கூடிய பயிற்சியை வழங்கினார்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மாகாண விவசாயப் பணிப்பாளர் சுகந்தினி செந்தில்குமரன் கலந்துகொண்டார்.

இப்பயிற்சிப் பட்டறையில் மண்ணைப் புதுப்பித்தல், நீர் முகாமைத்துவம், வினைத்திறனான சக்திப் பயன்பாடு, பயிர் முகாமைத்துவம், அறுவடையும் அறுவடைக்குப் பின்னரான தொழில்நுட்பங்கள், சந்தை முகாமைத்துவம் என பல கோணங்களில் கூறப்பட்ட புத்துயிர்ப்பூட்டும் விவசாயக் கருத்துகளை விவசாய ஆர்வலர்கள் ஆர்வமுடன் கேட்டறிந்தனர்.

இத்தொழில்நுட்பப் பயிற்சிப் பட்டறையில் விவசாயிகள் மற்றும் விவசாய ஆர்வலர்கள், விவசாயத் திணைக்கள உத்தியோகத்தர்கள் எனப் பலரும் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

# கைதடியில் வடமாகாண சபை சுகாதாரத் தொண்டர்கள் கவனயீர்ப்பு

சாவகச்சேரி நிருபர்



கைதடியில் அமைந்துள்ள வடமாகாண சபை முன்பாக நேற்று முன்தினம் (19) புதன்கிழமை காலை வடமாகாண சுகாதாரத் தொண்டர்கள் தமது நியமனத்தை உறுதிப்படுத்தக் கோரி கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சுகாதாரத் தொண்டர்கள் கருத்துத் தெரிவிக்கையில், நாம் 2002ஆம் ஆண்டிலிருந்து சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை ஊடாக வைத்தியசாலைகளிலும் சுகாதாரத் தொண்டர்களாகக் கடமையாற்றி வருகிறோம்.

எந்தவொரு கொடுப்பனவுமின்றி எமது பணத்தைச் செலவிட்டே தொண்டர்களாகப் பணியாற்றி வருகிறோம்.

தற்போது சம்பளமின்றி நாம் பணியாற்றி வருகின்ற நிலையில், வெளியிலிருந்து சுகாதாரப் பணியாளர் நியமனம் மேற்கொள்ளப்படுகின்றது. எமது நியமனம் தொடர்பில் எந்த விதமான முடிவும் எட்டப்படவில்லை என்றனர்.

# பொலிஸார் தவறு செய்தால் உடனடியாக அறியத்தரவும்

## வவுனியா எஸ்.எஸ்.பி. அதிரடி



வவுனியா நிருபர்

வவுனியா பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சி.பி.விக்கிரமசிங்கவுக்கும் ஊடகவியலாளர்களுக்குமான விசேட கலந்துரையாடலொன்று அண்மையில் அத்தியட்சகரின் காரியாலயத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது கருத்துத் தெரிவித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர், வவுனியா மாவட்டத்திலுள்ள பல பொலிஸ் நிலையங்களில் பொதுமக்களின் முறைப்பாடுகளை ஏற்க பொலிஸார் மறுக்கின்றனர். அதேவேளை, திருட்டுச் சம்பவங்கள் பற்றி பொதுமக்கள் பொலிஸாரிடம் முறையிடும்போதும் ஒரு சில பொலிஸார் அதன் உண்மையான பெறுமதிகளை மறைத்து தவறான பெறுமதிகளை முறைப்பாட்டில் பதிகின்றனரென எமக்குத் தகவல்கள் கிடைத்துள்ளன. இவ்வாறு செயற்படும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மீது நாம் கடுமையான நடவடிக்கை எடுப்போம். இது போன்ற சம்பவங்கள் வவுனியாவில் இடம்பெற்றால் பொதுமக்கள் உடனடியாக எமக்கு அறியத் தரவும் .

பொதுமக்கள் தன்னை எந்த நேரத்திலும் அழைக்க முடியுமென்றும் 071-8591340 குறித்த தொலைபேசி ஊடாக தகவல்களை நேரடியாகத் தமக்கு அறிவிக்க முடியுமெனவும் மேலும் தெரிவித்தார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# மானிப்பாயில் தனியார் பஸ் சாரதி - நடத்துநர் மீது தாக்குதல்

யாழ். நிருபர்

யாழ்ப்பாணம், மானிப்பாய் - காரைநகர் வழித்தடத்தில் சேவையில் ஈடுபடும் தனியார் பஸ்ஸின் மீதும் அதன் சாரதி மற்றும் நடத்துநர் மீதும் நேற்று முன்தினம் (19) புதன்கிழமை இரவு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குறித்த பஸ் காரைநகர் - மானிப்பாய் வீதியில் பயணித்துக்கொண்டிருந்தவேளை பஸ்ஸை வழிமறித்த இனந்தெரியாத குழுவொன்று பஸ்ஸின் கண்ணாடிகளை அடித்து நொறுக்கி, சாரதி மற்றும் நடத்துநர் மீது தாக்குதல் நடத்தியுள்ளது.

தாக்குதல் சம்பவம் தொடர்பில் காரைநகர் சிற்றூர்தி சங்கத்துக்கு அறிவித்துள்ளனர். அத்துடன் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்துள்ளனர்.

# வவுனியாவில் திடீரென தீப்பற்றி எரிந்த உணவகம்

வவுனியா நிருபர்

வவுனியா நகரில் உணவகமொன்று திடீரெனத் தீப்பற்றி எரிந்து முழுமையாக நாசமாகியுள்ளது.

வவுனியா நகர், கண்டி வீதி, இரண்டாம் குறுக்குத்தெருச் சந்திக்கு எதிரே இருந்த உணவகமொன்றே நேற்று முன்தினம் (19) இரவு 8.20 மணியளவில் திடீரெனத் தீப் பிடித்து எரிந்துள்ளது.

குறித்த உணவகத்தில் கடமையாற்றுபவர் இதனை அவதானித்து, வவுனியா மாநகர சபை தீயணைப்புப் பிரிவினருக்குத் தகவல் வழங்கிய நிலையில், அங்கு வந்த தீயணைப்புப் பிரிவினர் தீயைக் கட்டுப்படுத்த கடும் முயற்சி செய்தபோதும் உணவகம் முழுமையாகத் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

இருப்பினும், தொடராக அமைந்துள்ள வர்த்தக நிலையங்களுக்கு தீப்பரவல் ஏற்படாதவண்ணம் கட்டுப்படுத்தப்பட்டது. இத்தீப்பரவலுக்கான காரணம் எரிவாயு சிலிண்டர் வெடிப்பாக இருக்கலாம் என சந்தேகிக்கப்படுகின்றது. குறித்த தீ விபத்துக்கான காரணம் குறித்து வவுனியா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

# பொலிஸ் போக்குவரத்து அதிகாரியின் மோட்டார் சைக்கிள் எரிந்து நாசம்

ராமு தனராஜா

தியத்தலாவ பொலிஸ் நிலையத்தின் போக்குவரத்துப் பிரிவு அதிகாரியின் மோட்டார் சைக்கிளை எரித்து நாசம் செய்தார் என்ற குற்றச்சாட்டில் சந்தேகத்தின் பேரில் ஒருவர் நேற்று முன்தினம் மாலை (19) கைதுசெய்யப்பட்டதாக பண்டாரவளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் தெரிவித்தார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் எல்பிட்டிய பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடையவர் எனவும் 12 வருட இராணுவ சேவையின் பின்னர் இராணுவத்திலிருந்து விலகி தற்போது கல்கந்த, தியத்தலாவ பிரதேசத்தில் தற்காலிகமாக வசிப்பவரெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 18ஆம் திகதி இரவு பொலிஸாரின் சோதனை நடவடிக்கையின்போது தியத்தலாவ நகரில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் திருடப்பட்டு தீயிட்டு நாசமாக்கப்பட்டது.



இச்சம்பவம் தொடர்பில் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரதீப் களுபஹனவின் ஆலோசனையின் பேரில் தியத்தலாவ பொலிஸ் நிலைய அதிகாரிகள் பொலிஸ் மோப்பநாயின் உதவியுடன் மேற்கொள்ளப்பட்ட தேடுதலின் போது சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குறித்த சந்தேக நபரை பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# சுற்றிவளைப்பில் 13 சந்தேக நபர்கள் ஹெரோயின், கஞ்சாவுடன் கைது

ஆர்.தனராஜா

பண்டாரவளை குற்றத் தடுப்புப் புலனாய்வுப் பிரிவு அதிகாரிகளினால் நேற்று முன்தினம் மாலை (19) மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது 5,877 மில்லிகிராம் ஹெரோயின் மற்றும் 11,545 மில்லிகிராம் கஞ்சாவுடன் 13 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களில் ஹெரோயின் கடத்தலில் ஈடுபட்ட ஒருவரும் கஞ்சா மற்றும் ஹெரோயின் வைத்திருந்த 12 பேரும் உள்ளடங்குவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். சந்தேக நபர்களை பண்டாரவளை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# நீர்த்தேக்க நீர் வற்றிப்போவதால் விவசாய நிலங்கள் கருகிப் பாதிப்பு

## ஏரி நீரை வழங்குமாறு மக்கள் கோரிக்கை

ஏ.ஏ.எம்.பாயிஸ்

உடவளவ நீர்த்தேக்கத்தின் நீர்மட்டம் குறைந்து வருவதால் தாழ் நிலங்களுக்கான நீர் குறைந்தளவிலேயே விநியோகிக்கப் படுவதால் வயல் நிலங்கள் காய்ந்து கருகி சேதம் ஏற்பட்டு வருவதாக இப்பிரதேச விவசாய அமைப்பினர் சுட்டிக்காட்டுகின்றனர். எனவே, சந்திரிக்காவெவ ஏரியின் நீரை எதிர்வரும் 30 நாட்களுக்கு உடவளவ நீர்த்தேக்கத்துக்கு விநியோகிக்குமாறு விவசாய அமைப்புகள் கோரிக்கை விடுக்கின்றன.

இவ்வமைப்பினர் நேற்று உடவளவ வளவில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பொன்றிலேயே இத்தகவலை வெளியிட்டனர். சந்திரிகா ஏரியின் நீர் விநியோகம் குறைக் கப்பட்டமையால் உடவளவ நீர்த்தேக்கத்துக்கான விநியோகம் குறைந்துள்ளதாகவும் இதனால் உடவளவ நீர்த்தேக்கத்தை நம்பி விவசாய நடவடிக்கைக ளில் ஈடுபடும் நிலங்களுக்கு விநியோகிக்கப்படும் நீரின் அளவு மிகவும் குறைக்கப்பட்டுள்ளதால் இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இவர்கள் தெரிவித்தனர்.

இச்சந்திப்பின்போது சந்திரிக்காவெவ ஹல்மில்ல பிரிவு, குட்டிகல பிரிவு, விவசாய அமைப்புகளின் தலைவர்கள், விவசாயிகள் தமது பிரச்சினைகளை ஊடகங்களுக்கு வெளியிட்டது மட்டுமல்லாமல், சந்திரிக்காவெவ ஏரியின் நீரை எதிர்வரும் 30 நாட்களுக்கு உடவளவ நீர்த்தேக்கத்துக்கு விநியோகிக்குமாறும் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். மேற்படி நீர்த்தேக்கங்கள் ஏரிகள், குளங்களைச் சூழவுள்ள பகு திகளுக்கு மழையில்லாத கார ணத்தினால் இப்பிரதேசத்தில் கடும் வரட்சி நிலவுகிறது. இதனால் மழை கிடைக்கும் வரை விவசாய நிலங்களுக்கான நீரை முடிந்த வரையில் முறையாக வழங்குமாறு இவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். உடவளவ சமனலவெவ நீர்த்தேக்கங் கள் நீர் மின்சாரத்தை உற்பத்தி செய்யவும் விவசாய நிலங்களின் நன்மைக்காகவும் உருவாக்கப்பட்ட இரட்டை நோக்குத் திட்டம் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

# அம்பியூலன்ஸ் - பாடசாலை வேன் மோதி ஆறு மாணவர்கள் வைத்தியசாலையில் அனுமதி



ஏ.ஏ.எம்.பாயிஸ்

அம்பியூலன்ஸ் வாகனமும் பாடசாலை சேவை வேனும் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளன. இதனால் காயமடைந்த நிலையில் 6 மாணவர்கள் பலாங்கொடை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச்சம்பவம் நேற்று (20) பலாங்கொடை - இரத்தினபுரி வீதி உடவெல என்ற இடத்தில் இடம்பெற்றுள்ளது. கொழும்பு நோக்கிச் சென்றுகொண்டிருந்த தியத்தலாவை இராணுவ முகாம் அம்பியூலன்ஸ் பலாங்கொடை பிரதேச பாடசாலை மாணவர்களை ஏற்றி வந்த வேனுடன் நேற்றுக்காலை 6.20 மணியளவில் மோதியுள்ளது. பாடசாலை மாணவர் போக்குவரத்துச் சேவை வேனின் சாரதியும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ஓப்பநாயக்க பொலிஸார் விபத்துக் குறித்த மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.


தேசிய லொத்தர் சபை National Lotteries Board
புதன்கிழமை 2023.07.19
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5180 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 23,571,200.00
ஆங்கில எழுத்து M — வெற்றி இலக்கங்கள் 6 9 1 7 1 2

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3422 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 69,664,564.00
ஆங்கில எழுத்து Y — வெற்றி இலக்கங்கள் 04 11 44 80

லகி 7 Lucky — சீட்டிழுப்பு இலக்கம் 0006
வெற்றி இலக்கினம் கன்னி — வெற்றி இலக்கங்கள் 1 9 1 1 7 6
L7 இலக்கம் 2 0
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1210 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 100,636,130.40
ஆங்கில எழுத்து D — வெற்றி இலக்கங்கள் 02 10 58 79 — விசேட எழுத்து D

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 489 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,572,620.60
வெற்றி இலக்கினம் மிதுனம் — வெற்றி இலக்கங்கள் 25 35 52 53 — விசேட இலக்கினம் மிதுனம்

Mega Power — சீட்டிழுப்பு இலக்கம் 1528 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 401,512,616.00
ஆங்கில எழுத்து E — சுப்பர் இலக்கம் 26 — வெற்றி இலக்கங்கள் 18 28 33 49
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

# 87ஆவது அகவையை நோக்கிய பயணத்தில் கால் பதிக்கும் கண்டி விவேகானந்தா






கண்டி விவேகானந்தாக் கல்லூரி 1837 ஆம் ஆண்டு கண்டி பஜார் பாடசாலை என்ற பெயரில் ஆரம்பிக்கப்பட்டு 1872 ஆம் ஆண்டு சீ.எம்.எஸ். தமிழ்க் கலவன் பாடசாலையாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்நிலையில், 1962 ஆம் ஆண்டு இப்பாடசாலையை அரசாங்கம் பொறுப்பேற்றுக்கொண்டது. 1994 ஆம் ஆண்டு அப்போதைய அதிபர் நா. நாமதேவனால் மத்திய மாகாணக் கல்வித் திணைக்களத்தின் அனுமதியோடு இவ்வித்தியாலயத்துக்கு விவேகானந்தா தமிழ் வித்தியாலயம் எனப் பெயர் சூட்டப்பட்டது.இவ்வாறான நிலையில்,2000ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தர வர்த்தகப் பிரிவு ஆரம்பிக்கப்பட்டு விவேகானந்தா தமிழ் மகா வித்தியாலயமாகத் தரமுயர்த்தப்பட்டது. இதேவேளை, தற்போதைய அதிபர் ஆர். கலையரசியின் முயற்சியினால் இப்பாடசாலை விவேகானந்தாக் கல்லூரி எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டது. இந்நிலையில், கல்லூரியின் 187 அகவை முன்னிட்டு கண்டி நகர வீதிகளில் நேற்று முன்தினம் நடைபவனி இடம்பெற்றது. இந்நிகழ்வில் கௌரவ விருந்தினர்களாக மத்திய மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஆர். சத்தியேந்திரா, கண்டி தமிழ் வர்த்தக சங்கத் தலைவர் ப. குமாரதாஸ், பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஏ.ஆர்.எப். அமீன், கோட்டக்கல்விப் பணிப்பாளர் எஸ். தமிழ்ச்செல்வன், உதவிக் கல்விப் பணிப்பாளர் எஸ். எஸ். ரமேஷ்பாபு, வர்த்தக சமூகத்தினர், இந்து இளைஞர் மன்றத்தினர், பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகள், ஊடகவியலாளர்கள்மற்றும் சமூக நல நிறுவனர்களைச் சார்ந்தவர்கள் எனப் பலர் கலந்து சிறப்பித்தனர்.

**படமும் தகவலும்:** *கண்டி இரா. அ. இராமன்*








■ தோப்பூர்

மூதூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட தோப்பூரிலிருந்து பள்ளிக்குடியிருப்பு வரையிலான வீதி புனரமைப்பு இடைநடுவில் கைவிடப்பட்டுள்ளதால் போக்குவரத்துக்கு சிரமமாக உள்ளதாகவும் இவ்வீதியை புனரமைத்துத் தருமாறும் பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

பல தசாப்தங்களின் பின்னர் புனரமைக்கப்பட்ட இவ்வீதியானது தோப்பூர் பிரதான சந்தியிலிருந்து பள்ளிக்குடியிருப்பு கிராமத்தின் நுழைவாயில் வரையிலான ஒரு கிலோ மீற்றர் வரையிலான வீதியே இவ்வாறு புனரமைக்கப்படாதுள்ளது.

இவ்வீதியால் மோட்டார் சைக்கிள், முச்சக்கர வண்டி, கார் மற்றும் துவிச்சக்கரவண்டி உள்ளிட்ட வாகனங்கள் பயணம் செய்ய முடியாதுள்ளதாகத் தெரிவிக்கும் பொதுமக்கள், தற்போது விடுபட்டுள்ள வீதிகள் மீண்டும் புனரமைக்கப்படுவதனால் இவ்வீதியையும் புனரமைத்துத் தருமாறு உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கின்றனர்.





அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தில் இஸ்லாமிய புதுவருடம் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமது சாபிர் தலைமையில் வியாழக்கிழமை(20) இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலை நிகழ்ச்சிகள் மற்றும் வினா - விடைப் போட்டிகள் இடம்பெற்று வெற்றிபெற்றவர்களுக்கான பரிசுப் பொருட்களும் வழங்கப்பட்டன. மேலும் இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர், நிர்வாக உத்தியோகத்தர், நிர்வாக கிராம உத்தியோகத்தர், கணக்காளர், உதவித் திட்டமிடல் பணிப்பாளர், சமுர்த்தி முகாமையாளர்கள் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

**படங்கள்:** திராய்க்கேணி செய்தியாளர்



திருகோணமலை பொது வைத்தியசாலை அபிவிருத்தி குழுவின் ஏற்பாட்டில் நோயாளர்களின் நலன் கருதி நலன்புரி கடையொன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது. அபிவிருத்திக் குழுவின் தலைவர் தயானந்த ஜயவீர, திருகோணமலை பொது வைத்தியசாலை பணிப்பாளர் ஆகியோர் இணைந்து கடையினை திறந்து வைத்தனர்.

**படம்:** கந்தளாய் செய்தியாளர்

# அம்பாறை சிறுதொழில் முயற்சியாளர்களின் விற்பனைக் கண்காட்சி



■ பெரியநீலாவணை செய்தியாளர்

அம்பாறை மாவட்ட சிறு தொழில் முயற்சியாளர்களின் மாவட்ட விற்பனைக் கண்காட்சி மற்றும் உணவுத் திருவிழா, கல்முனை பிரதேச செயலகத்தின் சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் ஏற்பாட்டில் பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி தலைமையில் மருதமுனை கடற்கரையில் செவ்வாய்க்கிழமை(18) நடைபெற்றது.

இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் சிந்தக்க அபேவிக்கிரம பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார். அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீசன், மாவட்ட சிறுதொழில் முயற்சி அபிவிருத்திப் பிரிவின் உதவிப் பணிப்பாளர் ஐ.எம்.நாசர், கல்முனை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.எம்.ஜவ்பர், பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி வீரசிங்க, சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.ஆர்.எம். சாலிஹ், கல்முனை பிரதேச செயலக சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர் எச்.எல்.ஏ. ஜலீல் உட்பட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், சிறு தொழில் முயற்சியாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.





முஹர்ரம் புது வருடப்பிறப்பு நிகழ்வுகள் கமு/கமு/அஸ்-ஸுஹறா பாடசாலையில் வியாழக்கிழமை(20) இடம்பெற்றது. அதிபர் எம்.எச்.எஸ்.ஆர்.மஜீதிய்யா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு கல்முனை முகைதீன் ஜும்ஆப் பள்ளிவாசலின் பேஷ்இமாம் மௌலவி ஏ.சி.எம்.முஹ்யிதீன் மன்பயி மாணவர்களுக்கு பின்பற்றவேண்டிய விழுமியப் பண்புகள், பெற்றோர், ஆசிரியர்களை எவ்வாறு மதிக்க வேண்டும், பாடசாலை மாணவர்கள் எவ்வாறு ஒழுக்க விழுமியங்களைக் கடைப்பிடிக்க வேண்டும், முஹர்ரம் மாதத்தின் முக்கிய நிகழ்வுகள் பற்றி விழிப்புணர்வு உரையை நிகழ்த்தினார்.

**படம்:** அம்பாறை மாவட்ட செய்தியாளர்

# சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



■ கந்தளாய் செய்தியாளர்

திருகோணமலை மாவட்ட சமாதான நீதவானாக எம்.ஏ.எம்.பைரோஸ் மாவட்ட நீதிமன்ற நீதிவான் எம்.கணேசராஜா முன்னிலையில் திங்கட்கிழமை(17) சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

கிண்ணியா கூபாநகர் பைசல் நகரைச் சேர்ந்த இவர் கிண்ணியா தேசிய பாடசாலையின் பழைய மாணவராவார்.

இவர், பைசல் நகர் கிராம அபிவிருத்திச் சங்கத் தலைவராகவும் கூபா நகர் ஜும்ஆ பள்ளியின் செயலாளராகவும் பைசல் நகர் சமுர்த்தி சங்கத்தின் தலைவராகவும் சனசமூக நிலையத்தின் பொருளாளராகவும் இருப்பதோடு சிறந்த சமூக சேவையாளராகவும் செயற்பட்டு வருகின்றார்.

இவர் முஹம்மது அலி - சித்தி ஹபிலா உம்மா ஆகியோரின் சிரேஷ்ட புதல்வராவார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# உதவித்தொகை வழங்கல்





■ அம்பாறை மாவட்ட செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் பின்தங்கிய கிராமங்களில் உள்ள பாடசாலைகளில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 100 வறிய மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கல் மற்றும் மன்னம்பிட்டி கொட்டலீ பாலத்தில் இடம் பெற்ற தனியார் பஸ் விபத்தில் மரணமடைந்த மற்றும் பாதிப்படைந்தவர்களில் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு தலா ஒரு இலட்சம் ரூபா வழங்கும் நிகழ்வு புதன்கிழமை (19) இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா மீடியா போரத்தின் ஏற்பாட்டில் அதன் பணிப்பாளர் எம்.ரீ.எம்.பாரிஸ் தலைமையில் ஓட்டமாவடி பிரதேச சபை பிரதான மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் தர்ஷன விஜயசேகர கலந்து சிறப்பித்தார்.

# 'விபுலம் ஆவணக் காப்பகம்' அங்குரார்ப்பணம்!





■ கல்லடி செய்தியாளர்

சுவாமி விபுலானந்தரின் 76ஆவது நினைவு தினத்தன்று அடிகளார் தொடர்பான ஆவணங்கள் அடங்கிய 'விபுலம் ஆவணக் காப்பகம்' பேத்தாழை பொது நூலகத்தில் புதன்கிழமை(19) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமான இந்நிகழ்வில், சிறுவர் வாசகர் வட்ட உறுப்பினர் ஒருவரினால் விபுலானந்தரின் திருவுருவப் படத்துக்கு மாலை அணிவித்து இக்காப்பகம் திறந்துவைக்கப்பட்டிருந்தது. அடிகளார் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளும் ஆய்வாளர்கள் மற்றும் வாசகர்களின் நன்மைகருதி அச்சு ஆவணங்கள், மின்னியல் நூல்கள், காணொளிகள் அடங்கிய இறுவெட்டுகள், அடிகளாரின் புகைப்படத் தொகுப்புகள் போன்ற பல ஆவணங்களின் சேகரிப்பைக் கொண்டுள்ள இப்பகுதியில் QR கோட் குறியீட்டின் உதவியுடன் மேலதிக தகவல்களைப் பதிவிறக்கம் செய்து கொள்ளும் வசதியும் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நூலகப் பொறுப்பாளர் ம.பிரகாஷ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், கோறளைப்பற்று பிரதேச சபையின் செயலாளர் ச.நவநீதன், மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்தின் கோறளைப்பற்று பிரதேச சபைக்கான சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.ஹாரூன், கோறளைப்பற்று பிரதேசத்துக்கான கலாசார உத்தியோகத்தர் சிவகுமார், எழுத்தாளர் ச.மணிசேகரம், பேத்தாழை சந்திரகாந்தன் வித்தியாலய அதிபர் க.கதிர்காமநாதன், ஆலோசனைக் குழு உறுப்பினர் திருமதி ஸோபா ஜெயரஞ்சித், வாசகர் வட்ட உறுப்பினர்கள், வாசகர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட அதிதிகளினால் இக்காப்பகத்துக்கென சுவாமி விபுலானந்தரின் தகவல்கள் அடங்கிய நூல்கள், இறுவெட்டுகள் என்பன பேத்தாழை பொது நூலகப் பொறுப் பாளரிடம் கையளிக்கப்பட்டமை சிறப்பம்சமாகும்.



பாலமுனை இளைஞர்கள் சபையினால் 47ஆவது தேசிய கிரிக்கெட் விளையாட்டுப் போட்டியில் கிழக்கு மாகாண அணியில் பங்குகொண்டு தங்கப் பதக்கம் பெற்ற பாலமுனை றைஸ்டார் கழக வீரர் ஆசிரியர் எஸ்.எல்.எம்.ஆசிகை பாலமுனை இளைஞர் சபையினர் மற்றும் றைஸ்டார் விளையாட்டுக் கழகத்தின் தலைவர் ஆசிரியர் ஐ.எல்.எம்.பாயிஸ் ஆகியோர் இணைந்து பாராட்டி நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கும் நிகழ்வு அண்மையில் (14) இடம்பெற்றது. இதன்போது பொருளாளர் ஏ.றிகாஸ் அகமட், அமைப்பாளர் எம்.ஏ.சிபான், பிரதித் தலைவர்களான யூ.எல்.ஹஸ்ஸாலி, கே.ஆர். கியாஸ், ஐ.எம்.ஹம்தான், கே.எம்.றிபான், கணக்காளர் ஏ.வசீம் உட்பட செயற்பாட்டாளர்கள், கழக வீரர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

**படம்:** அட்டாளைச்சேனை மேலதிக செய்தியாளர்

# அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் இடம்பெற்ற இஸ்லாமிய புத்தாண்டு நிகழ்வு







■ அட்டாளைச்சேனை செய்தியாளர்

இஸ்லாமிய புதுவருடத்தைச் சிறப்பிக்கும் வகையில் கல்வியமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திக் கிளையின் அறிவுறுத்தல்களுக்கமைவாக அக்கரைப்பற்று முஸ்லிம் மத்திய கல்லூரியில் ஏற்பாடு செய்யப்பட்ட இஸ்லாமிய புத்தாண்டு தின சிறப்பு நிகழ்வு வியாழக்கிழமை(20) பாடசாலை வளாகத்தில் இடம்பெற்றது.

அதிபர் ஏ.பி.முதீன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வின்போது உதவி அதிபர் ஏ.எல்.சம்சுல் பழீலின் வழிப்படுத்தலின் கீழ் புத்தாண்டு தினத்தின் சிறப்புப் பற்றியும் புத்தாண்டு ஆரம்பிக்கும் முஹர்ரம் மாதத்தில் முஸ்லிம்கள் கடைப்பிடித்து நடக்க வேண்டிய மத விடயங்கள் பற்றியும் பிற மதத்தவர்களுடன் முஸ்லிம்கள் நல்லுறவை ஏற்படுத்தி இன ஒற்றுமையைக் கட்டியெழுப்ப வேண்டியதன் அவசியம் குறித்தும் மார்க்க அறிஞர்களால் மாணவர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது கலை, கலாசார நிகழ்வுகளும் மேடையேற்றப்பட்டதுடன் புத்தாண்டைச் சிறப்பிக்கும் வகையில் பாடசாலை வளாகத்தில் ஏற்பாடு செய்யப்பட்ட விசேட ஒன்றுகூடல் நிகழ்வின்போது மாணவர்கள் மற்றும் பாடசாலை ஆளணியினர் போன்றோருக்கு இனிப்பு மற்றும் அன்னதானம் ஆகியன வழங்கப்பட்டன.

இதேவேளை, நிகழ்வின் சிறப்புப் பேச்சாளராகக் கலந்துகொண்ட மௌலவி கே.எல்.நைஸர் நழீமி இஸ்லாமிய வரலாற்றில் புதுவருடத்தின் சிறப்புகள் பற்றி சொற்பொழிவாற்றியதுடன், நாட்டில் நிலையான சமாதானம், இன ஐக்கியம் மற்றும் பொருளாதார மேம்பாடு போன்றன ஏற்பட வேண்டுமென வலியுறுத்தி துஆப் பிரார்த்தனை நிகழ்த்தியமையும் குறிப்பிடத்தக்கது.

# அஸ்வெசும திட்டம் சமுர்த்தி வங்கியோடு இணைந்ததாக முன்கொண்டு செல்லப்படும்

## இறக்காமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர்



மீரா நகர் செய்தியாளர்

அரசாங்கம் அஸ்வெசும நலன் புரித்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ள நிலையில், சமுர்த்தித் திட்டத்தின் அனைத்து நடவடிக்கைகளும் எவ்வித தடைகளுமின்றி சமுர்த்தி வங்கியினூடாக தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும் என்று இறக்காமம் சமுர்த்தி வங்கி முகாமையாளர் ரீ.கே.றஹ்மத்துல்லா தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில், சமுர்த்தி வங்கியில் கணக்கு வைத்துள்ள சமுர்த்தி பயனாளிகள் மற்றும் வாடிக்கையாளர்களின் கணக்குகள் தொடர்ந்தும் நடைமுறையில் பாதுகாப்புடன் முன்னெடுக்கப்படும் என்பதில் வாடிக்கையாளர்கள் எவரும் வீண் அச்சம் கொள்ளத் தேவையில்லை. அஸ்வெசும திட்டத்தை அரசாங்கம் முன்னெடுத்துள்ளபோதிலும் சமுர்த்தி திட்டத்தினூடான சேமிப்பு வசதிகள், குறைந்த வட்டி வீதத்திலான கடன் வசதிகள், ஏனைய சமூகப்பாதுகாப்பு உதவிகள், வாழ்வாதார உதவித் திட்டங்கள், வீடமைப்புத் திட்டங்கள் மற்றும் கல்விக்கான புலமைப்பரிசில் திட்டங்கள் போன்ற நன்மைகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்படும்.

மேலும், சமுர்த்தி வங்கியினூடாக பொது மக்களுக்கான சேவைகளை விஸ்தரிப்பதற்கு சமுர்த்தி திணைக்களம் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில், அரச ஊழியர்களுக்கான கடன் சேவை, நீர்க் கட்டணம், மின்சாரக் கட்டணம், அடகு எடுப்பது போன்றவற்றுடன் ஏ.ரீ.எம். இயந்திர வசதிகளையும் நிறுவ உள்ளது.

இந்நிலையில், சமுர்த்தி வங்கியில் உள்ள பணம் மீள திருப்பப்படும் என்றும் சமுர்த்தி வங்கிகள் மூடப்படும் என்ற வதந்திகளினால் அதன் வாடிக்கையாளர்கள் வீண் சிரமங்களுக்கு மத்தியில் வங்கிகளுக்கு நாளாந்தம் வருகை தந்து சிரமப்படுவதை அவதானிக்க முடிகின்றது. இதனால் வங்கியின் நாளாந்த நடவடிக்கைகளை முன்னெடுப்பதில் பணியாளர்கள் மிகுந்த சிரமங்களுக்கு ஆளாகிவருகின்றனர்.

எனவே, பொதுமக்கள் வீண் வதந்திகளையும் பொய்ப் பிரசாரங்களையும் நம்பி ஏமாறாமல் உங்களுக்கான கொடுக்கல், வாங்கல் நடவடிக்கைகள் மற்றும் வங்கியின் வழமையான நடவடிக்கைகளில் எவ்வித தடைகளுமின்றி தொடர்ந்தும் முன்கொண்டு செல்லப்படும் என்று அவர் தெரிவித்தார்.



சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்தின் சமூக அபிவிருத்திப் பிரிவின் அபிவிருத்தி உதவியாளர் யு.எல்.ஜஃபரின் ஏற்பாட்டில் ஏப்ரல் மாத சமுர்த்தி வீட்டு லொத்தர் சீட்டிழுப்புமூலம் தெரிவுசெய்யப்பட்ட சாய்ந்தமருது - 16ஆம் பிரிவைச் சேர்ந்த பயனாளியின் வீட்டின் குறை வேலைகள் திருத்தப்பட்டு உத்தியோகபூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் வியாழக்கிழமை(20) இடம்பெற்றது. இந்நிகழ்வில் சமுர்த்தி தலைமைப் பீட சிரேஷ்ட முகாமையாளர் ஏ.சி.எம்.நஜீம், முகாமைத்துவப் பணிப்பாளர் றியாத் ஏ.மஜீத், பிரிவுக்கான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.ஜாபிர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் கே.ஆதம்பாவா, சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்பின் தலைவர்கள் மற்றும் பயனாளிகளும் கலந்துகொண்டனர்.

**படம்:** *அம்பாறை மாவட்ட செய்தியாளர்*



கல்முனை கல்வி வலயத்தின் கல்வி முகாமைத்துவப் பிரிவின் பிரதிக் கல்விப் பணிப்பாளராக திருமதி எம்.எச்.றியாஸா(SLEAS II) கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ்.சஹுதுல் நஜீமினால் புதன்கிழமை(19) நியமிக்கப்பட்டுள்ளார். கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தின் பிரதிக் கல்விப் பணிப்பாளராகக் கடமையாற்றி(கல்வி முகாமைத்துவப்பிரிவு) அக்கரைப்பற்று வலயக் கல்வி அலுவலகத்துக்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற ஏ.எச்.பௌஸ் வெற்றிடத்துக்கே இவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

**படம்:** *மருதமுனை செய்தியாளர்*

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

# பன்குடாவெளிப் பாலத்தைப் புனரமைக்கக் கோரிக்கை



கல்லடி செய்தியாளர்

மட்டக்களப்பு, வவுணதீவு மற்றும் செங்கலடி பிரதேச சபைகளுக்கிடையிலான, நரிப்புல்தோட்டம் - பன்குடாவெளிப் பாலத்தைப் புனரமைத்துத் தருமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

சுமார் 40 வருடங்களுக்கும் மேலாக வவுணதீவு மற்றும் செங்கலடி பிரதேச சபைகளின் எல்லைக் கிராமங்களில் வாழும் மக்கள், போக்குவரத்து நடவடிக்கைகளுக்காக தோணிகளில் இணைக்கப்பட்ட பாதைகளையே பயன்படுத்தி வருகின்றனர்.

மிகுந்த சிரமங்களுக்கு மத்தியில் நாளாந்தம் பயணிக்கும் இக் கிராம மக்கள், போக்குவரத்தை இலகுபடுத்த பாலமொன்றை அமைத்துத் தருமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

நரிப்புல்தோட்டம் - பன்குடாவெளிப் பாலத்தை நிர்மாணிக்க கடந்த காலங்களில் அடிக்கல் நாட்டப்பட்டபோதிலும், அதற்குப் பின்னர் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை என பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

# தென் எருவில்பற்றில் தொழிற்பயிற்சி வழிகாட்டல்



மட்டக்களப்பு செய்தியாளர்

மண்முனை தென் எருவில்பற்று பிரதேச செயலகத்தின் தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வு பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்தினத்தின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் களுதாவளை கலாசார மண்டபத்தில் வியாழக்கிழமை(20) இடம்பெற்றது.

மனிதவலு வேலைவாய்ப்பு திணைக்களத்துடன் மட்டக்களப்பு மாவட்ட மண்முனைதென் எருவில்பற்று பிரதேச செயலகம் இணைந்து ஏற்பாடு செய்த தொழிற்சந்தை மற்றும் தொழிற்பயிற்சி வழிகாட்டல் நிகழ்வில் அரச மற்றும் தனியார் தொழிற்பயிற்சி, தனியார் தொழில் வழங்கல் ஆகிய முப்பதுக்கும் அதிகமான நிறுவனங்கள் பங்கேற்று தங்கள் நிறுவனங்களின் சேவைகள் பற்றி தெளிவுபடுத்தின.

பிரதேச செயலக மனிதவள மேம்பாட்டு உத்தியோகத்தர்களான க.ரவீந்திரன் மற்றும் தெ.ராகவன் ஆகியோரின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் த.நிர்மல்ராஜ், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் என பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது தாதியர் பயிற்சி, முன்பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி, தையல் பயிற்சி, மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி திருத்துனர், அழகுக்கலை மற்றும் சிகை அலங்கரிப்பாளர், வெதுப்புனர், தகவல் தொடர்பாடல் மற்றும் தொழில்நுட்பம், மரக்கைவினைஞர், அலுமினியம் பொருத்துனர், மின்னியலாளர், உருக்கி ஒட்டுனர், நீர்க்குழாய் பொருத்துனர், கணினி வடிவமைப்பாளர், கணினி பொறிமுறை கட்டுப்பாட்டாளர் உள்ளிட்ட பல துறைகளைச் சேர்ந்த அமைப்புகள் வழிகாட்டலில் கலந்துகொண்டவர்களுக்கு விளக்கங்களையும் தகவல்களையும் வழங்கின.

# உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக முகைதீன் சாலி சத்தியப்பிரமாணம்



காத்தான்குடி செய்தியாளர்

இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் உயர் நீதிமன்ற சட்டத்தரணியாக பிரதம நீதியரசர் மற்றும் உயர்நீதிமன்ற நீதியரசர் குழாம் முன்னிலையில் முகைதீன் சாலி வியாழக்கிழமை(20) சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

மட்டக்களப்பு, காத்தான்குடியைச் சேர்ந்த மர்ஹூம் முகம்மது சாலி (நாகூரார்), ஹிதாயத்தும்மா ஆகியோரின் புதல்வரான இவர், மட்/அல் அமீன் மகா வித்தியாலயம், காத்தான்குடி மத்திய கல்லூரி, திருமலை சாஹிறா கல்லூரி மற்றும் திருமலை இந்துக்கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரும் இலங்கை தேசிய சமூக அபிவிருத்தி நிறுவகத்தின் தொழில்வாண்மை உளவளத்துணை டிப்ளோமா தாரியுமாவார்.

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தில் தனது சட்டமாணி பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்தார். தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் முன்னாள் ஆய்வுகூட உத்தியோகத்தரான இவர், கவிஞரும் ஐந்துக்கு மேற்பட்ட நூல்களை எழுதி வெளியிட்ட எழுத்தாளருமாவார். மேலும், ஊக்கப் பேச்சாளரான முகைதீன் சாலி இலங்கை சட்டக்கல்லூரியிலும் சட்டக் கற்கை நெறியைப் பூர்த்தி செய்து சட்டத்தரணியாகத் தெரிவாகியுள்ளார்.



Lions Club of Trincomalee Town, Lion Club of Trincomalee Centennial paradise ஆகிய கழகங்கள் Trinco Aid நிறுவனத்துடன் இணைந்து திருகோணமலை ரயில் நிலையத்தை பசுமையான ரயில் நிலையமாக மாற்றும் நோக்கில், புகையிரத அதிபரிடம் ஒருதொகை மரங்களை புதன்கிழமை(19) வழங்கின. இந்நிகழ்வில் திருகோணமலை நகர கழகத்தின் செயலாளர் ஜனரஞ்சன், திருகோணமலை சென்ரீனியல் பரடைஸ் இன் தலைவர் உமா பாஸ்கரன், கழக அங்கத்தவர், சதீசன் மற்றும் திட்ட இணைப்பாளர் திருமதி தயாளினி ஹரிகரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

**படம்:** *கிண்ணியா செய்தியாளர்*

# வாகரையில் தென்னை மரங்களில் இருவகையான நோய்த்தாக்கம்

## நடவடிக்கை எடுக்க தென்னைச் செய்கையாளர்கள் கோரிக்கை

கந்தளாய் செய்தியாளர்

மட்டக்களப்பு மாவட்டத்தின் வாகரை பிரதேச சபைக்குட்பட்ட பனிச்சங்கேணி பகுதிகளில் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்களுக்கு இரு வகையான நோய்த்தாக்கங்கள் ஏற்பட்டுள்ளதாக தென்னை தோட்டச் செய்கையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

இந்நோய்த் தாக்கத்தினால் ஒரு இலட்சத்துக்கும் மேற்பட்ட தென்னை மரங்கள் பாதிப்படைந்துள்ளதாகவும் இதில் பனிச்சங்கேணி மற்றும் மாவடிச்சேனை போன்ற பகுதியில் அதிகளவிலான மரங்கள் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கும் விவசாயிகள், அதைக் கட்டுப்படுத்த முடியாமல் மரங்கள் கருகி வருவதால் தாம் வாழ்வாதாரம் இழக்கவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

வாகரை பகுதியில் தென்னை செய்கை பிரதானமாகக் காணப்படுகின்றது. கடந்த சில ஆண்டுகளாக ஆயிரக்கணக்கான தென்னை மரங்கள் இப்பகுதியில் இவ்வாறான நோய்த் தாக்கங்களினால் மிகவும் பாதிப்படைந்தன. இந்நிலையில், தற்போதும் பல்வேறு நோய்த்தாக்கங்களால் பாதிப்படைந்து வருகின்றன.

வெள்ளை ஈ தாக்கத்துக்குப் பிறகு தற்போது பலவகையான வண்டுகளால், மரங்களை வெட்டி அகற்ற வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் குறிப்பாக, இளம் தென்னை மரங்களில் தற்போது பரவலாக வண்டுத் தாக்கம் அதிகரித்துள்ளதால் இத்தகைய தாக்கத்தால் மரங்களில் குறுகிய நாட்களில் இலைகள் அனைத்தும் மஞ்சள் நிறத்தில் வாடி விடுவதாகவும் தெரிவிக்கின்றனர்.

இது எவ்வகையான தாக்கம் என்பது குறித்து விவசாயிகளிடையே போதிய விழிப்புணர்வு இல்லை. இவர்களுக்கான விழிப்புணர்வுகளை வழங்க விவசாய அதிகாரிகளும் வருவதில்லை. எனவே, இவ்விடயத்தில் உரிய அதிகாரிகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும் தென்னைச் செய்கையாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# பாலமுனையில் வசதியற்ற குடும்பங்களுக்கு நிதியுதவி




பாலமுனை செய்தியாளர்

பாலமுனை இளைஞர்கள் சபையின் ஏற்பாட்டில் ஏ.ஆர்.மன்சூர் பவுன்டேஷன் நிதியுதவியின் மூலம் பாலமுனை பிரதேசத்தில் வசதியற்ற குடும்பங்களுக்கான பல்வேறு அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதற்கமைவாக பாலமுனை பிரதேசத்தில் வசதியற்ற குடும்பங்களுக்கு நிர்மாணிக்கப்பட்ட மலசல கூடங்களைக் கையளிக்கும் நிகழ்வு புதன்கிழமை(19) பாலமுனையில் இடம்பெற்றது. பாலமுனை இளைஞர் சபையின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்நிகழ்வில் இளைஞர் சபையின் நிர்வாகிகள் மற்றும் ஏ.ஆர்.மன்சூர் பவுன்டேஷன் அமைப்பின் பிரதிநிதிகள், பொதுமக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

பாலமுனை பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்ட மலசலகூட நிர்மாணப் பணிகளுக்கான 1.5.மில்லியன் நிதி ஏ.ஆர்.பவுண்டேஷன் அமைப்பின் தலைவியும் அவுஸ்திரேலிய முஸ்லிம் பெண்கள் கவுன்ஸிலின் தலைவியுமான சட்டத்தரணி மர்யம் மன்சூர் நலிமுடீனினால் வழங்கப்பட்டது. பாலமுனை இளைஞர் சபையின் ஆலோசனைக்கமைவாக பாலமுனைப் பிரதேசத்தில் இவ்வமைப்பின் ஊடாக வசதி குறைந்த குடும்பங்களுக்கான இலவச குடிநீர் இணைப்பு, வாழ்வாதார உதவி, பாடசாலை மாணவர்களுக்கான கல்விக்கான உதவிகளையும் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

## போடியார் புலம்பல்!



ரணிலும் ராஜபக்சாக்கலும் ஒரு குட்டையில் ஊறிய மட்டைகளாம் எண்டு ஜே வி பி கட்சி சந்திரசேகரன் முன்னாள் எம்பி சொல்லியிருக்காரு எலுவா? அந்த ஒரே குட்டயில ஊறிய மட்டை ராஷபக்ச 2006இல் ஜனாதிபதியாக இருக்ககுள உங்கட கட்சி தோழர்களும் சேர்ந்து குடும்பம் நடத்தித்தானே மச்சான் வடக்கு கிழக்க இரண்டாக நீதிமன்றத்தில வழக்கு போட்டு பிரிச்சயள்!

நீங்க மட்டும் என்ன திறமான ஆட்களா? உங்கட ஆக்களும் இனவாதம் கொண்ட சிங்கள தலைவர்கள வைச்சிருக்கிற ஆக்கள்தான் பேசாம வேற கதய கதயுங்க சந்திரசேகரன் மச்சான்.!

# மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து சேவை செய்தவர் மர்ஹூம் மன்சூர்

**மக்களுக்காக தன்னை அர்ப்பணித்து ஆறு தசாப்தங்களாக சேவை செய்த மர்ஹூம் மன்சூரின் ஆறாவது நினைவு தினம் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை 25ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுவதை முன்னிட்டு இக்கட்டுரை பிரசுரமாகின்றது.**

அட்டப்பள்ளம் செய்தியாளர்

மக்களுக்காகத் தன்னை அர்ப்பணித்து ஆறு தசாப்தங்களாக உன்னத சேவை செய்த மர்ஹூம் ஏ.ஆர்.எம்.மன்சூரின் ஆறாவது நினைவுதினம் செவ்வாய்க்கிழமை 25ஆம் திகதி அனுஷ்டிக்கப்படவுள்ளது.

நான்கு சகோதரர்களுக்கும் ஒரு சகோதரிக்கும் இளையவராய் 1933.05.30 அன்று பிறந்த இவர், தனது தந்தையை இளம் வயதில் இழந்து, தனது சகோதரனின் அரவணைப்பில் பல தடைகளுக்கு மத்தியில் தனது கல்வியை கற்று தன் நாமத்தை சர்வதேச ரீதியில் மிளிர வைத்தவர்.

இவரின் மாணவப் பருவமானது இந்திய சுதந்திரப் போராட்ட காலகட்டமென்பதால் மகாத்மா காந்தி, ஜவஹர்லால் நேரு, வல்லபாய் பட்டேல், முகமது அலி ஜின்னா போன்ற இந்திய சுதந்திரப் போராட்டத் தலைவர்களின் பால் ஈர்க்கப்பட்டார். பிரபலமான உயர் சட்டத்தர ணியாகத் திகழ்ந்த இவர், தமிழ் மேல் கொண்ட பற்றின் காரணமாக அறிஞர் அண்ணாவின் கருத்துகளாலும் தந்தை எஸ்.ஜே.வி.செல்வநாயகத்தின் அரசியல் கருத்துகளாலும் கவரப்பட்டு கொழும்பில் நடந்த சத்யாக்கிரகங்களில் அவர்களுடன் கலந்து கொண்டார்.

இவ்வாறு தனது அரசியல் பாதையில் அடி எடுத்து வைத்த கலாநிதி மர்ஹூம் மன்சூர், பிளவுபடாத இலங்கைக்குள் சகல சமூகங்களும் சகவாழ்வுடன் வாழவேண்டும் என்ற தெளிவான பாதையில் பயணித்து 'மழை கால இருட்டிலும் மந்தி கொப்பிழக்கப் பாயாது' என்பதுபோல் எந்தவொரு தருணத்திலும் சந்தர்ப்பவாத குறுகிய அரசியல் கோஷங்களை முதலீடாகக் கொண்டு அரசியல் செய்யாத முழு சிறுபான்மையினருக்குமே முன்மாதிரியான தலைவராகத் திகழ்ந்து நிரூபித்துக் காட்டினார்.




கல்வி, சுகாதாரம், வீடமைப்பு, தொழில்வாய்ப்பு, மின்சாரம், மீன்பிடி, விவசாயம், கலை, கலாசாரம், விளையாட்டு, வாழ்வாதாரம், மக்களின் வாழ்க் கைத்தரத்தை விருத்தியடையச் செய்தல், உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், வர்த்தகத்தின் ஊடாக சமூகப் பொருளாதாரத்தின் தரத்தை உயர்வடையச் செய்தல், சுயதொழில் ஊக்குவிப்பு போன்றவற்றில் தேசிய ரீதியில் பாகுபாடின்றி பல நிலையான அபிவிருத்திகளைச் செய்தார்.

கல்முனை பொது நூலகம் அமைத்தமை, பாடசாலைகளுக்காக பௌதீக வளங்கள், கல்முனை பொதுச்சந்தை, கல்முனை நீதிமன்றக் கட்டிடத் தொகுதி, பல கோணங்களில் சிதறிக் காணப்பட்ட நிர்வாகங்களை ஒன்றிணைக்கும் வகையில் கல்முனை நிர்வாகக் கட்டிடத் தொகுதி, கல்முனை நீர் வழங்கல் திட்டம், கல்முனை அஷ்ரஃப் ஞாபகார்த்த வைத்தியசாலை நிர்மாணம் மற்றும் ஏனைய வைத்தியசாலைகள் அபிவிருத்தி, கல்முனை தொலைத் தொடர்பு பரிவர்த்தனை நிலையம், இலங்கை மின்சார சபை பொறியியலாளர் காரியாலயம், கல்முனை இலங்கை வங்கி கட்டிடம், கல்முனை நகர மண்டபம், இலங்கை போக்குவரத்துச் சபை மற்றும் பஸ் நிலையமும் பஸ் தரிப்பிடமும் வீடமைப்புத் திட்டங்கள் போன்ற பல அபிவிருத்திப் பணிகள் இன்றும் காலத்தால் அழியாதவைகளாகக் காணப்படுகின்றன.

ஓர் அமைச்சர், மக்கள் பிரதிநிதி எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கு சிறந்த முன்மாதிரியாகவும் இன நல்லிணக்கக் கோட்பாட்டை சிரமேற்கொண்டு செயற்பட்டவர்களில் முதன்மையானவராகவும் திகழ்ந்த இவர், தமிழ் சமூகத்தால் இன்றும் கூட மதிக்கப்படுகின்ற ஒரு முஸ்லிம் அரசியல் தலைமை என்றால் இவர்தான் என்பதை அவரின் மரண இறுதி நிகழ்வு எமக்கு ஒளியூட்டியது.

வடகிழக்கின் அரசியல் வரலாற்றில் மன்சூரின் பதவிக்காலமே அபிவிருத்தியின் பொற்காலமாக இருக்கின்றது என்றால் அதனை எவராலும் மறுக்க முடியாது. இதனையே நாம் இன்றுவரை அறுவடை செய்து கொண்டிருக்கின்றோம். ஆனால், அக்காலகட்டத்தில் எம்மில் சில குறுகிய சிந்தனை கொண்டவர்களினால் சரியாகக் கணிக்கப்படாவிட்டாலும் காலவோட்டத்தில் அவர்களாலும் இன்று மெச்சப்படுகின்றமை எ பூரிப்பைத் தருகின்றது.

ஏக இறைவன் அன்னாரை பொருந்திக்கொண்டு அன்னாரின் நிழல் என்றும் எம் சமூகத்தின் மீது என்றென்றும் தொடர வேண்டும் எனும் நோக்குடன் கனிஷ்ட புதல்வியும் அவுஸ்திரேலியா பெண்கள் கவுன்சிலின் தலைவியுமான சட்டத்தரணி மரியம் மன்சூர் நளீமுதீன் தலைமையில் ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஷன் எனும் தொண்டு அரசியலுக்கு அப்பால் வித்திடப்பட்டு 06 வருடங்களை மக்கள் சேவையில் அர்ப்பணித்து மன்சூரின் அறத்தை புடம் போட்டுக் கொண்டிருக்கின்றது.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk
thamilaneditor@gmail.com

## இளைஞர் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை உறுதி செய்வதற்காக Family Pairing அம்சத்தை மேம்படுத்தும்

குறும் வீடியோக்களுக்கான முன்னணி தளமான TikTok, அதன் இளைஞர் சமூகத்தின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வை மேம்படுத்துவதை நோக்கமாகக் கொண்ட இரண்டு முக்கிய முயற்சிகள் குறித்து அறிவித்துள்ளது. பெற்றோர்கள் மற்றும் வயது வந்தவர்களின் மதிப்புமிக்க கருத்துகளுக்கு மதிப்பளிக்கும் விதமாக TikTok அதன் உள்ளடக்க Filter செய்யும் திறன்களை Family Pairing க்குள் விரிவுபடுத்தியுள்ளது. இந்தப் புதிய அம்சம் பெற்றோர்கள் அல்லது பாதுகாவலர்கள் Appஐ பயன்படுத்தும்போது தங்கள் குழந்தைகள் உலாவும் உள்ளடக்கத்தை மேலும் தனிப்பயனாக்க உதவுகிறது.




உள்ளடக்க Filter கருவியைப் பயன்படுத்தி வயது வந்தவர்கள் இப்போது அவர்கள் பொருத்தமற்றதாகக் கருதும் குறிப்பிட்ட சொற்கள் ஹேஷ்டேக்குகள் மற்றும் தீம்களை Filter செய்வதன் மூலம் தங்கள் குழந்தைகளுக்குப் பார்க்கும் அனுபவத்தை உருவாக்க முடியும். TikTok அனைத்து இளைஞர்களின் தேவைகளை ஒப்புக்கொள்கிறது மற்றும் Appற்குள் அவர்களுக்கு பாதுகாப்பான மற்றும் தனிப்பயனாக்கப்பட்ட சூழலை உருவாக்க வயது வந்தவர்களுக்கு அதிகாரம் அளிக்கிறது.

பாதுகாப்பான சூழலை ஏற்படுத்துவதை உறுதி செய்வதற்காக TikTok Family Online Safety Institute உட்பட புகழ்பெற்ற நிபுணர்களுடன் இணைந்து செயற்படுகிறது. அவர்களின் நிபுணத்துவம் மற்றும் நுண்ணறிவு வயது வந்தவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கும் உலகத்துடன் கையாள்வதற்கும் இளைஞர்களின் உரிமைகளை மதிப்பதற்குமிடையே சமநிலையை ஏற்படுத்த TikTok சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்கிறது. இந்த முயற்சியின் ஒரு பகுதியாக, TikTok வெளிப்படைத்தன்மையை வழங்குகிறது. பதின்ம வயதினர் தங்கள் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில் இதில் பிரவேசித்து உலாவுவதற்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த வெளிப்படைத்தன்மை ஒன்லைன் எல்லைகள் மற்றும் பாதுகாப்பு பற்றிய வெளிப்படையான உரையாடல்களை உருவாக்குவது மட்டுமல்லாமல், இளைஞர் சமூகத்திற்கும் அவர்களின் பெற்றோருக்கும் இடையே பரஸ்பர புரிதலை மேம்படுத்து கிறது.

புதிய உள்ளடக்க Filter அம்சம் TikTok இன் தற்போதைய உள்ளடக்க தரவரிசை அமைப்பில் உருவாக்கப்பட்டுள்ளதுடன் முதிர்ந்த அல்லது சிக்கலான கருப்பொருள்கள் கொண்ட உள்ளடக்கம் 13 முதல் 17 வயது வரையிலான பாவனையாளர்களை சென்றடைவதைத் தடுக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது. பெற்றோரின் தனிப்பட்ட உள்ளடக்க Filter களை ஒருங்கிணைப்பதன் மூலம் உள்ளடக்கத்தை உருவாக்கும் திறனை வலுப்படுத்துவதன் மூலம் தளத்தில் பதின்ம வயதினருக்குப் பாதுகாப்பான மற்றும் மிகவும் பொருத்தமான சூழலை TikTok உருவாக்குகிறது.

Family Pairing தவிர, TikTok, Youth Council ஐ அறிமுகப்படுத்துவதில் பெருமிதம் கொள்கிறது. இது இளம் TikTok பாவனையாளர்களுக்கு ஆதரவு கொடுப்பதற்கும் TikTok இன் கொள்கைகள் மற்றும் அம்சங்களை வடிவமைப்பதில் அவர்களை தீவிரமாக ஈடுபடுத்துவதற்கும் அர்ப்பணிக்கப்பட்ட ஒரு முயற்சியாகும். Youth Council என்பது இளைஞர்கள் தங்கள் கருத்துகளைப் பகிர்ந்துகொள்வதற்கும் பாதுகாப்பான TikTok சமூகத்திற்கு அவர்களை மேம்படுத்துவதற்குமான ஒரு தளமாகும்.

குறும் வீடியோக்களுக்கான முன்னணி தளமாக TikTok அதன் பாவனையாளர்களின், குறிப்பாக இளம் வயதினரின் பாதுகாப்பு மற்றும் நல்வாழ்வுக்கு முன்னுரிமை அளிக்கிறது. மேம்படுத்தப்பட்ட Family Pairing அம்சங்களின் அறிமுகம் மற்றும் Youth Council உடை ஐ நிறுவுதல் ஆகியவற்றுடன்TikTok உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான பாவனையாளர்களுக்கு நேர்மறையான மற்றும் பொறுப்பான ஒன்லைன் அனுபவத்தை மேம்படுத்துவதற்குத் தீவிரமாக நடவடிக்கை எடுத்து வருகிறது.

## 30 ஆவது ஆண்டு பூர்த்தியை கொண்டாடும் அமாமி

சுற்றுலா ஹோட்டல்கள் சார்ந்த சேவைகளுக்கான சுத்தப்படுத்தி மற்றும் மணமூட்டி (Amenity Kit) தொகுதிகளை உற்பத்தி செய்து விநியோகிக்கும் பணியை இலங்கையில் முதல் தடவையாக ஆரம்பித்த அமாமி (Amami) வர்த்தக நாமத்தின் (www. hotelsupplies.lk) 30 ஆவது ஆண்டு பூர்த்தி விழா அண்மையில் கடவத்தை அமாமி கைத்தொழிற்சாலை வளாகத்தில் நடைபெற்றது. 80 களில் ஒபரோய் ஹோட்டலுக்கு எயார் பிரெஷ்னர் வாசனைக் கட்டிகளுடன் கூடிய முதலாவது உற்பத்திகளை விற்பனை செய்ததன் மூலம் தொடங்கப்பட்ட அமாமி நிறுவனமானது, தற்பொழுது எயார் பிரெஷ்னர், ஷெம்பூ, ஷவர் ஜெல், டூத்பேஸ்ட்,கிளிசரின் சவர்க்காரக் கட்டிகள், அனைத்து வகை சலவைத் தூள்கள், ஆயுர்வேத மற்றும் இயற்கை மூலிகை சார்ந்த உற்பத்திகள் பலவற்றை உற்பத்தி செய்கின்றது.



ஒரு தொழில்முயற்சியாக கடினமான பயணத்தை அடுத்து இன்று வெற்றிகளை அனுபவிக்கும் அமாமி உற்பத்திகளுக்கு சுற்றுலா பயணிகள் மத்தியிலும் அமோக வரவேற்பு உள்ளது. மேற்படி உற்பத்திகள் ஜெட்வின், ரமாடா, கோல்பேஸ், அனந்தய போன்ற இலங்கையின் முன்னணி ஹோட்டல்கள் பலவற்றுக்கு விநியோகிக்கப்படுகின்றன. இச் சகல உற்பத்திகளும் எமது நாட்டு மூலப்பொருட்களைக் கொண்டு உள்நாட்டிலேயே உற்பத்தி செய்யப்படுவ தோடு, அதன் கைத்தொழிற்சாலையில் ஐம்பதுக்கும் மேற்பட்டோர் தொழில் புரிகின்றனர். “30 ஆண்டுகள் தொடர்ச்சியாக தொழில்முயற்சியொன்றை முன்னேற்ற கரமாக நடத்துவதென்பது இலங்கை போன்ற ஒரு நாட்டில் பெரும் சவால் என்றுதான் சொல்லவேண் டும். நட்சத்திர ஹோட்டல்களுக்கு வருகின்ற சுற் றுலாப் பயணிகளுக்கு வாசனை மற்றும் சுகாதாரப் பாது காப்பு மிக்க உற்பத்திகளை வழங்கி நாம் எமது தொழில்முயற்சியின் தரத்தை உறுதிப்படுத்தியுள்ளோம். மேலும், புதிய தொழிற்சாலையை திறந்த பின்னர் ஏராளமானோருக்கு தொழில் வாய்ப்புகளை வழங்கி பல குடும்பங்களுக்கு வலு சேர்ப்பதற்கு எம்மால் முடிந்துள்ளது. வருங்காலத்தில் நாம் பல்வேறு ஆயுர் வேத உற்பத்திகளை சந்தைக்கு அறிமுகப்படுத்தவுள் ளோம். படிப்படியாக வளர்ச்சி கண்ட எமது நிறு வனத்தை முன்னெடுத்துச் செல்லும் பொறுப்பை எனது மகள் ஹர்சலா மற்றும் மகன் ரணுக்கவிடம் ஒப்படைத் துவிட்டு நான் அவர்களுக்கு ஆலோசனை




வழங்கி வருகிறேன். இச் சகலதையும் வெற்றிப் பாதைக்கு கொண்டுசெல்வதில் எனக்கு பக்கபலமாக இருந்தவர் என்னுடைய அன்புக்குரிய மனைவி டாக்டர் பிறியாணி டி சில்வா. என்னுடைய வர்த்தக நடவடிக்கைகளுக்கு வலுச்சேர்த்த வாடிக்கையாளர்கள், கொள்வனவாளர்கள், பணியாளர்கள் ஆகியோருக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.” -என அமாமி ஸ்தாபகர் ரணில் டி சில்வா தெரிவித்தார்.

## Velvet அனுசரணையுடன் யாழில் இடம்பெற்ற ‘வணக்கம் Jaffna’ பிரம்மாண்ட இசை மற்றும் நகைச்சுவை நிகழ்ச்சி




யாழ்ப்பாணத்தில் Velvet அனுசரணை யுடன் அண்மையில் இடம்பெற்ற பிரம் மாண்ட இசை மற்றும் நகைச்சுவை நிகழ்ச்சி யான ‘வணக்கம் Jaffna’ வெற்றிகரமாக நடைபெற்றிருந்தது.

விஜய் டிவி சூப்பர் சிங்கர் பிரபலங் களான மானசி, ஸ்ரீதர் சேனா, மூக்குத்தி முருகன், ஹரிப்பிரியா, சாம் விசால் உள்ளிட்டோர் பங்குபற்றிய இந்நிகழ்வில், கலக்கப் போவது யாரு நிகழ்ச்சியின் நகைச் சுவை புகழ் குரேஷி மற்றும் நவீன் உள்ளிட் டோரும் பங்குபற்றியிருந்தனர்.

இந்நிகழ்வில் சூப்பர் சிங்கர் பாடகர்கள் தங்களது இனிமையான குரலால் இரசிகர் களை வசீகரித்ததோடு, அவர்களை நடனமாடவும் வைத்தனர். நிகழ்ச் சியை நகைச்சுவை குறையாது விஜய் டிவி பிரபலமான குரேஷி தொகுத்து வழங்கியிருந்ததோடு வயிறு குலுங்கச் சிரிக்கவும் வைத்தார். மிமிக்ரிக்கு புகழ் பெற்ற விஜய் டிவி நவீன், பல்வேறு குரல்களில் பேசியதோடு, பார்வையாளர்களுக்கு மத்தியில் பிரபலங்களை மேடைக்கே கொண்டு வந்தது போன்ற பிரமிப்பை ஏற்படுத்தியிருந்தார்.

யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இடம்பெற்ற இந்நிகழ் விற்கு Velvet (வெல்வெட்) அனுசரணை வழங்கியிருந்ததோடு, இதில் கலந்து கொண்ட மக்களை மகிழ்விப்பதற்காக பல் வேறு வகையான வேடிக்கை விநோத நிகழ்ச்சிகளையும் அது ஏற்பாடு செய்திருந் தது.

இலங்கையில் அழகுக்கலைத் துறையில் முன்னணியில் உள்ள வர்த்தகநாமமான Velvet, உயிர்ப்பான மென்மையான (Soft) சருமத்தை விரும்புவோருக்கான ஒரு உன்னத தெரிவாக விளங்குகின்றது. அத் துடன், 2023 LMD சஞ்சிகையின் தரப்படுத் தலுக்கமைய, தனிநபர் பராமரிப்பு சவர்க் கார பிரிவின் கீழ் Velvet சவர்க்காரம் முதலாவது இடத்தைப் பிடித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

Velvet, சிறந்த, தரமான மூலப்பொருட்கள் மூலம் சிறந்த சருமப் பராமரிப்புத் தயாரிப் புகளை புதுப்பித்தவாறு தொடர்ச்சியாக சந்தைக்கு வழங்கும் ஒரு வர்த்தக நாம மாகும். தனது பயணம் முழுவதும் தனது நுகர்வோருக்கு சேவை செய்வதில் உறுதி பூண்டுள்ள இது தனது சருமப் பராமரிப்பு தயாரிப்புகளுக்கு NMRA, GMP, IFRA உள்ளிட்ட பல்வேறு சான்றிதழ்களையும் பெற்றுள்ளது. அத்துடன், சருமத்திற்கு எரிச்சலை ஏற்படுத்தாது என மருத்துவ ரீதியாகவும் இது நிரூபிக்கப்பட்டுள்ளது. சவர்க்காரம், பொடி வோஷ், ஹேண்ட் வோஷ், பொடி லோஷன் உள்ளிட்ட பல்வேறு பரந்த தயாரிப்பு வகைகளில் Velvet வெளிவருகிறது. அனைத்து Velvet தயாரிப்புகளும் சமீபத்திய தொழில் நுட்பத்தைப் பயன்படுத்தி உரிய பாது காப்பு மற்றும் தர நிர்ணயங்களைப் பேணிய வாறு தயாரிக்கப்படுகின்றமை குறிப்பிடத் தக்கதாகும்.

சருமத்தை ஆரோக்கியமாக வைத்திருப் பதற்கும் இளமைத் தோற்றத்தை தொடர்ச்சி யாகப் பேணுவதற்கும் ஈரப்பதன் இன்றிய மையாத அம்சமாகும். வெப்பமான மற்றும் வெதுவெதுப்பதமான காலநிலையில் வாழும் இலங்கையர்கள் தங்களது சருமத்தை தொடர்ச்சியாக வருடம் முழுவதும் சூரிய ஒளிக்கு வெளிப்படுத்தும் நிலை காணப்படுவதால், அவர்களது சருமம் வரட்சி யடைவதோடு, ஈரப்பதனும் இழக் கப்படுகின்றது. எனவே, இவ்வாறான பிரச்சினைகளிலிருந்து மீள ஆரோக்கிய மான மற்றும் உரிய அளவில் ஈரப்பதனைக் கொண்ட சருமத்தைப் பேணும் பண்புகளைக் கொண்ட சருமப் பராமரிப்பு தயாரிப்புகளை Velvet வழங்குகின்றது.

வட மாகாணத்தில் உள்ள தமிழ் பேசும் மக்கள் வணக்கம் துயககயெ நிகழ்ச்சியில் ஆவலுடன் கலந்து கொண்டதோடு, இசை மற்றும் நகைச்சுவை மழையாக இடம்பெற்ற இந்நிகழ்வில் கலந்து கொண்ட மக்கள் Velvet உடன் இணைந்து பல்வேறு போட்டி நிகழ்வுகளிலும் பங்குபற்றியிருந்தனர்.




**குதூகலம் ஊட்டிய நிகழ்வுகள்**

இலங்கையர்கள் தங்களை அழகாக வைத் திருக்க தயாரிப்புகளை வழங்குகின்ற Velvet, யாழில் இடம்பெற்ற வணக் கம் Jaffna நிகழ்வில் மக்களை குதூகலத் திலும் வியப்பிலும் ஆழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. குறிப்பாக, நிகழ்ச்சியின் நுழைவாயிலில் வருகை தந்த அனைவருக் கும் Velvet, வர்த்தகநாமம் பொறிக்கப்பட்ட பலூன்களை வழங்கி ஆச்சரியத்திற்காக காத்திருக்குமாறு அன்போடு வரவேற்ற தோடு, தனது அன்பை வெளிப்படுத்தும் வகையில் வந்திருந்த அனைவருக்கும் பரிசுப் பொதிகளையும் வழங்கியிருந்தது.

இவ்வாறு நுழைவாயிலில் வழங்கப்பட்ட பலூன்களை நிகழ்வின் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் அனைவரையும் ஒரே நேரத் தில் பறக்கவிடச் செய்ததன் மூலம், பர வசம் மிக்க அனுபவத்தையும் Velvet வழங் கியிருந்தது. இது வந்திருந்த அனைவரை யும் இந்நிகழ்ச்சியில் அவர்களையும் அங் கம் வகிக்க உதவியதோடு, நிகழ்ச்சியின் பெரிதும் பேசப்பட்ட விடயங்களில் ஒன் றாகவும் அமைந்திருந்தமை சுட்டிக்காட் டத்தக்க விடயமாகும்.

## சிங்கர் ஸ்ரீலங்கா 13ஆவது தலைமுறை Dell Inspiron மடிகணினிகள் மற்றும் Vostro மேசைக்கணினிகளை அறிமுகப்படுத்துகிறது

இலங்கையில் Dell தயாரிப்புகளின் உத்தியோகபூர்வ விநியோகஸ்தரான சிங்கர், 13ஆவது தலைமுறை Inspiron மற்றும் Vostro தனிநபர் மற்றும் வர்த்தகப் பயன்பாட்டுக்கான Dell சாதனங்களை அறிமுகம் செய்வதாக உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. இலங்கையில் இந்த சாதனங்களின் அங்குரார்ப்பண அறி முகத்தை இது குறிக்கின்றது. சிங்கரிலிருந்து பெறப்படும் ஒவ்வொரு Dell தயாரிப்புக்கும் சிங்கரின் உத்தியோகபூர்வ உத்தரவாதமும் அடங்குகின்றது.

ஒரு பொறுப்பான விநியோகஸ்தர் என்ற வகையில் சிங்கர் தனது அனைத்து தயாரிப்புகளும் முறையான மற்றும் சட்ட பூர்வமான வழிமுறையில் பெறப்படுவதை உறுதிசெய்வதில் மிகுந்த கவனம் செலுத்து கிறது. தேவையான ஒழுங்குமுறைகள் மற்றும் நடைமுறைகளுக்கு இணங்குவதன் மூலம் விநியோக செயல்முறையின் நேர்மைப்பாட்டைப் பேணுவதன் மூலம் அங்கீகரிக்கப்பட்ட மார்க்கங்கள் மூலம் தான் வழங்கும் சாதனங்கள் பெறப்படுகின்றன என்று சிங்கர் உத்தரவாதம் அளிக்கிறது. சிங்கர் தனது விநியோக செயல்முறையில் கொண்டுள்ள அர்ப்பணிப்பு காரணமாக சிங்கர் ஸ்ரீலங்கா நிறுவனம் தொடர்ந்து மூன்றாவது முறையாக இலங்கையில் ‘ஆண்டின் சிறந்த விநியோகஸ்தர், வாடிக்கையாளர் தீர்வுகள் குழு (வணிகம்)’ என்ற விருதை சுவீகரித்துள்ளது.

மேலும், சிங்கர் தனது வாடிக்கையாளர் களுக்கு சந்தையில் மிகவும் நியாயமான விலைகளை வழங்குவதற்கு தொடர்ந்து முயற்சிக்கிறது. தற்போதைய அறிமுகத் திலும் இந்த அணுகுமுறை பின்பற்றப்படு கின்றது. குறைவடைந்துள்ள நாணய மாற்று வீதங்கள் மற்றும் சாதகமான




தேசிய பொருளாதார சூழ்நிலைகள் மூலம் பெறப்படும் அனைத்து நன்மைகளும் நுகர்வோருக்கு வழங்கப்படுவதை சிங்கர் உறுதி செய்கிறது.

மேலும், புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட Vostro மற்றும் Inspiron தயாரிப்பு வரிசைகள் மேம்படுத்தப்பட்ட தொழில்நுட்ப விபரக்குறிப்புகளுடன் வெளி வருகின்றன. இந்த தயாரிப்பு வடிவங்கள் Intel i3, i5 மற்றும் i7 செயலிகளால் இயக்கப்படும் தயாரிப்பு வகைகளைக் கொண் டுள்ளதுடன் இது முந்தைய வடிவங்களுடன் ஒப்பிடும்போது செயல்திறனில் குறிப்பிடத்தக்க மேம்பாட்டை அளிக்கின்றன. பயனர்கள் அன்றாடப் பணிகளில் ஈடுபட்டிருந்தாலும் அல்லது மல்டிமீடியா எடிட்டிங் அல்லது கேமிங் போன்ற அதிக சிரமமான செயல்களில் ஈடுபட்டிருந்தாலும் பயனர்கள் மிகவும் திறமையான மற்றும் சக்திவாய்ந்த கணினி அனுபவத்தை அனுபவிக்க முடியும் என்பதை இது உறுதி செய்கிறது.

ஒட்டுமொத்தமாக சிங்கரின் சட்டதிட்டங்களுக்கான அர்ப்பணிப்பு, சாதகமான நாணய மாற்று வீதங்களின் அனுகூலம் மற்றும் உயர்-செயல்திறன் பாகங்களை உள்ளிணைத்தல் ஆகியவை வாடிக்கையாளர்களுக்கு ஒரு வசீகரிக்கும் சலுகையை ஏற்படுத்தியுள்ளன. சிங்கர் மூலம் கிடைக்கும் சமீபத்திய Dell சாதனங் களில் நன்மதிப்புடைய விநியோக செயல் முறை கட்டுப்படியான விலை மற்றும் சிறந்த செயல்திறன் ஆகியவற்றின் பலன் களை பயனர்கள் இப்போது அனுபவிக்க முடியும்.

புதிய Dell சாதனங்களை சிங்கரின் இணையவழி விற்பனை மார்க்கத்தின் மூல மாகவோ அல்லது நாடு முழுவதும் எந்த இடத்திலும் அமைந்துள்ள சிங்கர் அங்கீகரிக் கப்பட்ட முகவர் விற்பனை மையங்கள் மூல மாகவோ பெற்றுக் கொள்ளலாம். மேல திக தகவல் விபரங்களை அறிந்து கொள்ள https://www.singersl.com/ என்ற இணையதளத்தை நாடவும்.

தமிழன் வணிக உலகம்
Thamilan Business World
www.thamilan.lk thamilaneditor@gmail.com

# சுவ அரண: இலங்கையின் முதலாவது குழந்தைநல நோய் அறிகுறி சிகிச்சை நிலையம் மஹரகமவில் அங்குரார்ப்பணம்



இலங்கையின் முதலாவது குழந்தைநல நோய் அறிகுறி சிகிச்சை நிலையமான சுவ அரண புற்றுநோயுடன் கூடிய குழந்தை நோயாளிகளுக்காக கதவுகளை அகலத் திறக்கிறது. இந்த முன்னோடித் திட்டம் சுகமளிப்பதற்கான ஸ்தலமாக இருக்க வேண்டுமென்ற நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்டதாகும். இது இலங்கையில் புற்றுநோயுடன் கூடிய குழந்தை நோயாளிகளுக்கு பிள்ளைகளுக்கு உடல்ரீதியான, உணர்வுரீதியான, உளவியல்ரீதியான சிகிச்சைகளை ஊக்குவிக்கும் வகையில் வடிவமைக்கப்பட்டு உதவியுடனான பராமரிப்புச் சூழலை முழுமையாகக் கொண்டு வருவதற்குரிய குழந்தைநல நோய் அறிகுறி சிகிச்சை இடப்பரப்பிற்குரிய தேவையைப் பூர்த்தி செய்கிறது.

சுவ அரணவின் வெளிப்புற உட்புற கட்டடக் கலை வடிவமைப்பு பாரம்பரியங்களைத் தாண்டிச் சென்று சுகாதார பராமரிப்பு தொழில்துறை நிபுணர்கள், சிறுவர் நல நிபுணர்கள், குழந்தைநல நிபுணர்கள் ஆகியோரின் ஒத்துழைப்புடன் செயற்றிறனையும் செயற்பாட்டு ஆற்றலையும் எல்லாவற்றிற்கும் மேலாக குணப்படுத்தலையும் மேம்படுத்தும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. இந்த நவீன வசதிகளைக் கொண்ட கட்டடமானது கண்ணுக்கு குளிர்ச்சியான நிறங்களையும் இயற்கையைப் பிரதிபலிக்கும் அம்சங்களையும் ஒன்றுடனொன்று தொடர்படக்கூடிய இடப்பரப்புகளையும் ஒவ்வொருவருக்கும் தனிப்பட்ட உணர்வைத் தரும் ஸ்பரிசங்களையும் கொண்டதாக மிகவும் சவாலான காலகட்டத்தில் குடும்பத்தவர்களுடன் ஒன்றாக பொழுதைக் கழிக்கக்கூடியதாக பாதுகாப்பிற்கும் சுகாதாரத்திற்கும் அந்தரங்கத்திற்கும் முன்னுரிமை அளிக்கக்கூடிய வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

சுவ அரணவில் வலி மற்றும் நோய் அறிகுறி முகாமைத்துவம் சமூக-உளவியல் உதவிகள், கலைகள் மற்றும் இசை மூலமான சிகிச்சைகள்,வாழ்க்கையின் இறுதிக்கட்ட மற்றும் ஆறுதல் உதவிகள் உள்ளடங்கிய நவீன தொழில்நுட்பமும் சமகாலத்திற்கேற்ற பராமரிப்பு சேவைகளும் உள்ளதுடன் இது பிள்ளைகளுக்கும் குடும்பத்தவர்களுக்கும் சிறந்த புகலிடமாக வடிவமைக்கப்பட்டுள்ளது. இந்த ஆறு மாடிக் கட்டடத்தில் நோயாளிகளுக்கு



நான்கு மாடிகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இவற்றில் குடும்பங்களுக்கான 32 அறைகள் உள்ளன. இது தவிர, மேல் மாடி பூங்கா, கீழ்மாடி உணவு அறை,பிரத்தியேக சமையலறை, பொழுதுபோக்கு அம்சங்கள் போன்றவையும் இருக்கின்றன.

இலங்கையில் சுமார் ஆயிரம் பிள்ளைகளை புற்றுநோய் பீடித்துள்ளதாகக் கண்டறியப்படும் நிலையில், இந்தப் பிள்ளைகளில் 10 பேரை எடுத்துக் கொண்டால் 7 பேர் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். பொருளாதார வசதியீனங்கள் காரணமாக பெரும்பாலான பிள்ளைகளைப் பொறுத்தவரையில் மருத்துவ, போக்குவரத்து, தங்குமிட செலவினங்கள் கட்டுப்படியாவது கிடையாது. இத்தகைய பிள்ளைகளுக்கு முற்றுமுழுதாக இலவசமாக உணர்வுபூர்மாகவும் ஆதரவாகவும் உதவி பெறக்கூடிய வதிவிட வசதியை சுவ அரண உருவாக்கிக் கொடுக்கிறது.

தமது 40 வயதில் புற்றுநோயால் இறந்த இந்திரா ஜயசூரியவின் மறைவையடுத்து உருவாக்கப்பட்ட இந்திரா புற்றுநோய் நிதியமானது,வட அமெரிக்க மேற்குப் பிராந்திய இலங்கை மருத்துவ சங்கமும் (SLMANA WR)) ஸ்தாபனங்கள், சேவை நிறுவனங்கள், குடும்ப நிதியங்கள் போன்றவற்றின் கூட்டமைப்பும் இணைந்த கூட்டு பங்காளித்துவமாகும். இந்த நோய் குணப்படுத்தல் நிலையத்திற்கு ரொஷான் மஹாநாம நிதியம், லயன்ஸ் கழக சர்வதேச ஸ்தாபனம் (Lions District 306B2), MJF நற்பணி மன்றம், விஜேராம குடும்ப மன்றம், அவுஸ்திரேலியாவின் ப்ரின்ஸ் குழுமம் ஆகியவை நன்கொடை செய்திருக்கின்றன. இவற்றிற்கப்பால் தனிநபர்களும் குடும்பங்களுமாக சேர்ந்து அறைகளுக்கு அனுசரணை வழங்கி விலைமதிக்க முடியாத உதவிகளைச் செய்துள்ளனர். இந்த உதவிகள் சுவ அரண நிலையம் நிலைபேறானதாக முன்னோக்கிச் செல்வதை உறுதி செய்யக்கூடும்.

இந்திரா புற்றுநோய் நிதியத்தின் போஷகராகத் திகழும் பாராளுமன்றத்தின் முன்னாள் சபாநாயகரும், பாராளுமன்ற அங்கத்தவருமான ஸ்ரீலங்காபிமான்ய கரு ஜயசூரிய தமது மகளின் மறைவால் எழுந்த வலியை குடும்பத்துடன் கடந்து வந்தவர். அந்த சமயத்தில் நாம் அனுபவித்த வலியை வேறு பெற்றோர் அனுபவிக்கக்கூடாதென நாம் உறுதிபூண்டோம். கற்பனை செய்ய முடியாத வலியையும் நிச்சயமற்றதான உணர்வையும் பிள்ளைப் பராயம் பறிக்கப்பட்ட நிலையையும் எதிர்கொள்ளும் பிள்ளைகளைப் பராமரிக்க நாம் முழுமையானதொரு அணுகுமுறையைக் கடைப்பிடிக்கும் உண்மையாக சுகப்படுத்துவற்குரிய இடமாக சுவ அருண அமைந்துள்ளது என்று அவர் கூறினார்.



நிலையத்தின் அங்குரார்ப்பண நிகழ்ச்சியில், சுவ அரணவின் தொழில்நுட்ப விடயங்களில் தலைமை தாங்கி வழிநடத்திய வரும், இணை ஸ்தாபகரும், Sequoia Consultants LA நிறுவனத்தின் தவிசாளர் மற்றும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான பட்டய சிவில் பொறியியலாளர் பிரியங்க டி சில்வா உரையாற்றினார். தாம், SLMANA WR தவிசாளரும் அமெரிக்க உள்ளக மருத்துவ குருதியியல் மற்றும் புற்றுநோயியல் சபையின் அங்கத்தவரும் புற்றுநோயியல் பிரிவின் பொறுப்பதிகாரியும் லொஸ் ஏஞ்சலிஸ் புற்றுநோய் வலைப்பின்னலைச் சேர்ந்த Good Samaritan Hospital இன் பங்காளருமான டொக்டர் லசிக்க செனவிரட்னவுடன் இணைந்து இலங்கையில் புற்றுநோயாளிகளுக்காக நோய் அறிகுறி சிகிச்சை வசதியொன்றை உருவாக்கும் நீண்டநாள் தொலைநோக்கைக் கொண்டிருந்ததாக அவர் குறிப்பிட்டார்.

இத்தகைய நிலையத்தை அமைக்கும் யோசனை உருவானபோது, இதற்குரிய முன்மொழிவை SLMANA WR இன் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பித்தவரும் சுவ அரணவின் இணை ஸ்தாபகருமான டொக்டர் செனவிரட்ன உரையாற்றுகையில், நாம் இதனைத் தொடங்கியபோது மின்வெட்டு முதற்கொண்டு பொருளாதார நெருக்கடி வரையில் நிறைய தடைகள் வந்தன. நாம் சளைக்கவில்லை. ஒன்றுபட்டு கனவை நிறைவேற்றிய குழுவின் அங்கத்தவராக இருப்பதையிட்டு நாம் பெருமைப்படுகிறேன் - என்றார்.

**சுவ அரணவைப் பற்றி**

சுவ அரண என்பது புற்றுநோயால் பீடிக்கப்பட்ட பிள்ளைகளுக்கும் அவர்களின் குடும்பத்தவர்களுக்கும் ஒட்டுமொத்தமான சர்வாம்ச பராமரிப்பையும் உதவிகளையும் வழங்குவதில் அர்ப்பணிப்புக் கொண்ட இலங்கையின் முதலாவது குழந்தைநல நோய் அறிகுறி சிகிச்சைப் பராமரிப்பு (Paediatric Palliative Care Centre)) நிலையமாகும். இந்த நிலையமானது வலி முகாமைத்துவம் உணர்வு ரீதியான சேமநலன்கள் குடும்ப-மைய பராமரிப்பு ஆகியவற்றை முன்னுரிமைப்படுத்தி தாம் பெறக்கூடிய கருணையும் உதவிகளும் நன்மதிப்பும் இவர்களுக்கு கிடைப்பதை உறுதிசெய்வதன் மூலம் பிள்ளைகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதை இலக்காகக் கொண்டதாகும்.

# மக்கள் வங்கியின் மாத்தறை பிராந்தியம் உலக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் தினத்தை கொண்டாடியுள்ளது

இலங்கையின் வங்கி மற்றும் நிதிச் சேவைத் துறையில் முன்னோடியான மக்கள் வங்கி, 'Biz Fair 2023' என்ற தலைப்பில் வர்த்தக கண்காட்சியொன்றை ஏற்பாடு செய்து, உலக நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிகள் தினத்தைக் கொண்டாடியுள்ளது. கொழும்பு 02 இல் அமைந்துள்ள, வங்கியின் தலைமைக் காரியாலயத்தின் மூன்றாவது மாடியில் நடைபெற்ற இந்நிகழ்வு மக்கள் வங்கியின் கைத்தொழில் துறை வங்கிச்சேவைப் பிரிவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

கைத்தொழில் துறை வங்கிச்சேவைப் பிரிவானது இலங்கையின் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் துறைக்கு சேவையாற்ற உறுதிபூண்டுள்ளது, வர்த்தக கடன், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில் முயற்சிக் கடன், நுண் கடன், அபிவிருத்தி வங்கிச்சேவை, வர்த்தக மறுமலர்ச்சி மற்றும் செயற்திட்ட கடன் வசதி உட்பட அபிவிருத்தியின் ஆறு துறைகளில் இது கவனம் செலுத்துகிறது.

மேலும், மக்கள் வங்கியின் கிளை வலையமைப்பு நாடளாவிய ரீதியில் 22 தொடர் வர்த்தக கண்காட்சிகளை நடத்தியுள்ளது. வங்கியின் 62 வது ஆண்டு நிறைவைக் கொண்டாடும் வகையில் நுண், சிறிய மற்றும் நடுத்தர அளவிலான



மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ கண்காட்சியைப் பார்வையிடுகிறார்.

தொழில்முயற்சியாளர்களுக்கு உதவுவதற்காக மாத்தறை பிராந்திய தலைமை அலுவலகம் தனது வளாகத்தில் ஒரு நிகழ்வை ஏற்பாடு செய்து வர்த்தக கண்காட்சிகளை ஆரம்பித்திருந்ததுடன், 62 பேருக்கு கடன்களும் வழங்கப்பட்டன.

மக்கள் வங்கியின் கைத்தொழில் துறை வங்கிச்சேவைப் பிரிவு பொருளாதார வீழ்ச்சியால் கடுமையாகப் பாதிக்கப்பட்ட வணிகங்களுக்கு ஆதரவளிப்பதில் முக்கிய பங்காற்றியுள்ளது. மேலும், அதனது 'People's Spark' திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளதுடன், இது சமீபத்திய பட்டதாரிகளுக்கு தொழில் முயற்சிகளைத் தொடரத் தேவையான திறன்கள் மற்றும் வளங்களைச் ஊட்டுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ளது.

மாத்தறை பிராந்திய தலைமை அலுவலகத்தில் மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷவின் தலைமையில்





மக்கள் வங்கியின் தலைவர் சுஜீவ ராஜபக்ஷ சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிக் கடனை வழங்குகிறார்

நடைபெற்ற இந்நிகழ்வில், மக்கள் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர் (கைத்தொழில் துறை வங்கிச் சேவை), விக்கிரம நாராயண, உதவிப் பொது முகாமையாளர்கள் (வழிமுறை முகாமைத்துவம்), நளின் பெரேரா மற்றும் ஐ.கே. இந்திக, பிரதம முகாமையாளர் (அபிவிருத்தி மற்றும் நுண் கடன்), நில்மினி குணவர்தன, மாத்தறை பிராந்திய முகாமையாளர், சமன் ரத்நாயக்க, மேலதிக மாவட்ட செயலாளர் - மாத்தறை, கசுன் வெல்லஹேவ, பிராந்திய கடன் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர், நிஷானி பத்திரன, உதவி பிராந்திய முகாமையாளர்கள், துஷாரி நம்முனிஆராச்சி மற்றும் சுஜித் குமாரசிங்க, கிளை முகாமையாளர்கள், வணிக மேம்பாட்டு அதிகாரிகள், வங்கி ஊழியர்கள் மற்றும் வாடிக்கையாளர்கள் கலந்து சிறப்பித்தனர்.

1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் கீழ் ஸ்தாபிக்கப்பட்ட மக்கள் வங்கியானது, ரூபா 3.0 டிரில்லியனுக்கும் அதிகமான திரட்டிய சொத்துகளுடன் நாட்டின் இரண்டாவது பெரிய நிதிச் சேவை வழங்குனராகத் திகழ்ந்து வருகின்றது. தற்போது, வங்கி நாடு முழுவதும் 745 கிளைகள் மற்றும் சேவை மையங்களைக் கொண்டுள்ளதுடன் மற்றும் 14.7 மில்லியன் வாடிக்கையாளர்களையும் கொண்டுள்ளது.

# இலங்கையில் தாதியர் கல்வியை மேம்படுத்துவதில் முன்னணி வகிக்கும் ICBT உடன் கைகோர்க்கும் நவலோக குழுமம்



இலங்கையின் முன்னணி தனியார் சுகாதார சேவை வழங்குநரான நவலோக மருத்துவமனை குழுமம், மேம்பட்ட கல்வி வாய்ப்புகளுடன் தாதியர் நிபுணர்களை மேம்படுத்துவதற்காக ICBT யுடன் கைகோர்த்துள்ளது. இந்த இரண்டு நிறுவனங்களும் கடந்த மே 11ஆம் திகதி அன்று ICBT மேற்படிப்பு கல்வியகத்தின் தலைவர் மற்றும் பிரதி பொது முகாமையாளர் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் (MoU) ஒன்றில் கைச்சாத்திட்டனர்.

இந்தக் கூட்டாண்மை மூலம் நவலோக மருத்துவமனை செவிலியர்கள் ஐக்கிய இராச்சியத்தின் புகழ்பெற்ற சந்தர்லேண்ட் பல்கலைக்கழகம் வழங்கும் B'Sc (Hon.) பட்டப்படிப்பை ஆரம்பிக்க வாய்ப்பளிக்கப்படுவார்கள். நவலோக ஹொஸ்பிடல் ஸ்கூல் ஆஃப் நர்சிங்கில் மூன்றாண்டு ஜெனரல் நர்சிங் டிப்ளோமாவை வெற்றிகரமாக முடித்த தாதியர்களுக்கு மட்டுமே இந்த வாய்ப்பு கிடைக்கும். மேலும் பாடக் கட்டணத்தில் சிறப்பு தள்ளுபடியும் அவர்களுக்கு வழங்கப்படும்.

மேலும் நவலோக மருத்துவமனை மற்றும் ICBTமேற்படிப்பு கல்வியகத்திற்கும் இடையிலான ஒத்துழைப்பில் உயிரியல் மருத்துவப் பொறியியலில் மேம்பட்ட டிப்ளோமா திட்டமும் அடங்கும். ICBT மேற்படிப்பு கல்வியகத்தில் இந்த நிகழ்ச்சித்திட்டத்தை நிறைவு செய்தவுடன் கொழும்பு நவலோக மருத்துவமனையில் மூன்று மாத உயிரியல் மருத்துவ தொழில்நுட்ப நிபுணத்துவ பயிற்சிபெற மாணவர்களுக்கு ஒரு தனித்துவமான வாய்ப்பு கிடைக்கும். இந்தப் பயிற்சியானது உயிரியல் மருத்துவ உபகரணங்களை நிறுவுதல் மற்றும் பழுதுபார்த்தல் மற்றும் அளவீடு செய்தல் ஆகியவற்றில் மாணவர்களுக்கு அனுபவத்தை வழங்கும். மேலும் அவர்களின் திறன்களை மேலும் மேம்படுத்தி உயிரியல் மருத்துவ பொறியியல் துறையில் தொழில் வாய்ப்புகளைப் பெற அவர்களை வழிநடத்தும்.

இந்தப் புதிய புரிந்துணர்வு ஒத்துழைப்பு குறித்து கருத்து தெரிவித்த நவலோக மருத்துவமனையின் செய்தித் தொடர்பாளர், "எங்கள் தாதியர்கள் எங்கள் சுகாதார அமைப்பின் முதுகெலும்பு மற்றும் அவர்களின் தொழில்முறை மேம்பாட்டில் நாங்கள் தொடர்ந்து முதலீடு செய்கிறோம். அதை நோக்கிய ஒரு படியாக மேற்படிப்பு கல்வியகம் மற்றும் சந்தர்லேண்ட் பல்கலைக்கழகத்தில் ICBTஉடன் கைகோர்ப்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எங்கள் தாதியர்களுக்கு புதிய கல்வி வாய்ப்புகளை உருவாக்கும் அதேவேளை,அனைத்து நோயாளிகளுக்கும் விதிவிலக்கான நோயாளி பராமரிப்பு அனுபவத்தை வழங்குவதே எங்கள் நோக்கமாகும்" - எனத் தெரிவித்தார்.

இதேபோல் ICBT மேற்கடிப்பு கல்வியகத்தின் செய்தித் தொடர்பாளர் கருத்து தெரிவிக்கையில்,

"இந்த முயற்சியில் நவலோக மருத்துவமனையுடன் கைகோர்ப்பதில் நாங்கள் மிகவும் பெருமையடைகிறோம். கல்வியில் எங்களின் நிபுணத்துவத்தையும் சுகாதாரப் பாதுகாப்புக்கான அவர்களின் அர்ப்பணிப்பையும் இணைத்து, திறமையான தாதிப் பணியாளர்களை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளோம். அதற்கு எங்களால் முடிந்ததைச் செய்வோம்" - எனத் தெரிவித்தார்.

நவலோக மருத்துவமனை குழுமத்தினால் 1986 ஆம் ஆண்டு நிறுவப்பட்ட தாதியர் பாடசாலையானது இலங்கையில் தனியார் துறை தாதியர் கல்வியில் முன்னோடியாக இருந்து வருகின்றது. பல ஆண்டுகளாக 3,000 க்கும் மேற்பட்ட மாணவர்கள் இந்தத் தாதியர் பள்ளியில் பட்டம் பெற்றுள்ளனர் மற்றும் இப்போது உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பணிபுரியும் தகுதி வாய்ந்த தாதியர்களாக மாறியுள்ளனர். இன்று நவலோக்க தாதியர் பாடசாலையானது நாட்டில் மிக உயர்ந்த தரவரிசையில் உள்ள நிறுவனம் என்ற பெருமையையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மூன்றாண்டு தாதியர் பாடநெறியை வெற்றிகரமாக முடிக்கும் மாணவர்களுக்கு இலங்கையில் இருந்து தாதியர் சான்றிதழ் மற்றும் பட்டம் வழங்கப்படுகிறது. அவர்கள் நர்சிங் கவுன்சிலில் பதிவு செய்யவும் பதிவு செய்யப்பட்ட தாதியராக பயிற்சிசெய்து உரிமம் பெறவும் தகுதியுடையவர்களாகக் கருதப்படுவர். டிப்ளோமோ படித்தவர்களுக்கு மட்டுமே இந்தச் சலுகை. மேலும், டிப்ளோமா பெற்றவர்களுக்கு அரச சுகாதார நிறுவனங்களில் பணிபுரியும் வாய்ப்புள்ளது. அவர்களுடைய தொழில் ரீதியான எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றிக் கொள்ள முடியும் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# யாழ். பல்கலையில் 2ஆவது நாள் பட்டமளிப்பு விழா












யாழ்ப்பாணப் பல்கலைக்கழக 37ஆவது பொதுப் பட்டமளிப்பு விழாவின் இரண்டாம் நாள் அமர்வுகள் நேற்று ஆரம்பமாகின.

இதன்போது உயர் பட்டப் படிப்புகள் பீடம், விஞ்ஞான பீடம், கலைப்பீடம் மற்றும் வவுனியா வளாகத்தை (தற்போதைய வவுனியா பல்கலைக்கழகம்) சேர்ந்த வியாபாரக் கற்கைகள் பீடம், பிரயோக விஞ்ஞான பீடம் மற்றும் தொழில்நுட்பக் கற்கைகள் பீடங்களைச் சேர்ந்த பட்டதாரிகளுக்கும் யாழ். பல்கலைக்கழக சித்த மருத்துவ அலகைச் சேர்ந்த சித்தவைத்திய சத்திர சிகிச்சை பிரிவு பட்டதாரிகளுக்கும் பட்டங்கள் வழங்கப்பட்டன.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## நாணய மாற்று வீதம் (20.07.2023)

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 215.1979 | 227.2526 |
| கனேடியன் டொலர் | 239.6736 | 252.7552 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 43.4039 | 46.5832 |
| யூரோ | 354.4659 | 372.1704 |
| ஜப்பான் யென் | 2.2673 | 2.3820 |
| சிங்கப்பூர் டொலர் | 238.4693 | 251.0369 |
| ஸ்ரேலிங் பவுன் | 409.4020 | 429.0139 |
| சுவிஸ் பிராங்ஸ் | 366.9868 | 388.6323 |
| ஐ.அ. டொலர் | 316.3078 | 330.2942 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 860.1024 |
| குவைட் | குவைட் தினார் | 1,057.6359 |
| ஓமான் | ஓமான் றியால் | 842.1969 |
| கட்டார் | கட்டார் றியால் | 88.9685 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 86.4955 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 88.2769 |

# வடமாகாண தனியார் வைத்தியசாலை கழிவுகள்

## கொழும்பில் எரியூட்டப்படுவதாக சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் தகவல்

வடமாகாணத்தில் உள்ள தனியார் வைத்தியசாலைக் கழிவுகளை கொழும்புக்கு அனுப்பி எரியூட்டுகின்றனர் என வடமாகாண சுகாதார சேவைகள் பதில் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இவ்விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.போதனா வைத்தியசாலை மருத்துவ கழிவுகளை எரியூட்டுவதற்கென கோம்பயன் மணல் மயானத்தில் எரியூட்டியை நிறுவுவதற்கு, யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

மயானத்தில் எப்பகுதியில் அதனை அமைப்பது என்பது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது. விரைவில் இடத்தை அடையாளப்படுத்தி, பணிகளை ஆரம்பிக்கவுள்ளோம்.

தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையில் உள்ள எரியூட்டி திருத்தப்பட்டு பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அங்கு தான் அரச வைத்தியசாலை மருத்துவ கழிவுகள் எரியூட்டப்படும்.

தனியார் வைத்தியசாலைகள் மருத்துவ கழிவுகளை கொழும்புக்கு எடுத்துச் சென்றே எரியூட்டுகின்றன எனவும் தெரிவித்தார்.

# வாகன விபத்தில் இருவர் படுகாயம்

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, மீசாலை பகுதியில் நேற்று அதிகாலை இடம்பெற்ற வாகன விபத்தில் முதியவர்கள் இருவர் படுகாயமடைந்து யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது.

மீசாலை, ஐயா கடை சந்தி பகுதியில் இந்த விபத்து நேற்று அதிகாலை 05 மணியளவில் இடம்பெற்றதாக கூறப்படுகின்றது.

சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு மருத்துவ சிகிச்சைக்காகச் சென்ற மூதாட்டியும் கூலி வேலைக்குச் சென்ற மற்றொரு முதியவரும் வீதியோரமாக பயணித்துக் கொண்டிருந்தபோது, கார் ஒன்று அவர்களை மோதியுள்ளது.

பொலன்னறுவையைச் சேர்ந்த குடும்பத்தினர் பயணித்த காரே இதன்போது விபத்துக்குள்ளாகியுள்ளது. குறித்த குடும்பத்தினர் தமது மகளை யாழ்ப்பாண பல்கலைக்கழகத்துக்கு அழைத்துச் சென்றபோதே விபத்தில் சிக்கியுள்ளனர். கார் சாரதிக்கு ஏற்பட்ட தூக்கமே விபத்துக்குக் காரணமென கூறப்படுகின்றது.

# சீமைக்கருவேல மரங்களை அழிப்பதற்கு திட்டம்

## ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் தெரிவிப்பு

பனைமர விருத்திக்கு பாதிப்பாக அமையும் சீமைக்கருவேல மரங்களை அழிப்பதற்கு அவற்றின் அடர்த்தி மற்றும் பரப்பளவு என்பன குறித்த தரவுகள் திரட்டப்படுவதாக ஊர்காவற்றுறைப் பிரதேச செயலர் தெரிவித்துள்ளார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில், சீமைக்கருவேல மரங்கள் பனைமரங்களுக்குப் பாதிப்பாக அமைகின்றன. அவற்றை அழித்து பனை வளத்தை அபிவிருத்தி செய்வதற்கு ஊர்காவற்றுறை பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. தற்போது சீமைக் கருவேல மரங்கள் குறித்த தரவுகள் திரட்டப்படுகின்றன.

பனைமரங்கள் தனியார் காணிகளில் உள்ளன. பெரும்பாலான காணி உரிமையாளர்கள் வெளிநாடுகளில் வசிப்பதால் குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன. வெகுவிரைவில் இதற்கான அனைத்துப் பணிகளும் ஆரம்பிக்கப்படும் என்றும் குறிப்பிட்டார்.









உடப்பு ஸ்ரீ ருக்மணி சத்தியபாமா சமேத ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமாள் திரௌபதியம்மன் ஆலயத்தின் வருடாந்த ஆடித்திருவிழா கொடியேற்றம் நேற்று வியாழக்கிழமை (20) இடம்பெற்றது. இதன்போது, அனுமான் வரையப்பட்ட கொடிச்சீலை ஆலய உள்வீதிவலம் வந்ததுடன் பக்தர்களினால் மஞ்சள் நீர் தேய்த்து, விசேட பூஜை நடத்தப்பட்டு கொடியேற்றப்பட்டது. **படப்பிடிப்பு:** உடப்பு நிருபர்

# களுத்துறையில் ஐ.தே.க. புனரமைப்புக் கூட்டம்





பேருவளை நிருபர்

இந்த நாட்டில் மிகவும் பழைமை வாய்ந்த கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியை மீண்டும் கட்டியெழுப்பும் நோக்கில் நாடளாவிய ரீதியில் கட்சி புனரமைப்புக் கூட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

இந்த வேலைத்திட்டத்தின் கீழ் களுத்துறை தேர்தல் தொகுதிக்கான புனரமைப்புக் கூட்டம் களுத்துறை நகர மண்டபத்தில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும் களுத்துறை தொகுதி ஐ.தே.கட்சி பிரதம அமைப்பாளருமான லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன தலைமையில் இடம்பெற்றது.

ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய அமைப்பாளரும் ஜனாதிபதி செயலக பிரதானியும் முன்னாள் அமைச்சருமான சாகல ரத்நாயக்க, முன்னாள் கல்வி, கலாசார அமைச்சர் கலாநிதி கருணாசேன கொடிதுவக்கு, தேசிய இளைஞர் முன்னணி தலைவர் சிஹார ஹேரத், ஐ.தே.கட்சி அகலவத்தை தொகுதி அமைப்பாளர் ரோஹன கலபட, தொகுதி அமைப்பாளர்கள், இளைஞர், மாதர் பிரிவுகளின் முக்கியஸ்தர்கள் மற்றும் ஆதரவாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.





இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மாதாந்தம் நடத்தும் "நான் மறுபடியும் வந்து விட்டேன்" எனும் இசை நிகழ்ச்சி நேற்றுமுன்தினம் புதன்கிழமை(19) மாலை ஆனந்த சமரகோன் கலையகத்தில் நடைபெற்றது. இதன்போது விசேட அதிதியாகக் கலந்துகொண்ட சிரேஷ்ட பாடகர் ரீ.எம்.ஜயரத்னவை பிரதம அதிதி ஊடகத்துறை அமைச்சின் மேலதிக செயலாளர் ஈ.எம்.எஸ்.பி. ஜயசுந்தர, கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளர் நாயகம் நளின் நிஸ்ஸங்க, ஆலோசகர் புரவலர் ஹாசிம் உமர் ஆகியோர் இணைந்து விருது வழங்கி கௌரவித்தனர். இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

# மனித புதைகுழி அகழ்வுப் பணி

# பாதீட்டை சமர்ப்பிக்குமாறு முல்லை.நீதிமன்றம் உத்தரவு

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வில் தொல்பொருள் திணைக்களம் ஈடுபடும்போது அதற்கான பாதீட்டை சமர்ப்பிக்குமாறு முல்லைத்தீவு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முல்லைத்தீவு நீதிமன்றத்தில் நீதிபதி ரி. பிரதீபன் முன்னிலையில் நேற்று (20) இது தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்போது சட்டவைத்திய அதிகாரி வாசுதேவவினால் புதைகுழி அகழ்வுக்கான செலவு குறித்த உத்தேச பாதீடு சமர்ப்பிக்கப்பட்டது.

அகழ்வுப் பணியை மேற்கொள்ள யாழ். பல்கலைக்கழகத்தின் தொல்பொருள் துறையின் முன்னாள் தலைவர் பேராசிரியர் புஷ்பரட்னத்துடன், ராஜ் சோமுதேவா ஆகியோரை நீதிமன்றம் அழைத்துள்ளது.



இதேவேளை, தொல்பொருள் திணைக்களம் நேற்று நீதிமன்றில் பிரசன்னமாகியிருக்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# இந்தியாவை உலுக்கிய மணிப்பூர் கொடூரம்: ஸ்தம்பித்தது டில்லி; முடங்கியது பாராளுமன்று

இனக் கலவரத்தால் பாதிக்கப்பட்டுள்ள இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான மணிப்பூரில், குகி பழங்குடியினத்தைச் சேர்ந்த இரண்டு பெண்களை, மைதேயி சமூகத்தைச் சேர்ந்த கும்பலொன்று நிர்வாணப்படுத்தி வீதியில் ஊர்வலமாக அழைத்துச் சென்ற கொடூரமான வீடியோ சமூக வலைதளங்களில் வெளியாகி பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இச்சம்பவத்துக்கு பல்வேறு அரசியல் கட்சித் தலைவர்களும் தங்களுடைய கடுமையான கண்டனத்தை தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், "மணிப்பூரின் மகள்களுக்கு நடந்தது மன்னிக்க முடியாதது. எனது இதயம் வலியால் நிரம்பியுள்ளது. இந்தச் சம்பவம் எந்த ஒரு நாகரிக சமூகத்துக்கான அவமானம்" என இந்திய பிரதமர் நரேந்திர மோடி வேதனை தெரிவித்துள்ளார்.

மேலும், மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதிக்கக்கோரி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் நேற்று பாராளுமன்றின் இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன.

மணிப்பூர் விவகாரம் குறித்து முறைப்பாடளிப்பதற்காக குடியரசுத் தலைவர் திரௌபதி முர்முவை எதிர்க்கட்சி எம்.பி.க்கள் நேரில் சந்திக்கவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

**போராட்டத்தால் முடங்கிய டில்லி**

மணிப்பூரில் நடந்துவரும் கொடூரத்தை கண்டித்து டில்லியில் காங்கிரஸ் கட்சியினர் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். டில்லியில் காங்கிரஸ் கட்சியின் மகளிர் அணி மற்றும் இளைஞர்கள் அணி, மாணவர்கள் அணி சார்பாகவும் நேற்று பல்வேறு போராட்டங்கள் முன்னெடுக்கட்டன.

இதேவேளை, கலவரம் நடந்து வரும் மணிப்பூரில் நேரில் ஆய்வு செய்து நிலவரத்தை அறிய இந்திய கூட்டணி குழு முடிவு செய்துள்ளது.

**முடங்கிய பாராளுமன்றம்**

மணிப்பூர் விவகாரம் குறித்து விவாதிக்க கோரி எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டதால் நேற்று (20) பாராளுமன்றின் இரு அவைகளும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டது.

பாராளுமன்ற குளிர்கால கூட்டத்தொடரின் முதல் நாளான நேற்று மணிப்பூர் விவகாரம் குறித்து பிரதமர் நரேந்திர மோடி விளக்கமளிக்க வேண்டும் என்று எதிர்க்கட்சிகள் கோரிக்கை வைத்தன.



உடனடியாக விவாதத்துக்கு எடுக்க முடியாது என்று அவைத் தலைவர்கள் தெரிவித்த நிலையில், இரு அவைகளில் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன.

இதனால் இன்று(21) காலை 11 மணிவரை இரு அவைகளையும் ஒத்திவைப்பதாக நேற்று (20) தலைவர்கள் தெரிவித்தனர்.



இதற்கிடையே இக்கொடூர சம்பவம் குறித்து மோடி மேலும் தெரிவித்துள்ளதாவது,

''மணிப்பூரில் நடந்துள்ள சம்பவம் நாகரிக சமூகத்துக்கான அவமானம். இதற்காக நாடு வெட்கப்படுகிறது. பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மீது நடவடிக்கை எடுக்க கடுமையான சட்டங்களை இயற்றும்படி நான் அனைத்து மாநில முதலமைச்சர்களுக்கும் வேண்டுகோள் விடுக்கிறேன்.

இந்தச் சம்பவம் ராஜஸ்தான், சத்தீஸ்கர், மணிப்பூர் எங்கு வேண்டுமானாலும் நடந்திருக்கலாம். குற்றவாளிகள் நாட்டின் எந்தப் பகுதியிலிருந்தாலும் தப்பக் கூடாது. நான் நாட்டுக்கு உறுதியளிக்கிறேன். சட்டம் அதன் முழு பலத்துடன் தனது கடமையைச் செய்யும். மணிப்பூரின் மகள்களுக்கு நடந்தது மன்னிக்க முடியாதது'' - என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

இதுகுறித்து தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், ''வெறுப்பும் வன்மமும் மனித குலத்தின் ஆன்மாவை வேரோடு பிடுங்கும் வகையில் கொடூரம் அரங்கேறியுள்ளது'' எனத் தெரிவித்துள்ளார்.

**அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால் உச்சநீதிமன்றம் தலையிடும்**

மணிப்பூர் விவகாரத்தில் அரசு நடவடிக்கை எடுக்க தவறினால் உச்சநீதிமன்றம் தலையிடும் என்று தலைமை நீதிபதி டி.வை.சந்திரசூட் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், மணிப்பூரில் இரண்டு பெண்களுக்கு நடந்த கொடுமை மிகவும் கவலையளிக்கின்றது. இந்த சம்பவத்தில் அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையென்றால் உச்சநீதிமன்றம் தலையிடும்.

கலவரப் பகுதிகளில் பெண்கள் ஒரு கருவியாக பயன்படுத்துவது அரசியலமைப்பு துஷ்பிரயோகத்தின் உச்சம். அரசியலமைப்பு ஜனநாயகத்தில் இது ஏற்றுக்கொள்ள முடியாதது.

மத்திய அரசு மற்றும் மணிப்பூர் அரசுகள் மிக குறுகிய காலத்தில் நடவடிக்கை எடுத்து நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்'' - என உத்தரவிட்டுள்ளார்.

இந்நிலையில், கவிஞர் வைரமுத்து தமது ட்விட்டர் பக்கத்தில்,

***தெய்வம் என்பார் பெண்களை;***
***தேவி என்பார் பூமியை;***
***கடவுளின் பாகம் என்பார்***
***பார்வதியை***

***நடைமுறையில்***
***உடல் உரிப்பு செய்து***
***ஊர்வலம் விடுவார்***

***நம் தலையில் அல்ல***
***காட்டுமிராண்டிகளின்***
***தலையில் அடிக்க வேண்டும்***

***அநியாயங்களை நிறுத்துங்கள்;***
***அதிகாரம் உள்ளவர்கள்***
***களமிறங்குங்கள்***

***இன்னும் மணிப்பூர்***
***இந்தியாவில்தான் இருக்கிறது***
***- என பதிவிட்டுள்ளார்.***

**முக்கிய குற்றவாளி கைது**

இந்நிலையில், மணிப்பூரில் குகி பழங்குடி பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் சென்றவர்களில் முக்கிய நபர் கைது செய்யப்பட்டிருப்பதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

இந்நிலையில், வீடியோ ஆதாரத்தின் அடிப்படையில் பெண்களை நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்து சென்றவர்களில் முக்கிய நபர் கைது செய்யப்பட்டுள்ளார். ஹிராதாஸ் (வயது 32) என்ற அந்த நபர் நேற்று (20) வியாழக்கிழமை தௌபால் மாவட்டத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். மேலும், கைது செய்யப்பட்டவர் மீது கடத்தல், பாலியல் வன்கொடுமை, கொலை உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் வீடியோவிலுள்ள பிற நபர்களைப் பிடிக்க 12 குழு அமைக்கப்பட்டுள்ளதாகவும் மணிப்பூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

**வன்முறையின் பின்னணி**

இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் ஒன்றான மணிப்பூரில் பைரன் சிங் தலைமையிலான பா.ஜ.க. கூட்டணி ஆட்சி நடைபெற்று வருகிறது. இந்த மாநிலத்தில் பெரும்பான்மை சமூகமாகவுள்ள மைத்தேயி சமூகத்தினர் தங்களைப் பழங்குடியினர் பட்டியலில் சேர்த்து சலுகைகள் வழங்கவேண்டும் என்று தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றனர்.

இதையடுத்து, மைத்தேயி சமூகத்தைப் பழங்குடியினப் பட்டியலில் சேர்ப்பதற்கு எதிர்ப்பு தெரிவித்து கடந்த மே 03ஆம் திகதி மணிப்பூரில் பாதயாத்திரை மேற்கொண்ட போது, இருதரப்புக்கும் இடையே மோதல் வெடித்ததில் இருதரப்புக்கும் இடையேயான கலவரமாக மாறியது. இதனால் இரண்டு சமூகங்களைச் சேர்ந்த மக்களின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டன.

குகி மக்கள் மீதான இந்தத் தாக்குதலுக்கு பயந்து பி.பைனோம் கிராமத்தைச் சேர்ந்த 02 ஆண்கள், 03 இளம்பெண்கள் காட்டுக்குள் தப்பிச் சென்றுள்ளனர். பின்னர் அவர்களை நோங்போக் செக்மாய் பொலிஸ் குழு மீட்டு பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செல்லும்போது மைத்தேயி சமூக கும்பலொன்று, அவர்களை கடத்திச் சென்றுள்ளது. இதில் இரு ஆண்களையும் கொலை செய்த அக்கும்பல், மூன்று பெண்களையும் ஆடைகளை களைத்து நிர்வாணப்படுத்தி ஊர்வலமாக அழைத்துச் சென்றிருக்கிறது. இதில் ஒரு பெண் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான வீடியோ தற்போது வெளியாகி இந்தியா முழுவதும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இதையடுத்து, பொலிஸார் கொலை கடத்தல், கூட்டு பாலியல் வன்கொடுமை ஆகிய பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்துள்ளனர். இதில் சம்பந்தப்பட்ட வழக்கில் முக்கிய நபர் ஹேராதாஸ் என்பவரை கைது செய்திருப்பதாக மணிப்பூர் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், முழு இந்தியாவையும் உலுக்கியுள்ள இச்சம்பவம் நடந்து 77 நாட்கள் ஆன பின்னரே வெளியுலகுக்கு தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கது. அரசியல் கட்சியினர், மனித உரிமை ஆர்வலர்கள் என பலரும் இச்சம்பவத்துக்கு கடும் கண்டனங்களைத் தெரிவித்து வருகின்றனர்.

**கலவரத்தில் 142 பேர் உயிரிழப்பு**

மணிப்பூரில் மைதேயி சமூகத்தினருக்கும் குகி சமூகத்தினருக்கும் இடையே சுமார் 02 மாதங்களுக்கும் மேலாக நீடிக்கும் கலவரத்தில் இதுவரை 142 பேர் உயிரிழந்துள்ளதுடன் 500இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். சுமார் 65,000 பேர் வீடுகளை இழந்து அகதிகளாகியுள்ளனர். இதுவரை 5,995 வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

## முதல் டெஸ்ட்: பாகிஸ்தானிடம் வீழ்ந்த இலங்கை

சுற்றுலா பாகிஸ்தான் மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான முதல் டெஸ்ட் போட்டியில் பாகிஸ்தான் அணி 04 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்றது.

இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான இரு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் முதல் டெஸ்ட் போட்டி கடந்த ஞாயிற்றுக்கிழமை காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் ஆரம்பமானது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்று முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி தனஞ்ஜய டி சில்வாவின் சதத்துடன் 312 ஓட்டங்களை குவித்தது.

பதிலுக்கு முதல் இன்னிங்ஸில் ஆடிய பாகிஸ்தான் அணி சவூத் சக்கிலின் இரட்டை



சதத்துடன் 461 ஓட்டங்களை குவித்தது.

இலங்கை அணி இன்னும் 149 ஓட்டங்கள் பின்தங்கிய நிலையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணி தனஞ்ஜய டி சில்வா மற்றும் நிஷான் மதுஷ்க ஆகியோரின் அரைச்சதத்தின் உதவியுடன் 279 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழக்க, பாகிஸ்தான் அணியின் வெற்றியிலக்காக வெறும் 131 ஓட்டங்கள் மாத்திரம் நிர்ணயிக்கப்பட்டது.

குறித்த இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி நேற்று 32.5 ஓவர்களில் 06 விக்கெட்களை மாத்திரம் இழந்த நிலையில் வெற்றியிலக்கை அடைந்தது. போட்டியின் ஆட்டநாயகனாக சவூத் சக்கில் தெரிவானார். இரண்டாவது டெஸ்ட் போட்டி திங்கட்கிழமை கொழும்பு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் நடைபெறுகிறது.

## ஆசியக்கிண்ண கிரிக்கெட் தொடரின் போட்டி அட்டவணை வெளியீடு

இலங்கை மற்றும் பாகிஸ்தானில் நடைபெறவுள்ள 2023ஆம் ஆண்டுக்கான ஆசியக்கிண்ண தொடருக்கான போட்டி அட்டவணை உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி அடுத்த மாதம் 30ஆம் திகதி முதல் செப்டெம்பர் 17ஆம் திகதிவரை ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடராக ஆசியக்கிண்ண தொடர் நடைபெறவுள்ளது.

மொத்தமாக 13 போட்டிகள் ஆசியக்கிண்ணத் தொடரில் நடைபெறவுள்ளதுடன், 09 போட்டிகள் இலங்கையிலும் 04 போட்டிகள் பாகிஸ்தானிலும் நடைபெறவுள்ளன. பாகிஸ்தானின் லாஹூர் மற்றும் முல்தானில் போட்டிகள் நடைபெறவுள்ளதுடன், இலங்கையில் கண்டி - பல்லேகலை மற்றும் கொழும்பு ஆர்.பிரேமதாஸ மைதானங்களில் போட்டிகள் நடைபெறவுள்ளன.

இந்தியா – பாகிஸ்தான் அணிகள் மோதும் போட்டி செப்டெம்பர் 2ஆம் திகதி கண்டி – பல்லேகலை சர்வதேச கிரிக்கெட்




மைதானத்தில் நடைபெறும் என்பது குறிப்பிடத்தக்கது.

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

## அரையிறுதி ஆட்டத்தில் இன்று இலங்கை - பாக். அணிகள் மோதல்

ஆசிய கிரிக்கெட் பேரவையின் ஏற்பாட்டில் இலங்கையில் நடைபெற்றுவரும் வளர்ந்துவரும் அணிகளுக்கான ஆசியக் கிண்ண கிரிக்கெட் தொடரில் இன்று நடைபெறும் முதல் அரையிறுதி ஆட்டத்தில் இலங்கை ஏ - பாகிஸ்தான் ஏ அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்த ஆட்டம் காலை 10.00 மணிக்கு கொழும்பு பி. சரா ஓவல் மைதானத்தில் நடைபெறுகிறது.

இன்று நடைபெறும் மற்றுமொரு இரண்டாவது அரையிறுதி ஆட்டத்தில் பங்களாதேஷ் ஏ - இந்திய ஏ அணிகள் பலப்பரீட்சை நடத்துகின்றன. இந்த ஆட்டம் பகல் 2.00 மணிக்கு கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் நடைபெறுகிறது. இறுதிப்போட்டி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.



**தென்கிழக்கு பல்கலைக்கழக பீடங்களுக்கிடையிலான பெருவிளையாட்டு நிகழ்வுகளில் இருபாலாருக்குமான கூடைப்பந்தாட்ட போட்டியில் ஆண்கள் பிரிவில் பிரயோக விஞ்ஞான பீடம் சம்பியன்களாகவும் வர்த்தக முகாமைத்துவ பீடம் இரண்டாம் இடத்தையும் பெண்கள் பிரிவில் வர்த்தக முகாமைத்துவ பீடம் சம்பியன்களாகவும் பொறியியல் பீடம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன. உடற்கல்வித்துறை திணைக்கள பொறுப்பதிகாரி முஹம்மது இக்பாலின் மேற்பார்வையில் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தன.**

**படம்:** நிந்தவூர் செய்தியாளர்



**ஏயாடல் நிறுவனத்தின் கிழக்கு மாகாண முகாமையாளர்களினால் ஒழுங்கு செய்யப்பட்ட விற்பனை பிரதிநிதிகளுக்கிடையிலான சினேக பூர்வ கிரிக்கெட் சுற்றுப்போட்டி அண்மையில் மட்டக்களப்பு பாசிக்குடாவில் நடைபெற்றது. முதலாமிடத்தைப் பெற்ற செங்கலடி குளோபல் மார்கெட்டிங் அனியினருக்கும் இரண்டாம் இடத்தைப் பெற்ற அம்பாறை மக்பூல் முகவர் நிறுவனத்துக்கும் கிழக்கு மாகாண விற்பனை முகாமையாளரினால் வெற்றிக்கேடயங்கள் வழங்கப்பட்டன.**

**படம்:** கோணவத்தை செய்தியாளர்

## வவுனியா மண்ணின் சாதனை மாணவி கோசியாவுக்கு அரச அதிபர் பாராட்டு



சிவகுமார்

கனிஷ்ட பொதுநலவாய போட்டித் தொடரில் பளு தூக்கும் போட்டிகளில் மூன்றாமிடத்தை பெற்று வெண்கலப்பதக்கத்தை சுவீகரித்துக் கொண்ட மாணவி கோசியா திருமேனனுக்கு அரசாங்க அதிபர் தனது பாராட்டினை தெரிவித்தமையுடன் சிறு அன்பளிப்பும் வழங்கி வைத்தார்.

34 வீர வீராங்கனைகள் பங்குபற்றிய கனிஷ்ட பொதுநலவாய போட்டித் தொடரில் பளு தூக்கும் விளையாட்டுப் போட்டியில் இலங்கை 18 பதக்கங்களை வெற்றி பெற்றுள்ளது. இவற்றில் இரண்டு வெண்கலப் பதக்கங்கள் வவுனியா மற்றும் யாழ்ப்பாணம் வீராங்கனைகளினால் வெல்லப்பட்டுள்ளன.

வவுனியா மாவட்டத்தினை சேர்ந்த 14 வயதான கோசியா திருமேனன், 16 வயதுக்குட்பட்ட 40 கிலோ எடை பிரிவில் 92 கிலோ கிராம் எடையை தூக்கியதன் மூலம் 3ஆம் இடத்தை பெற்று வெண்கலப்பதக்கத்தை தனதாக்கிக்கொண்டார்.

குறித்த மாணவியை வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் சரத்சந்திர மாவட்ட செயலகத்துக்கு வரவழைத்து தனது பாராட்டினை தெரிவித்து, சிறு அன்பளிப்பும் வழங்கி வைத்தமையுடன் மாவட்ட செயலக ஏனைய அதிகாரிகளும் தமது வாழ்த்துகளை மாணவிக்கு தெரிவித்திருந்தனர்.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7